கணபதியே அருள்வாய்

# ஒரு வானவில் போலே....

## அத்தியாயம் ஒன்று :

**கைவீசும் தாமரை...**

**கல்யாண தேவதை...**

**பொன் வாழ்வு கண்டாள்...**

**கண்மூடி நின்றாள்...**

**காதல் கொண்டாள்!!!**

Mallika Manivannan

பாடல் ஓடிக் கொண்டிருந்தது எப்.எம் ரேடியோவில்... அது மட்டுமே அவளின் வலி தீர்க்கும் மருந்து... பாடல்கள்.. அந்த இரவின் நிசப்தத்தில் மெதுவாக அவளுக்கு மட்டும் கேட்குமாறு வைத்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

இதில் அவள் பெயர் வருவதால் என்னவோ மனதிற்கு இன்னமும் இதமாக இருந்தது. ஆம்! தாமரை அவளின் பெயர். யோசனைகள் பாட்டை ஒட்டி ஓடிக் கொண்டு இருந்தது.

காதல் கொண்டு விட்டேனா? தெரியவில்லையே? என்னுடைய யௌவனத்தை என்ன முகத்தையும் கூட நின்று பார்க்காத கணவன்.. வேலைகள் சொல்வதற்கு மட்டும் பேசும் கணவன்... குழந்தைகளுக்காக நடந்த திருமணம்.. நானோ சூழ்நிலைக் கைதி.. இப்படி எல்லாமும் இருக்க..

திருமணம் நடந்த பிறகு அவன் முகம் பார்த்து நடக்கக் கற்றுக் கொண்டு விட்டேன் தானே! இதற்கு பெயர் என்ன? காதலா?

ஆனால் அவன் சிறந்த காதலனாமே? எல்லோரும் சொல்கிறார்களே? அவனின் முதல் மனைவியை அப்படி பார்த்துக் கொள்வானாமே... எண்ணங்கள் சுழன்று அடித்தன.

தனிமையில் எப்போதும் அவன் எண்ணங்கள்தான். இதற்கு பெயர் என்ன?

அதற்குள் பாட்டு நின்று ரேடியோ ஜாக்கியின் பேச்சு வர... சத்தம் சற்று அதிகமாக வந்தது. அவசரமாக குறைத்து வைத்தாள். கொஞ்சமும் சத்தம் கேட்டு விட்டாலும் “இதென்ன வீடா இல்லை டீக் கடையா?” என்று மாமியார் சத்தம் போடுவார்.

பாட்டைக் கேட்காவிட்டால் தூக்கம் வந்துவிடும்.. பிறகு கணவன் வண்டி நிறுத்தும் சத்தம் கேட்டு கதவை திறக்க முடியாது. அவன் பெல் அழுத்தினாலும் “கண்ட நேரத்துக்கு வந்து பெல் அடிச்சா எங்க தூக்கம் கெடாதா... அவனுக்கு கதவை திறக்கறது விட்டா உனக்கு என்ன வேலை?” என்று அதற்கும் அவளுக்கு தான் திட்டு விழும்.

நேரத்திற்கு வா என்று அவனிடம் சொல்பவர் யாரும் கிடையாது.

இப்படி அஞ்சி அஞ்சியே தன் வாழ்க்கை ஓடிவிடுமோ? மனது சலிப்பாக உணர்ந்தது.

Mallika Manivannan

திருமணமாகி இந்த வீட்டிற்கு வந்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. இது அன்றாடம் நடப்பது தான்.

குழந்தை அதற்குள் சிணுங்க... உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு அவசரமாக எழுந்து சென்று தட்டிக் கொடுத்தாள்.

ஒன்றரை வயது அஸ்வதி தாமரையின் ஸ்பரிசம் உணர்ந்ததும் உறங்கிவிட.. பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்த எட்டு வயது பிருந்தாவை பார்த்தாள். உறங்கும் போது கூட முகத்தில் ஒரு பிடிவாதம். அழகு குழந்தை மனம் சிலாகித்தது. புத்திசாலிக் குழந்தையும் கூட. ஆனால் தாமரையிடம் பேச மாட்டாள். வேலை சொல்வதற்கு மட்டுமே தாமரையிடம் பேசுவாள். அப்பாவைப் போல?

இவர்கள் இருவரும் படுக்கையில் உறங்க, தனியாக பாயில் உறங்கிக் கொண்டிருந்தாள் நான்கு வயது மித்ரா. தாமரையின் அண்ணன் மகள்... ஆனால் அவள் பிறந்தது முதலே அம்மா அப்பா எல்லாம் தாமரையே, அவளை முன்னிட்டே இந்தத் திருமணம். மனைவியாகி தனக்கு ஒரு குடும்பத்தைக் கொள்ளாமல்.. ஏற்கனவே இருந்த குடும்பத்தில் இரண்டாம் மனைவியாகி வந்ததற்கு காரணம் மித்ரா மட்டுமே.

இவர்கள் இருவரையும் பார்த்து விட்டு அவளை பார்க்காதது தப்பு போல தோன்ற... அவளின் அருகில் சென்று போர்வையை சரியாக போர்த்தி, தலையணையில் இருந்து நழுவியிருந்த அவளின் தலையை சரியாக வைத்து விட்டாள்.

Mallika Manivannan

திருமணமாகி ஆறு மாதங்கள், இதில் கணவனின் கை என்ன பார்வை கூட இன்னம் மேலே படவில்லை.. இதில் மூன்று குழந்தைகள். எதிரில் இருந்த கண்ணாடியில் “பெரிய ஆள்டி நீ தாமரை” என்று அவளுக்கு அவளே சொல்லிக் கொள்ள.. தானாக ஒரு புன்னகையும் கூட.

ஆம்! தாமரை மிகவும் உற்சாகமான பெண்… எத்தனை கவலைகள் கஷ்டங்கள் இருந்தாலும் புன்னகையோடு எதிர்கொள்ளும் மனப்பான்மை தான். இல்லையென்றால் இருபத்து ஒன்று வயது தாமரை முப்பத்தி நான்கு வயதான ஆதவனை திருமணம் செய்ய எப்படி சம்மதித்து இருப்பாள்.

கிட்ட தட்ட பதிமூன்று வயது வித்தியாசம். யாரும் நிர்பந்திக்க எல்லாமில்லை. என்னோடு மித்ராவுடைய பொறுப்பெடுக்கும் மணமகன் தான் வேண்டும் என்று சொல்ல… ஆதவன் வீட்டில் இரண்டாம்தாரமாக பெண் தேடியவர்கள் சம்மதம் சொல்ல… “சரி” என்று விட்டாள்.

திருமணதிற்கு முன் ஆதவன் அவளிடம் பேசினான் கூட.. “எனக்கு திருமணத்தில் விருப்பம் இல்லை.. குழந்தைகளுக்காக மட்டுமே திருமணம்! பெண் பிள்ளைகள் என்பதால் தான் அதுவும் கூட.. நிறைய எதிர்ப்பார்ப்புகள் வாழ்க்கையை பற்றி இருந்தால் விலகிக் கொள்” என்பது போல.

அவனுடைய தோற்றம், பேசிய விதம், எல்லாம் பார்த்தவுடனே பிடித்து விட்டது. “எனக்கு எந்த எதிர்பார்ப்புமில்லை” என்றாள்.

Mallika Manivannan

“உனக்கும் எனக்கும் பதிமூணு வயசு வித்தியாசம்.. வீட்ல எவ்வளவோ சொல்லிட்டேன், கேட்க மாட்டேங்கறாங்க.. நீ வேண்டாம்னு சொல்லு.. வாழ வேண்டிய வயசு உனக்கு! என்னைக் கல்யாணம் செஞ்சு கஷ்டப்படாத!” என்றான்.

“எனக்கு முழு மனசோட சம்மதம்…” என்றாள் முடிவாக. நினைவுகள் ஓடிக் கொண்டிருக்க…

புல்லட்டின் சத்தம் கேட்டது, அவசரமாக எஃப்.எம்மை அணைத்து வேகமாக சென்று கதவை திறந்தாள்.

இவள் கதவை திறந்து பார்க்க, பூட்டியிருந்த கேட்டை அவனிடமிருந்த சாவியால் திறந்து கொண்டிருந்தான் ஆதவன்.

புல்லட் ஒரு பக்கம் சத்தமிட்டு கொண்டிருந்தது. அவள் கதவை திறப்பது தெரியாமலா இருக்கும்.. ஆனாலும் தலை நிமிர்ந்து பார்க்கவில்லை.

ஆதவன் பார்க்காவிட்டால் என்ன தாமரை பார்ப்பாளே அவனை. வெள்ளை வேஷ்டி வெள்ளை சட்டை.. சட்டையிலும் வேஷ்டியிலும் அந்த நாளின் முடிவில் இருப்பதால் உழைப்பின் கசங்கல் இருந்தது.. ஆனால் வெண்மையில் குறைவில்லை.

“நல்லா தாண்டி நீ துணி துவைக்கிற தாமரை” என்று மனதிற்குள் அவளின் வேலையை அவளே மெச்சிக் கொண்டாள். என்ன தான் உழைப்பின் கசங்கல் இருந்தாலும் மாநிறத்தில் ஆறடிக்கு சற்று குறைவாக இருந்தவனது கம்பீரம் தாமரைக்கு

Mallika Manivannan

மிகவும் பிடிக்கும். ஆதவன் கவனிக்கும் முன் அவனை பார்வையில் நிரப்பி வேகமாக உள் செல்ல திரும்பி விட்டாள்.

கேட்டை திறந்து பைக்கை கொண்டு வந்து நிறுத்தியவன் படியேற பார்க்கும் முன்னே தாமரை உள்ளே சென்றிருந்தாள். இவன் கதவையும் பூட்டி சரி பார்த்து உடை மாற்ற சென்றான்.

வேகமாக சமையல் கட்டிற்கு சென்று இட்லியை ஊற்றி ஐந்தாறு நிமிடத்தில் ஆவி பறக்க.. சாம்பாரையும் சூடு செய்து எடுத்து முன்னறையில் வைத்து அவனின் தட்டையும் தண்ணீரையும் வைக்க... ஆதவன் கை கால் கழுவி வருவது தெரிந்தது.

அமர்ந்து எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தான். அவனே தான் போட்டுக் கொள்வான். தாமரை வருவதை விரும்ப மாட்டான். அவள் சமையல் கட்டிலேயே இருக்க.. எட்டு இட்லியை ஐந்து நிமிடங்களில் சாப்பிட்டு எழுந்து கொள்ள...

“எதுக்கு இப்படி அவசரமா சாப்பிடறாங்க? சரியா ஜீரணமே ஆகாதே!” என்ற கவலை தாமரைக்கு. அதன் பிறகு அவன் போய் குழந்தைகளின் அருகில் படுத்துக் கொள்ள...

“அச்சோ! சாப்பிட்ட உடனே தூங்கக் கூடாதே! அதுவும் நிறைய சாப்பிட்டு இருக்காங்க! நாளைக்கு ரெண்டு கம்மியா வைக்கணும், நைட் நிறைய சாப்பிடக் கூடாது” என்ற கவலை தாமரைக்கு.

Mallika Manivannan

எப்போதும் அவனைப் பற்றிய கவலை தான். நிறைய முறை யோசித்து விட்டாள். “அவர் உன்னை இன்னும் ஒரு பார்வை பார்க்காத போதே இவ்வளவு கவலை அவரைப் பற்றி உனக்கு... இன்னும் உன்கிட்ட பேச ஆரம்பிச்சிட்டா... தாமரை உன்னைக் கைல பிடிக்க முடியாதுடி! என்ன சொல்ல?” என்று நினைத்துக் கொண்டே பாத்திரங்களை மீண்டும் அடுக்களையில் வைத்து... அவள் உண்ண உணவை எடுத்தாள்.

ஆம்! இட்லி அவனுக்கு மட்டும் தான்... அவளுக்கு சாதம் தான்... மீதமான சாதம் இருந்தால் அவள் தான் உண்ண வேண்டும்! எழுதப் படாத விதி அது. அப்போதும் தோன்றும், நான் வந்து ஆறு மாதங்கள் தானே ஆகின்றது அதற்கு முன் என்ன செய்திருப்பார்கள் என்று.

காலை பதினோரு மணி அளவில் சமைத்தது! இப்போது இரவு பதினோரு மணி! சாதம் நீர்த்து இருந்தது. தண்ணீரை ஊற்றி அதைக் கழுவி எடுத்துப் போட்டு இட்லிக்கு செய்த சாம்பாரையே ஊற்றி உள்ளிறக்கினாள். எப்போதும் ரசம் சாதம் தான்... இன்று ரசம் தீர்ந்து விட்டது. திரும்ப எல்லாம் புதிதாக வைத்துக் கொள்ள முடியாது. அதற்கு அனுமதி கிடையாது.

உமட்டிக் கொண்டு வந்தது. இருந்தாலும் உள்ளே தள்ளிப் பாத்திரம் எல்லாம் கழுவி அவள் ரூமினுள் போகும் போது ஆதவன் ஆழ்ந்த தூக்கத்தில்.

உறங்கும் கணவனை சிறிது நேரம் நின்று பார்த்தாள். இவன் என் கணவன் என்று மனதினில் சொல்லிக் கொண்டு..

Mallika Manivannan

பக்கத்தில் படுத்திருக்கும் குழந்தைகள் பிருந்தாவையும் அஸ்வதியையும் பார்த்தாள். இவர்கள் என் குழந்தைகள் என்று சொல்லிக் கொண்டாள்.

பின்பு சற்று தள்ளி இன்னொரு பாயில் படுத்திருந்த மித்ராவோடு உறங்க செல்ல.. அஸ்வதி தூக்கத்தில் சிணுங்க... சத்தமில்லாமல் அவளைத் தூக்கி தங்களோடு பாயில் போட்டுக் கொண்டு குழந்தையை தட்டிக் கொடுத்த படியே உறங்க ஆரம்பித்தாள். ஒரு நிமிடம் கூட இருக்காது அசதியில் உறங்கிவிட்டாள்.

பதினொன்றரை மணிக்கு உறங்கியவள் மீண்டும் காலை ஐந்து மணிக்கு எழ, அவளோடு அஸ்வதியும் எழுந்து கொண்டாள். “என்னடிம்மா பட்டு அதுக்குள்ள எழுந்திட்டியா?” என்று அவளை தூக்கிக் கொண்டு அடுக்களைக்குள் விரைந்தாள்.

Mallika Manivannan

பாலைக் காய்ச்சி குழந்தைக்கு பாட்டிலில் ஊற்றி, மீண்டும் ரூமிற்கு வந்து ஆதவனின் பக்கத்தில் விட்டு, “இங்க உட்கார்ந்து குடி! அம்மா இப்போ வந்துடறேன்” என்று சொல்ல அது சமத்தாக தலையை ஆட்டியது.

ஆதவன் வீட்டில் இருக்கும் நேரம் குறைவு என்பதால், அவன் இருக்கும் நேரம் குழந்தைகள் அவனுடன் இருக்குமாறே பார்த்துக் கொள்வாள்.

பிறகு அவள் வாசல் தெளிக்கப் போய் விட... அஸ்வதி பாலைக் குடித்து விட்டு இன்னும் சமத்தாக அப்பாவின் மேல் ஏறி படுத்துக் கொண்டது.

குழந்தை படுக்கவும் சற்று உறக்கம் கலைந்தவன், மீண்டும் குழந்தையை அழுத்தி பிடித்து “படுடா செல்லம்” என்று சொல்லித் தட்டி கொடுக்க, கையில் இருந்து நழுவி அக்காவைப் போய் எழுப்பினாள். பிருந்தா அசையவில்லை என்றதும் மித்ராவைப் போய் எழுப்பினாள்.

“பட்டுக் குட்டி எழுந்திட்டியா” என்றபடி மித்ரா எழுந்து அமர.. வெளியே போகலாம் என்று மித்ராவின் கையைப் பிடித்து இழுத்தது.

உள் வாசலைக் கூட்டி முடித்து இப்போது வெளி வாசலைக் கூட்டிக் கொண்டிருந்தாள். இருவரும் படி இறங்க முற்பட.... “அச்சோ! பனி வரக் கூடாது அங்கயே இருங்க” என்று அதட்ட.... அப்படியே படியில் அமர்ந்தனர்.

“அச்சோ ஈரம்!” என்று பதறி வந்தவள்... “உள்ள போங்க! போங்க!” என்று அதட்ட,

ஈரத்தை விட்டு உள்ளே சென்று அவள் பார்வையில் படும்படி இருவரும் அமர்ந்தனர். இவர்களைப் பேசி சமாளிக்க முடியாது என்றுணர்ந்து விரைவாக கோலத்தை முடிக்க வெளியே சென்றாள்.

பின்பு அதை முடித்து உள்ளே வந்து மித்ராவிற்கு பாலைக் கொடுக்க, அவள் வாங்கவேயில்லை, “ரொம்ப அடம் பண்ற மித்து நீ” என்று சொல்லி தாமரை கீழே அமர, அவளின் மடியில் அமர்ந்து குடிக்க ஆரம்பித்தாள்.

Mallika Manivannan

குடித்து முடித்து தான் எழுந்தாள். பின்பு தாமரை அவர்கள் படுத்திருக்கும் ரூமில் சில பொம்மைகளை எடுத்துப் போட.. அவர்கள் அதை வைத்துக் கொண்டு விளையாட ஆரம்பித்தனர்.

தாமரையை வேலைகள் இழுக்க ஆரம்பித்தது.

**அத்தியாயம் இரண்டு :**

காலையில் கண் விழித்ததில் இருந்து பரபரப்பாக வேலைகள் செய்து கொண்டிருந்த தாமரையைப் பற்றி தான் யோசித்துக் கொண்டிருந்தான் ஆதவன். எப்படி சிறு முக சுளிப்புமின்றி இவளால் வேலை செய்ய முடிகிறது. அவனுக்கு தாமரையை திருமணம் செய்த நாளாக ஆச்சர்யமான விஷயம், அதே சமயம் நிம்மதி கொடுக்கும் விஷயம்.

ஏனென்றால் தாமரையைத் திருமணம் செய்த நாள் முதலாக வீட்டுப் பிரச்சினைகளோ, குழந்தைகளைப் பற்றிய கவலைகளோ இல்லை, எல்லாம் சிறப்பாக பார்த்துக் கொள்கிறாள்.

இந்த வயதிற்கு மேல் இப்படி ஒரு நிம்மதியை கொடுத்த கடவுளுக்கு நன்றி தான், ஆனால் சொல்ல விருப்பமில்லை. சுகன்யாவை இல்லாமல் செய்து விட்டாரே. சுகன்யா அவனின் அத்தை மகள்.. விரும்பித் திருமணம் செய்து கொண்டான்.

ஆனாலும் வாழ்க்கை இனிக்கவில்லை.. எப்போதும் வீட்டில் சண்டை சச்சரவுகள் தான். உறவு தான். அம்மாவிற்கும் அவளுக்கும் ஆகவே ஆகாது. எப்போதும் ஏறுக்கு மாறாய் செய்வாள்.

Mallika Manivannan

அம்மாவிற்கு எல்லாம் கச்சிதமாய் நடக்க வேண்டும்... இவள் எதுவுமே கேட்டுக் கொள்ள மாட்டாள். காலையில் நேரம் கழித்து எழுவாள், வீட்டில் எப்போதும் எழுந்தவுடனே எல்லோரும் குளித்து விட வேண்டும். அது ஆதவன் வீட்டில் எழுதப்படாத விதி. அதன் பிறகுதான் டீ காஃபி பால் கூட அருந்தக் கிடைக்கும்.

எழுந்தவுடனே சுகன்யா குளிக்கவும் மாட்டாள். வேண்டுமென்றே செய்வாள். “நான் எப்போ குளிக்கணும்னு கூட அத்தை சொல்வாங்களா? என்னால கேட்க முடியாது” என்று. திருமணமாகி இரண்டு மாதத்திலேயே உண்டாகி விட மசக்கையும் அவளை படுத்தி எடுத்தது தான்.

ஒன்பது மாதம் வரை, ஏன் பிரசவத்திற்கு ஹாஸ்பிடல் போகும் போது கூட வாமிட் செய்து போனாள். “என் வாழ்க்கை என் இஷ்டம்... இருக்கும் நாளில் நான் எனக்காகத் தான் வாழ்வேன் என்ற பிடிவாதம். அதுதான் வாழ்க்கையும் மிக விரைவில் முடிந்து விட்டதோ?”

ஒத்து வரவேயில்லை... மூன்று வருடத்திலேயே தனியாக போனர். மூன்று பிள்ளைகளில் இவன் தான் மூத்தவன். அப்பாவிற்கு அவனை தனியாக அனுப்ப மனதேயில்லை. எப்படியாவது அவனை நிறுத்திக் கொள்ள நினைத்து தனியாக சென்றால் சொத்தில் ஒரு சல்லிக் காசு கிடையாது என்று அப்பா சொல்ல, அவர் சொத்தைப் பற்றி பேசியதும் அந்தக் கோபத்தில் “தேவையே இல்லை” என்று போனான்.

Mallika Manivannan

குடும்பத் தொழிலில் இருந்து தனியாக சென்று தொழில் செய்த போது ஏனோ வெற்றி கிட்டவே இல்லை...

கடுமையான உழைப்பு தான், ஆனால் எல்லாம் தோல்வி... உப்பு விற்கப் போனால் மழை, மாவு விற்கப் போனால் காற்று என்பது போல தான் எல்லாம் இருந்தது.

மிகவும் நொந்து போனர்... “என்னால் தான் உங்களுக்கு சிரமம்” என்று மனதளவில் சுகன்யாவும் மிகவும் சோர்ந்து போனாள்.

“இல்லை! அதெல்லாம் இல்லை! இதெல்லாம் ஒரு கஷ்டமில்லை!” என்றே சொன்னான், அப்படியே நினைத்தான் கூட... எப்போதும் சுகன்யாவை அவனால் என்றும் விட்டுக் கொடுக்க முடியாது.

இப்படியே ஐந்து வருடங்கள் ஓட... இரண்டாம் குழந்தை உருவாக... சற்று தொழிலில் முன்னேற்றம் கூட... குழந்தை பிறந்து மூன்றாவது மாதம்... காய்ச்சல் வர.. என்ன என்று கண்டுபிடிக்கவே நாளானது, மூளைக் காய்ச்சல் என்றனர்.

அப்படியே கோமாவிற்குப் போய் விட்டாள்... மூன்று மாதங்கள் எத்தனையோ சிகிச்சைகள்... லட்சக் கணக்கில் பணம் செலவு.. எப்படியாவது அவளை காப்பற்றி விட முயன்றான். தொழிலையும் பார்க்க முடியவில்லை. தெரிந்தவர் அத்தனை பேரிடமும் கடன்.

அவளின் உலக வாழ்க்கை பயணம் அவ்வளவுதான் எனும் போது என்ன செய்வது... அப்படியே கோமாவில் இருந்தபடியே ஆவி பிரிந்தது.

அதிலிருந்தும் அவனால் மீள முடியவில்லை, பண நஷ்டத்தில் இருந்தும் மீள முடியவில்லை... சுகன்யாவிற்கு உடல் நலம் குன்றிய போதே குழந்தைகளை சுகன்யாவின் அம்மா வீட்டில் தான் விட்டிருந்தான். அவனுடைய அப்பாவின் தங்கை தானே. இரு அண்ணன்மார்கள் சுகன்யாவிற்கு தங்கை உயிரோடு இருக்கும் வரை பார்த்துக் கொண்டனர். அதன் பிறகும் பார்த்துக் கொண்டிருப்பர்.

ஆனால் குழந்தைகளை விட்டு அவனுக்கு என்ன வாழ்க்கை?

தனியாக ஏழு வயதில் ஒரு பெண் குழந்தை ஆறு மாதத்தில் ஒரு பெண் குழந்தை. அம்மா அப்பாவிடம் போவதைத் தவிர வேறு வழியில்லை. ஐந்து வருட தனி வீடு வாழ்க்கை அவனை வீட்டில் இருந்து தள்ளி நிறுத்தி இருந்தது.

“என்னவோ அப்படிப் போன இப்போ என்ன ஆச்சு... உன் பொண்டாட்டி இங்கயே இருந்தா உருப்பட்டு இருப்பா... உன்னைக் கூட்டிட்டு போய் அவளும் செத்து, உன்னையும் ஒண்ணுமில்லாம ஆக்கிட்டா” என்ற பரிகாசம் தான்.

உறவுகள் அப்படிதான்.. நன்றாய் இருந்தால் இவனுக்கு வந்த வாழ்வை பாரேன் என்பர். நன்றாய் இல்லாவிட்டால் இவனுக்கு இது தேவைதான் என்பர்.

Mallika Manivannan

வீடு மட்டும்தான் வந்தான்... தொழில் எல்லாம் வரவில்லை. வாழ்க்கையில் வெற்றி பெற்றே ஆக வேண்டிய கட்டாயம்... அவர்கள் கொடுக்க மாட்டேன் என்ற சொத்தும் அவனுக்கு தேவையில்லை என்ற நினைப்புதான்.

தங்கை ஒருத்தி.. தம்பி ஒருவன்... தங்கை திருமணமாகி இருக்க... தம்பிக்கு அப்போதுதான் திருமணம் ஆகி இரண்டு வருடங்கள் ஆகியிருந்தது. அந்தப் பெண்ணும் உண்டாகி இருக்க.. என் மனைவியால் எல்லாம் குழந்தையை பார்த்துக் கொள்ள முடியாது என்று தம்பி சொல்லி விட.. வயதான அம்மா என்னாலும் முடியாது என்று சொல்ல..

வேறு வழியில்லாமல் திருமணம் செய்து ஆக வேண்டிய கட்டாயம். சரி ஏதாவது கணவனை இழந்த பெண், இல்லை விவாகரத்தான பெண் என்று பாருங்கள் என்று சொல்ல.. வீட்டில் ஒத்துக் கொள்ளவில்லை..

“எங்க பேச்சை இப்பவாவது கேளு” என்று அதட்டி திட்டி ஒரு வழியாக பெண் தேட... அமைந்தவள் தான் தாமரை... என் அண்ணன் மகள் என்பது பிறப்பில், ஆனால் என் மகள் என்பதுதான் இனி... அவளோடு என்னை பார்த்துக் கொள்பவர்தான் வேண்டும் என்று சொல்ல..

அந்த விஷயம் அவனுக்குத் தெரியாது.. குழந்தையோடு பெண் என்று சொல்ல “சரி” என்று விட்டான்.. ஆனாலும் வயது குறைவாக இருக்க... அதைக் கொண்டு அவளைப் பார்த்தான்.. பார்ப்பதற்கு இன்னம் சிறிய பெண்ணாக இருந்தாள்.. ஆதவன்

Mallika Manivannan

உயரம்.. தாமரை சராசரி உயரம்.. அவனின் தோளுக்கு தான் வந்தாள். மாநிறம் களையான முகம். ஒல்லியான உடல் வாகு. பார்ப்பதற்கும் நன்றாக இருந்தாள்.

இவ்வளவு வயது வித்தியாசத்தில் திருமணம் ஏன் வேண்டாம் என்று சொல்ல, பேசும் போது தான் அவளின் குழந்தை அல்ல என்றே தெரியும். அச்சோ என்ன இது என்று பதறி விட்டான்.

“இவளுக்கு என்ன மாப்பிள்ளையா கிடைக்காது. என்னை ஏன் திருமணம் செய்ய வேண்டும்” என்றுதான் உடனே தோன்றியது. மிகவும் ஏழ்மை என்றெல்லாம் சொல்ல முடியாது. சொந்த வீடு இருந்தது. இரண்டு பெண்கள்.. இவள்தான் இளையவள், மூத்தவளுக்கு நல்ல செல்வாக்கான இடத்திலேயே திருமணம் நடந்து இருந்தது.

Mallika Manivannan

பிரசவத்தில் அண்ணி இறந்து போக எதிர்பாராத விதமாக, அண்ணன் ராணுவத்தில் இருந்தவன் அவனும் நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டு இருந்த போது தீவிரவாத தாக்குதலில் மூன்றே மாதத்தில் இறந்து விட, அன்றிலிருந்து மித்ரா இவளின் பொறுப்பாகி போனாள் என்று தெரிய வந்தது.

சிறிய வயதில் தாமரையின் இந்த முடிவு அவளின் வாழ்க்கையைப் பற்றிய பொறுப்புணர்வைக் காட்டியது. அவளை ஏன் தன்னுடைய வாழ்க்கை சிக்கலில் மாட்டிவிட வேண்டும் என்றுதான் தோன்றியது.

வேண்டாம் வேண்டாம் என்று சொல்லியும், வேண்டும் என்று திருமணம் செய்து கொண்டாள்.

மனதில் மிகவும் குற்ற உணர்ச்சியாகப் போயிற்று. அதைக் கொண்டே அவளைப் பார்க்கக்கூடத் தயங்கினான். தம்பியின் மனைவி நிறைமாதமாக இருக்க, நிறைய வேலைகள் அவளுக்கு என்று புரிந்துதான் இருந்தது. அதுவும் மூன்று பிள்ளைகளை பார்த்துக் கொள்வது மிகவும் சிரமம். ஆனாலும் அவனால் என்ன செய்ய முடியும். அதிலும் தாமரை சிறு குறை கூட சொன்னது கிடையாது.

ஏற்கனவே ஒரு மனைவிக்காக சண்டையிட்டு சென்றாகி விட்டது. இப்போது இன்னொருத்திக்காக சண்டை போட முடியாது. போட்டால் இன்னம் பிரச்சனைகள் அதிகமாகும். அதனாலேயே அவளைப் பார்ப்பது கூட இல்லை.

கோழையாகிப் போனேனோ வாழ்க்கையில் என்ற கழிவிரக்கம் கூட.... ஆதவனா அவன் கோபக்காரன், தைரியமானவன், அவனோடு எந்த வம்பும் வேண்டாம் என்று பார்ப்பவர்கள் ஒதுங்கிப் போகும் நிலை எல்லாம் மாறிப் போயிற்றோ?

ஆனால் யார் வாயிலும் அரைபடும் தைரியமில்லை. ஏற்கனவே உயிருக்கு உயிரானவளை இழந்தாகி விட்டு... இனி யாரையும் இழக்கும் தைரியமில்லை. அவனுடைய குடும்பம் நன்றாக இருக்க வேண்டும்.

Mallika Manivannan

குடும்பத்தில் தாமரையும் மித்ராவும் சேர்த்திதான். அதைச் சொல்ல அவனுக்கு வராது.. சுகன்யா என்றால் இவனுக்குப் பேசும் அவசியமேயில்லை... அவளே பொரிந்து தள்ளி விடுவாள். தாமரையிடம் என்ன பேசுவது என்றுகூட இன்னம் தெரியவில்லை.

அதனாலும் அமைதி காத்தான்.

கண்டிப்பாக அவனுக்கு நிறைய நிம்மதி கொடுத்தாள் தாமரை ஆனாலும் அவன் சந்தோஷம் சுகன்யாதானே!!!

அவளின் இறப்பு.. கூட அவளின் கடைசி நாட்களில் ஹாஸ்பிடலுக்கு ஆன செலவுகள்... அதனால் ஏற்பட்ட கடன்.. அதற்கு கட்டும் வட்டி என ஒரு பெரும் சுழலில் சிக்கி இருந்தான். அதிலிருந்து வேறு பார்க்க முடியவில்லை.

ஒரு பெண்ணிடம் சரியாக பேசாது இருப்பது தவறு என்று தெரியும். ஆனால் என்ன பேசுவது என்று தெரியவில்லை... கேள் என் கஷ்டத்தை என்றா பேச முடியும். இவ்வளவு வயது வித்தியாசத்தில் பெண்ணை திருமணம் செய்து அவளுடைய வாழ்க்கையையும் கெடுத்து விட்டேனோ என்ற குற்ற உணர்ச்சி.

எதிலிருந்தோ தப்பித்து ஓடுவது போல ஓடிக் கொண்டு இருந்தான்.

அவன் பேச வேண்டாம் பார்த்தால் கூட போதும் என்று இன்னும் அவனுக்குத் தெரியவும் இல்லை புரியவும் இல்லை.

Mallika Manivannan

சரி அந்த குழந்தை மித்ராவிடம் பழகலாம் என்றால் அது இவனைப் பார்த்தாலே தாமரையின் பின் மறைந்து விடும் என்ன சொல்ல?

அன்று காலை எழுந்து வெளியே வந்தபோது அம்மா கீரையை ஆய்ந்து கொண்டிருந்தார். அவருக்கும் வயதாகி விட்டது. அறுபதை தாண்டி இருந்தார். தாமரை சமையல்கட்டில் இருந்தாள். அங்கேயே அஸ்வதி உட்கார்ந்திருக்க, மித்ரா அவளுக்கு விளையாட்டு காட்டிக் கொண்டு இருந்தாள்.

பிருந்தா பள்ளிக்கு தயாராகிக் கொண்டிருந்தாள். அவளுடைய ஸ்கூல் பேகில் நோட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தவள்.. "அப்பா இந்த நோட்க்கு கவர் போடணும், கவர் இல்லை வாங்கணும்" என்று வர....

"இப்போவாடா குட்டி.... சாயந்தரம் வாங்கிப் போடலாம்" என்றான்.

"நான் இப்போதான் உங்களைப் பார்ப்பேன், சாயந்தரம் எப்போ பார்ப்பேன்" என்று முகத்தை சுருக்க...

"சரி. இரு! அப்பா டீ குடிச்சிட்டுப் போய் வாங்கிட்டு வந்து போட்டு தர்றேன்" என்று குளிக்கப் போக..

"அப்பா! ஸ்கூல் பஸ் வந்துடும்" என்று மீண்டும் முகத்தை சுருக்க..

"இல்லை! அதுக்குள்ள அப்பா வந்துடுவேன்" என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்க...

Mallika Manivannan

மகள் மறுக்க....

“அப்படியே அவங்கம்மா மாதிரியே பிடிவாதம், ஒரு பேச்சு கேட்குதா?” என்று அம்மா மரகதம் சொல்ல...

இப்போது ஆதவனுடைய முகமும் சேர்ந்து சுருங்கியது.

காலையிலிருந்து சுகன்யாவைப் பற்றிய நினைவில் இருந்ததாலோ என்னவோ, அவனுக்கு மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது. எப்போதும் பேசாமல் போய் விடுபவன்..

“செத்து கூட அவ உங்ககிட்ட திட்டு வாங்கணுமாம்மா” என்று கோப மிகுதியில் சத்தமாக சொல்லி விட.. அவன் சத்தம் மிகவும் அதிகம் எப்போதுமே!!!

மொத்த வீடும் வெளியே வந்தது. அவனின் அப்பா அழகர், தம்பி சேரன், அவனின் மனைவி நிறைமாத கர்ப்பிணி சுமதி, தாமரை என்று எல்லோரும்.

“என்ன சொல்லிட்டேன் உன் பொண்டாட்டியைன்னு இப்படிக் கோபப்படற” என்று அம்மாவும் விடுவேனா என்று சண்டையை இழுக்க..

பேசாது விடு விடுவென குளிக்கப் போனான். கோபம் கண் மண் தெரியாத கோபம்...

இருந்தால் இன்னும் பேச்சுக்கள் வளர்ந்து விடும் என்று அந்த இடத்தை விட்டுப் போய் விட்டான்.

Mallika Manivannan

பிருந்தா அப்படியே நின்றவள் அழத் துவங்க..

என்ன ஏதென்று தெரியாத போதும்.. தாமரை அருகில் வந்து "என்ன பிருந்தா?" என..

"ஒண்ணுமில்லை போ!" என்று தாமரையிடம் முகத்தைக் காட்டி பையைத் தூக்கி எறிந்து போக...

"பாருங்க, என்ன திமிர் இவளுக்கு?" என்று மரகதம் தன் கணவரிடம் குற்றப் பத்திரிக்கை வாசித்தார் பிருந்தாவைப் பற்றி.

"சின்ன குழந்தை அவள்? என்ன பேச்சு இது?" என்பது போல தாமரை பார்த்து நிற்க..

அழகர், "மரகதம், வீணா சத்தம் போடாத, அவ உன் பேத்தி ஞாபகம் வெச்சிக்கோ" என்றார்.

"ஆமா! எல்லோரும் என்னை சொல்லுங்க! அவனுக்கு பொண்டாட்டி, உங்களுக்கு தங்கச்சி மக.. எல்லோரும் பரிஞ்சு வாங்க!" என்று மீண்டும் சண்டையைக் கிளப்ப..

அவரிடம் வாய் கொடுக்க முடியாதவராக அழகரும் சென்று விட.. சேரனும் சுமதியும் பார்த்து இருந்தவர்கள், அவர்களும் எதுவும் பேசாமல் சென்று விட்டனர்.

"நல்லதுக்கு எங்க காலமிருக்கு, எப்படியோ போங்க! எனக்கு என்ன வந்துச்சு.. என்னை நல்லபடியா கொண்டு போய் சேர்த்துடுங்க, யாரு எப்படி போனா எனக்கு என்ன?" என்று நொடித்துக் கொண்டே மீண்டும் கீரையை ஆய..

Mallika Manivannan

தாமரைதான் செய்வது அறியாது... அடுப்பை அணைத்து பிருந்தாவிடம் சென்றாள். “குட்டி ஸ்கூலுக்கு டைம் ஆச்சு.. வா சாப்பிடு...” என்றாள்.

“ஒண்ணும் வேணாம் போ!” என்று மீண்டும் எடுத்து எறிந்து பேசினாள்.

“மிஸ் திட்டுவாங்கடா குட்டி, அப்புறம் உன்னை குட் கேர்ள் சொல்ல மாட்டாங்க! லேட் ஆகாது.. நேத்தே அம்மாகிட்ட சொல்லியிருக்கலாம்! பரவாயில்லை, இனிமே சொல்லிடு! நான் போய் வாங்கிட்டு வர்றேன்... நீ தோசை சாப்பிடு வா.. பஸ் வர்றதுக்குள்ள போட்டுடலாம்... அப்பா ரொம்ப நேரம் கழிச்சுதானே வந்தாங்க! அதுதான் களைப்பா இருக்கும்!” என்று ஆதவனுக்கு பரிந்து பேசினாள்.

“நீங்க கூடத்தான் அப்பா வந்ததுக்கு அப்புறம் தூங்கறீங்க! உங்களுக்கு இல்லையா..?” இதற்குத்தான் பிருந்தாவை தாமரை புத்திசாலி என்பது.

“எனக்கு இல்லை! வா! வா! சாப்பிடு..” என்று தட்டில் தோசையை வைத்துக் கொடுத்து..

“மித்து அக்கா கூட சமத்தா இருக்கணும்.. நான் கடைக்குப் போய்ட்டு வர்றேன்” என்று சொல்லி... சிணுங்கிய அஸ்வதியை தூக்கிக் கொண்டு, பர்சை எடுத்துக் கொண்டு செருப்பைப் போடும் போது குளித்து வந்த ஆதவன்..

“எங்க போற?” என்றான் தாமரையைப் பார்த்து.

Mallika Manivannan

“கடைக்கு, அட்டை வாங்க!”

“நான் போறேன்! உள்ள போ!” என்றவனிடம் சரி என்பது போலத் தலையசைத்தாள்.

சட்டையை மாட்டிக் கொண்டு விரைந்தவன் ஐந்தே நிமிடத்தில் வந்து விட....

அதையும் விட வேகமாக தாமரை அட்டையைப் போட்டு முடிக்க.. பிருந்தா இன்னம் தோசையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தாள் சாப்பிடாமல்.

மகளின் முகம் பார்த்தவன்.. அருகில் சென்று அமர.. “சாரி பா!” என்றது குழந்தை..

“அப்பாதான் சாரி கேட்கணும்.. இனிமே பாட்டி பேசாம நான் பார்த்துக்கறேன், நீயும் பிடிவாதம் பிடிக்க கூடாது!” என்ற போதும் தோசையை வைத்துக் கொண்டே இருக்க..

“சாப்பிட முடியலையா? நான் ஊட்டட்டுமா!” என்று மித்ரா வந்து சொல்ல..

“நீ எனக்கு ஊட்டுவியா”, என்று பிருந்தாவிற்கு சிரிப்பு வர..

“அப்போ சாப்பிடு!” என்றாள்.. இதை தூரத்தில் நின்று தாமாரை பார்த்துக் கொண்டிருக்க.. இது அவளின் வேலை என்று ஆதவனுக்கு புரிந்தது.

மனம் சற்று லேசானது..

Mallika Manivannan

பிருந்தா உண்ண ஆரம்பித்ததும் இவனுக்கு டீ வர.. “அட! என் பொண்ணு சாப்பிடலைன்னா எனக்கு டீ இல்லை போலவே” என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

பிறகு பிருந்தாவை ஸ்கூல் பஸ் ஏற்றிவிட பைக்கை எடுக்க.. மித்ரா பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள். மித்ராவிற்கு பைக்கில் போவது என்றால் இஷ்டம். தாமரையும் மித்ராவையும் அழைப்பானா என்று பார்க்க.. ஆதவன் அவளை பார்த்தாலும் அழைக்கவில்லை.

ஆனாலும் அவளை பார்த்துதான் சென்றான். ஆதவனுக்கு இவளுக்கு என்ன வயது ஏன் இன்னும் நாம் பள்ளியில் சேர்க்கவில்லை என்று பார்த்து செல்ல.... அவளை அழைக்கவில்லை என்று, மித்ராவின் முகம் சுருங்கியதோ இல்லையோ தாமரையின் முகம் சுருங்கிற்று.

Mallika Manivannan

**அத்தியாயம் மூன்று :**

ஆதவன் தன்னுடன் சரியாக பேசுவதில்லை பழகுவதில்லை என்பதைவிட மித்ராவிடம் இன்னும் பேசுவதில்லை என்பதுதான் அதிக வருத்தம் தாமரைக்கு.

ஏக்கமாக பார்த்து நின்ற மித்ராவிடம் “நீ வாடா செல்லம்” என்று அவளை தூக்கி உள்ளே போக... அவளை தூக்கி வைத்திருப்பதைப் பார்த்து அஸ்வதி சிணுங்க ஆரம்பித்தாள்.

மித்ராவை இறக்கிவிடலாம் என்றால் அவளும் கழுத்தைக் கட்டிக்கொண்டு இறங்க மறுக்க.. தாமரைதான் தவித்துப் போனாள், சில சமயம் இப்படித்தான் ஆகிவிடும்.

என்ன செய்ய முடியும்.. பார்த்துக் கொண்டு இருந்த மரகதம், அஸ்வதியை தூக்கினார். பின்னர் அவர் சென்று குழந்தையை அழகரிடம் கொடுத்து வேறு ஏதாவது நறுக்கி கொடுக்க வேண்டுமா என்று தாமரையிடம் கேட்க,

“மதியத்துக்கு தான் வேணும், இப்போ இது போதும்” என்று சொல்லி விட,

அத்தனை பேருக்கும் ஒற்றை ஆளாய் மித்ராவை இடுப்பில் வைத்தபடி சமைத்துக் கொண்டிருந்தாள். சுமதிக்கு இப்போது நிறைமாதம் என்பதால் தாமரையே அவள் வந்தாலும் “நீங்க போங்க” என்று விடுவாள்.

எப்போதும் மரகதம் மேல் வேலைகள் மட்டும்தான் செய்வார், மூட்டு வலி ஆரம்பித்து இருப்பதால் நின்று சமைக்கவெல்லாம் மாட்டார். அதுவுமன்றி தாமரையின் சமையல் நன்றாக இருப்பதால் எல்லோரும் அவளே சமைக்கட்டும் என்று விட்டு விடுவர்.

அவள் சமையல் கட்டில் வேலையில் இருக்கும்போது ஆதவன் வந்து விட, அழகர் அவனிடம் அஸ்வதியை கொடுத்தவர், “ஆதவா” என்று பேச்சை ஆரம்பிக்கும் போதே சேரனும் வந்தமர்ந்தான்.

Mallika Manivannan

இருவரும் வரும்போதே விஷயம் பெரிது என்று புரிய, அவர்களே பேசட்டும் என்று பார்த்து இருந்தான்.

சமையல் அறையில் இருந்த தாமரையும் பார்த்து இருந்தாள். அவன் அமர்ந்து இருந்த தோரணை அவனின் பார்வை எல்லாம் ஈர்த்தது அவளை.

“ஒரு இடத்துல பேமென்ட் இன்னும் வரலைடா.. என்கிட்டே பணமில்லை, இப்போதைக்கு முடியாது, பண்றதை பண்ணுன்னு சொல்றான்” என்றார் அழகர்.

“எவ்வளவு பணம்”

“பன்னண்டு லட்சம்” என்றான் சேரன்

“என்ன பன்னண்டு லட்சமா, அவ்வளவு ஏன் பாக்கி விட்டீங்க..”

“எப்பவும் நம்மகிட்ட வாங்கறவன் தான், சரி குடுத்துடுவான்னு கேட்க கேட்க குடுத்துட்டோம். இப்போ அப்போன்னு சொன்னவன் இப்போ முடியாதுன்னு சொல்றான், என்ன பண்ணனு தெரியலை”

“யாரு அவன்? எனக்கு தெரியுமா?”

“இல்லை! தெரியாது! இந்த மூணு வருஷமாதான் நம்மகிட்ட தொழில் பண்றான்”

“நான் என்ன பண்ணனும்”

Mallika Manivannan

“பணம் வாங்கித் தரணும்” என்றார் அழகர் அவனைப் பார்த்து செய்வானோ மாட்டானோ என்று யோசித்தபடி தயங்கி தயங்கி சொன்னார்.

ஆனால் ஆதவன் யோசிக்கவெல்லாம் இல்லை “போன் பண்ணுங்க அவனுக்கு…” என்றான் உடனே.

அப்பா அவனுக்கு போன் செய்வதை பார்த்து இருந்தான். “எடுக்கலை ஆதவா” என்றார்.

“அடிங்க.. திரும்பத் திரும்ப அடிங்க, அவன் எடுக்குற வரை அடிங்க..” என்றான் தீவிரமாக. ஒரு காரியம் என்று வந்து விட்டால் முடித்து விட்டுதான் ஓய்வான்.

“பிரச்சினை எதுவும் வேண்டாம்டா தம்பி, பிரச்சினை பண்ணாம வாங்க முடியுமான்னு பாரு” என்றார் அழகர் பயத்தோடு.

எந்த வம்பு தும்புக்கும் போகாத மனிதர். ஆனால் ஆதவன் நேர் எதிர்… நமக்கு ஏன் வம்பு என்று ஒதுங்கும் பழக்கமே கிடையாது. பேச்சுதான் குறைவு செயல் அதிகம்.

“அப்போ பணம் வரவே வராது, பரவாயில்லையா” என்றான்.

“அப்பா அண்ணன் ஏதோ பண்றாங்க, நீங்க ஏன் வேண்டாம் சொல்றீங்க, எப்படி நம்மை மிரட்டுறான் விடுங்க..”

Mallika Manivannan

“என்ன மிரட்டுரானா, எவனுக்கு அவ்வளவு தைரியம், அதையும் வேற நீ சொல்ற, அவனை ஒரு வழி பண்ணியிருக்க மாட்ட, எதுன்னாலும் நான் இருக்கேன். இனிமே இப்படி கேட்டுட்டு வந்து நிக்காத” என்றான் சேரனை பார்த்து.

“சரி” என்பது போல தலையை ஆட்டியவன்.. “இது பெரிய அமௌன்ட் அதனால அப்பா சொல்றார், முன்ன மாதிரி யாரும் கரக்டா குடுக்கறது இல்லை இந்த மூணு வருஷமா அங்க அங்க நிறைய பாக்கி நிக்குது” என்றான் சேரன்.

“என்ன? ஏன் என்கிட்டே சொல்லலை?”

“நான் கூப்பிட்டேன் நீ எங்களோட வந்துடுன்னு, நீதானே வரலை” என்றார் அழகர்.

“ஆமாம் இப்பவும் சொல்றேன் வரமாட்டேன்.. ஆனா பாக்கி நிக்குதுன்னு ஏன் சொல்லலை.. தொழிலுக்கு வரமாட்டேன்னு இப்பவும் சொல்றேன் ஆனா உங்களுக்கு வசூல் பண்ண மாட்டேன்னு எப்போ சொன்னேன்”

“நீ இருந்தாலே எல்லோரும் கரெக்டா குடுத்துடுவாங்க” என்றார் அழகர்.

“வேணும்னா சும்மா வந்து அப்பப்போ உட்கார்றேன், கூட இருக்கேன்னு காட்டிக்கறேன். ஆனா சேர்ந்து எல்லாம் இனிமே முடியாது” என்றான் கறாராக.

Mallika Manivannan

“ஹப்பா! எப்படி இவ்வளவு கடினமாக பெற்றவர்களிடம் பேசுகிறான், இப்படிதானோ இவன். என்னுடைய வாழ்க்கையும் இப்படியே முடிந்து விடுமா?” என்ற கவலை அவளையறியாமல் மனதில் உட்கார்ந்தது.

கேட்டுக் கொண்டு இருந்த மரகதம்.. “யாருடா இவங்க? உன் அப்பா! உன் தம்பி! இன்னும் சண்டை பிடிப்பியா?”

“சண்டை எல்லாம் ஒண்ணுமில்லை.. எதுன்னாலும் சொல்லு செய்யறேன் ஆனா சேர்ந்து தொழில் முடியாது.. அது பத்தி பேசவே வேண்டாம்.. நீங்கதான் என்னை வேணாம்னு சொன்னீங்க வேணாம்னு சொன்னது வேண்டாம்தான்” என்றான் இன்னும் கடினமாக.

“பெத்தவங்க கிட்ட என்ன உனக்கு அவ்வளவு ரோஷம், அப்போ எங்க பேச்சு எதுவும் நீ கேட்க மாட்ட”

“என்ன கேட்கலை? இப்பக்கூட நீங்க சொன்னீங்கன்னு தானே இந்தப் பொண்ணை கல்யாணமே பண்ணியிருக்கேன். அப்புறம் பேச்சைக் கேட்கலைன்னா” என்று அம்மாவிடம் முறைத்து நின்றான்.

தாமரைக்கு மனம் வெகுவாக முரண்டிக் கொண்டது. “இந்தப் பொண்ணை கல்யாணம் பண்ணியிருக்கேன் என்று சொல்கிறான். நான் யார் இவனுக்கு. ஆறுமாதமாக அப்போது நான் இவனின் கவனத்தை சிறிது கூட கவரவில்லையா.. அப்போது நான் என்ன இவர்களின் வீட்டு வேலைக்காரியும்

Mallika Manivannan

குழந்தையை கவனிக்கும் ஆயாவுமா..” கண்களில் நீரே வந்து விட்டது.

இதுவரை அவள் இந்த வீடு வந்த நாளாக எதற்கும் அழுததில்லை.. இது நான் தேர்ந்து எடுத்த வாழ்க்கை என்பதில் தெளிவாக இருந்தாள். ஏனோ இன்று அழுகை வந்தது.

ஒன்று மித்ரா இல்லை அஸ்வதி யாராவது ஒருவரை எப்போதும் தாமரை தூக்கி வைத்திருக்க வேண்டும்.. இருவரும் போட்டி போட்டு அவளிடம் தாவுவர். அவளை மேலும் யோசிக்க விடாமல் இப்போதும் அது நடந்தது.

அப்போதுதான் மித்ராவை இறக்கி விட்டிருக்க அஸ்வதி வந்து “தூக்கு” என்பது போல கையை நீட்ட, கலங்கிய கண்களுடன் அவளை தூக்க, அது அவளின் முகத்தை ஆராய்ந்தது.

சாப்பிட வைக்கும் நேரம் ஆகிவிட்டதால்.. மித்ராவிற்கு ஒரு தட்டத்தில் போட்டு அவளிடம் கொடுத்து, அஸ்வதிக்கு ஒரு தட்டத்தில் போட்டு அவளை தூக்கிக் கொண்டு வீட்டின் பின்புறம் சென்று படியில் அமர்ந்து கொண்டு... மித்ரா அவளாக சாப்பிட அஸ்வதிக்கு ஊட்ட ஆரம்பித்தாள்.

அவர்கள் உண்டு முடித்த பிறகும் இடத்தை விட்டு அசையவில்லை. அப்படியே அமர்ந்து இருந்தாள். வீட்டின் பின்புறம் சிறு தோட்டம் இருந்தது, பூச்செடிகள் ஒரு புறம், காய்கறி செடிகள் ஒருபுறம், சுமதி அதை நன்றாக பராமரித்து வந்தாள். அதை தாமரை அந்த வீட்டிற்கு வரும் முன்பிருந்தே

Mallika Manivannan

சுமதிக்கு திருமணம் ஆன நாள் முதலாக செய்து கொண்டிருந்தாள்.

அது சுமதியின் இடம், அங்கே போய் நின்றால் சுமதிக்கு முகம் சுருங்கி விடும். அதனால் வேடிக்கை பார்ப்பதோடு சரி, அதுவும் மித்ராவை அங்கே விட்டால் அங்கிருக்கும் ரோஜா பூக்களை வேறு பறித்து விடுவாள்.

“இங்கல்லாம் வராத பாப்பா, பூ பறிக்கக் கூடாது” என்று சுமதி ஓரிரண்டு முறை மித்ராவை அதட்டுவதை கவனித்த பிருந்தா இவளிடம், “அங்க இவளை விடாதீங்க, சித்தி திட்டுறாங்க!” என்று பெரிய மனுஷியாக சொல்லியிருக்க அங்கே மித்ராவை விடுவதில்லை.

எல்லாம் யோசித்தபடி பூக்களை வெறித்து நோக்கி அமர்ந்திருக்க.. உண்டு முடித்த அஸ்வதி வீட்டின் உள்ளே நழுவியிருந்தது. மித்ரா இவளுடன் சமத்தாக அமர்ந்திருக்க..

உள்ளே அஸ்வதி மட்டும் தளிர் நடையிட்டு வருவதை பார்த்த ஆதவன் அவளை வந்து தூக்கி, “எங்க கண்ணுக்குட்டி உங்க அம்மா” என்று கேட்க, அது பின்புறம் கையை காட்டியது.

அவனுக்கு வெளியே செல்ல வேண்டி இருந்தது, தாமரை வந்து தோசை சுடுவாளா என்று பார்த்திருக்க அவள் வரும் வழியாக காணோம்.

அருகில் சென்று தாமரைக்கு கேட்கும் விதமாக “அப்பாக்கு நேரமாச்சு சொல்லுங்க”, என்று அஸ்வதியை இறக்கிவிட, பேச்சு சத்தம் அருகில் கேட்கவும் சட்டென்று திரும்பினாள் தாமரை.

Mallika Manivannan

ஆதவன் திரும்பிய தாமரையின் முகத்தில் பார்த்தது, அவளின் கலங்கிய கண்களைத்தான்.

“என்ன? என்ன ஆச்சு?” என்றான்.

கண்களை அவசரமாக துடைத்தவள் “ஒண்ணுமில்லை” என்று எழுந்து உள் சென்று விட.. அவளை நூல் பிடித்து மித்ராவும் அவளின் பின் ஓடியது.

வந்த நாளாக தாமரையின் முகத்தில் ஒரு அமைதி அல்லது ஒரு முறுவல் அல்லது புன்னகை இப்படிதான் இருக்கும். அதுவும் குழந்தைகளுடன் இருக்கும்போது சிரித்தபடிதான் இருப்பாள்.

அவள் வந்த புதிதில் பிருந்தா கூட அவளின் அப்பாவிடம் “இவங்க என்ன லூசா? எப்பவும் சிரிச்சிட்டே இருக்காங்க” என்று கேட்டு கூட இருக்கிறாள்.

“அப்பாவும் பிருந்தா குட்டியும் சிரிக்க மாட்டோம்! அது நம்மோட இயல்பு! அது மாதிரி அவங்க சிரிச்ச முகத்தோட இருக்காங்க! அவங்க இயல்பு! இப்படி எல்லாம் பேசக் கூடாது. உன் ஸ்கூல உன் ஃபிரண்ட்ஸ் சிரிக்க மாட்டாங்களா? அப்போ இப்படி தான் சொல்வியா” என்று குழந்தைக்கு விளக்கம் சொல்லி யோசிக்க வைத்திருக்கிறான்.

அப்படி இருக்கும் முகத்தில் எதற்கு இந்த கலக்கம் புரியவில்லை. கவலையாகிப் போயிற்று. தன் வார்த்தைகள் தான் தாமரையின் கலக்கத்திற்கு காரணம் என்று புரியவில்லை.

Mallika Manivannan

தெரிந்து கொள்ளாமல் வெளியே போகவும் மனதில்லை. மளமளவென்று தோசைகளை தாமரை சுட.. உண்டு முடித்தவன்.. ரூமின் உள் தயாராக சென்றவன்..

அஸ்வதி சிறு குழந்தை என்பதால் ... மித்ராவிடம் “அம்மாவை வரச் சொல்லு” என்று சொல்லி சென்றான்.

“அம்மா கூப்பிடறாங்க” என்று மித்ரா வந்து புடவையை இழுக்க.. “யாரு?” என்றாள்.

யார் என்று சொல்லாமல் மீண்டும் மீண்டும் புடவையை இழுக்க.. யார் என்று தெரியாமல் சமையலறையில் இருந்து வர.. அது அவர்களின் ரூமிற்கு இழுத்து சென்றது.

உள்ளே சென்றவள், ஆதவன் அவளை பேச அழைத்து இருப்பான் என்று எண்ணவில்லை, அஸ்வதி ஏதாவது டாய்லெட் போய் விட்டாளோ என்று அவளை அவசரமாக பக்கத்தில் சென்று ஆராய..

“அவ ஒண்ணும் பண்ணலை! நான்தான் கூப்பிட்டேன்” என்றான் ஆதவன்.

“என்ன வேணும்?” என்றாள்.

“ஒண்ணும் வேணாம்! எதுக்கு அழுத?”

“அழலையே!”

Mallika Manivannan

“சரி! அழலை! ஆனா கண்ணு ஏன் கலங்கிச்சு?” என்று பதில் தெரிந்தே ஆக வேண்டி கேட்க,

“ஒண்ணுமில்லை” என்றாள் அவளும் அதே தொனியில், பதில் சொல்ல முடியாது என்பது போல பிடிவாதமான குரலில்.

“என்ன தாமரை? சொன்னாதானே தெரியும்!” என்றான்.

“ஹப்பா! இவனுக்கு என் பெயர் கூட தெரியுமா” என்று தோன்றிய போதும் நிமிர்ந்து அவனைப் பார்க்கவில்லை. வேறு எங்கோ பார்த்து நின்றாள்.

“யாராவது ஏதாவது சொன்னாங்களா?”

“யார் எது சொன்னாலும் அதை நான் கண்டுக்கறது இல்லை”

“அப்போ நானா! நான் என்ன சொன்னேன்! நான் உன்கிட்ட அதிகம் பேசவேயில்லையே”

“என்கிட்டே நீங்க எதுவும் சொல்லலை! அப்புறம் நான் உங்களை என்கிட்டே பேச வேணாம்னு சொல்லலை!” என்றாள் அவனை நிமிர்ந்து பார்த்து, கண்கள் அவனை குற்றம் சாட்டுவது போல தோன்ற,

“என்ன சொல்ல வருகிறாள்” என்று புரியாமல் நின்றான்.

Mallika Manivannan

**. அத்தியாயம் நான்கு :**

“அதெல்லாம் சொல்ல முடியாது” என்று சொல்லி தாமரை திரும்பி நடக்கத் துவங்க, ஆதவனுக்கு வந்ததே கோபம், தாமரையை அந்த இடத்தை விட்டு அகல விடாமல் அவளின் கையை இழுத்துப் பிடித்தான்.

தாமரை இதை எதிர்பார்க்கவில்லை, பிடி மிகவும் அழுத்தமாக இருக்க, அவளால் கையை உருவ முடியவில்லை. “என்ன பண்றீங்க விடுங்க” என,

“பதில் சொல்லாம விடமாட்டேன்” என்று வார்த்தைகளை உதிர்த்து ஆதவன் பார்த்த பார்வை... உள்வரை சென்று தீண்ட, மனதில் ஒரு பயமும் நடுக்கமும் வந்தது.

அடித்து விடுவானோ? இப்படி ஒரு ஆதவனை தாமரை இதுவரை பார்த்தது இல்லை... எப்போதும் அவளை அதிக நேரம் நேருக்கு நேர் கூட பார்க்க மாட்டான்.. இந்த பார்வை அவளை பயம் கொள்ளச் செய்தது. கண்களில் மிரட்சியோடு தாமரை பார்க்க... அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் “சொல்லாம விடமாட்டேன்” என்றான் மீண்டும்.

“என்ன சொல்லலாம்? ஏதாவது சொல்லி சமாளிக்கலாம்!” என்று தாமரை யோசிக்கும் போதே,

“பொய் சொன்ன, கண்டுபிடிச்சுடுவேன், அதனால உண்மையை சொல்லு” என மிரட்டலாக பேச...

Mallika Manivannan

சொல்லிவிடுவதே மேல் என்று நினைத்து “அது! நீங்க உங்கம்மா சொன்னதாலதான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு சொன்னீங்க இல்லையா, அதான்” என்றாள்.

“ஆமாம்! சொன்னேன்! அதுதானே உண்மை!”

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தவள், “இந்தப் பொண்ணை சொன்னீங்க! என் பேர் கூட சொல்லலை!” என்றாள்.

“அது தப்புதான்!” என்று ஒத்துக் கொண்டவன்.. “பழக்கப் படுத்திக்கிறேன்” என்றான்.

ஆதவன் இவ்வளவு அவளிடம் பேசியதேயில்லை. தாமரை பேசுவது நீயா என்ற பாவனையில் பார்க்க.. பேசும் அவளின் விழிகளின் பாவனைகள் புரிந்து...

“சின்னப் பொண்ணு நீ, உனக்கு இந்த மாதிரி எதிர்பார்ப்புகள் இருக்கும்னுதான் இந்தக் கல்யாணம் வேண்டாம் சொன்னேன்.. நீ இல்லை பரவாயில்லைன்னு சொல்லி பண்ணிக்கிட்ட.. இப்போ குறையா நினைச்சா?” என்று கேள்வி கேட்க...

“நான் என்ன உங்ககிட்ட எதிர்பார்க்கிறேன்? என்ன குறை சொன்னேன்? என்று சட்டென்று கண்கள் கலங்க அவள் கேக்க...

“பார்த்தியா அழற? நீ கேட்டாக் கூட பரவாயில்லை, கேட்காத போதுதான் இப்படிச் சின்ன பொண்ணை போய்

Mallika Manivannan

கல்யாணம் பண்ணி அவ வாழ்க்கையை வீணாக்கிட்டேன்னு தோணுது” என்றான்.

இப்போது என்ன சொல்ல வருகிறான் என்று தாமரை புரியாமல் நின்றாள். “என்ன வீணாகிடுச்சு?” என்று கவலையாக கண்களில் கலக்கத்தைத் தேக்கி கேட்டாள். அவனின் பிடி வேறு வலித்தது.

அறிந்தும் அறியா மங்கை தான் தாமரை. விவரமில்லாதவள் அல்ல... அதே சமயம் எல்லாம் விவரங்களும் அறிந்தவளுமல்ல.. சில விஷயங்களில் கேள்வி ஞானம் கூட இல்லை.. நம் பெண்கள் பலருக்கு சில விஷயங்கள் புரியவைக்கப்படும் வரை அவை ரகசியங்கள்தானே!

ஆண் பிள்ளைகளுடன் பேசுவது பழகுவது தவறு என்று போதிக்கப்பட்டு வளர்ந்தவள்.. படித்ததும் பெண்கள் பள்ளி... கல்லூரி செல்லாதவள்.. ஊரோ கிராமம்...

அந்த ஊரில் பெரும்பாலானவர்களின் வேலை ராணுவத்தில்.. அப்போது கிராமத்தின் கட்டுப்பாடுகள் சொல்லவா வேண்டும்... அப்பாவும் ராணுவத்தில், அண்ணனும் ராணுவத்தில், அப்பாவின் பணியின் காலம் முடிந்து இப்போது ஒரு அரசாங்க பள்ளியில் என் சீ சீ மாஸ்டர்.. அண்ணன் நாட்டைக் காக்கும் பணியில் இறந்து உயர்ந்த கௌரவத்தை அடைந்தவன்.

இப்படி வளர்ந்ததால் தான் திருமணமாகி இந்த ஆறுமாதமாக கணவனுடன் எங்கும் வெளியில் செல்லாதது கூட ஒரு விஷயமாக தோன்றவில்லை. இன்னும் கணவன்

Mallika Manivannan

மனைவியின் அன்னியோன்னியங்களைப் பற்றி அதிகம் யோசிக்கவில்லை.

"என்ன வீணாகிடுச்சு?" என்று கேட்டவளைப் பார்த்து தடுமாறி நின்றான். என்ன சொல்லுவது என்று கூடத் தெரியவில்லை. ஆதவன் இப்போது தாமரையை தவறு செய்தவனாக கவலையாகப் பார்க்க... "வலிக்குது" என்று சொல்லவும் தான் பிடியைத் தளர்த்தி கையை விடுவித்தான்.

அமைதியான சில நொடிகள் இருவருக்குள்ளும்... ஆதவன் கையை விட்ட பிறகும் வலியில் தாமரை கையைத் தடவி விட, "சாரி! என்னைக் கடுமையா நடக்க வைக்காத. நான் உன்கிட்டன்னு இல்லை எல்லார் கிட்டயும் இப்படித்தான் புரிஞ்சு நடந்துக்கோ..." என்றவனைப் பார்த்து,

"எல்லோரும் நானும் ஒண்ணா?" என்றாள் கேள்வியாக,

"இல்லை, கண்டிப்பா இல்லை" என்றான் உடனே... ஆனால் மேலே பேச விடாமல்,

அதுவரை விளையாடிக் கொண்டிருந்த அஸ்வதி வந்து "தூக்கு" என்று கையை நீட்ட... அதைப் பார்த்த மித்ராவும் அருகில் ஓடி வர... உடனே யாரையும் தூக்க முடியவில்லை மணிக்கட்டு வலித்தது.

அவர்கள் உயரத்திற்கு குனிந்து அமர்ந்தவள், "அம்மாக்கு கை வலிக்குது! தூக்க முடியலை" என்று பாவமாக சொல்ல,

Mallika Manivannan

"நீ தூக்கு" என்பது போல தந்தையிடம் தளிர் நடையிட்டு சென்றாள் அஸ்வதி.

"இவளைத் தூக்கி வெச்சே நீ பழக்கிட்ட" என்று தாமரையிடம் சொல்லியடி அவளைத் தூக்க, மித்ரா அதை பார்த்து தான் நின்றிருந்தாள். ஆனால் அருகில் செல்லவில்லை.

அப்பாவையும் மகளையும் பார்த்தபடி மித்ரா நிற்க.. "பெரிய பெண்ணான தாமரைக்கே எதிர்பார்ப்புகள் இருக்கும்போது மித்ராவிற்கு இருக்காதா என்ன?" என்று முதல் முறையாக தோன்ற...

"நீயும் வா" என்று இத்தனை நாட்களில் ஆதவனாக அழைத்தான். அது தாமரையின் பின் சென்று மறைந்தது.

"அப்பா! கூப்பிடறாங்க மித்து, போடா!" என்று தாமரை அவளை முன் இழுத்து நிறுத்த... அப்போதும் மாட்டேன் என்பது போல தாமரையின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

எப்படியாவது ஆதவனை தூக்க வைத்து விட வேண்டும் என்று தாமரையும் மீண்டும் "அப்பா பைக்ல கூட்டிட்டு போவாங்க, பிருந்தா அக்கா மாதிரி!" என்று ஆசை காட்டினாள்..

கழுத்தைக் கட்டியவாறே மித்ரா ஆதவனைப் பார்த்தது.

"ஆமா! கூட்டிட்டு போவேன்!" என்று ஆதவனும் சொல்ல.. அப்போதும் நகரவில்லை.

Mallika Manivannan

அப்போதுதான் ஞாபகம் வந்தவனாக “எப்போ இவளை ஸ்கூல்ல சேர்க்கணும்” என்று கேட்க..

“இப்போதான் வர்ற ஜூன்ல” என்றாள்.. அப்போது மார்ச் மாதம் நடந்து கொண்டிருந்தது.

“இப்போ சொல்ற? எப்படி அட்மிஷன் வாங்கறது! முன்னாடியே சொல்ல வேண்டாமா?”

நகராட்சி மேல்நிலைப் பள்ளியின் வளர்ப்பு தாமரை. அவளுக்கு எங்கே இந்த ஐந்து மாதங்களுக்கு முன்பே ஒரு நாள் இரவு முழுக்க பெரிய கியூவில் நின்று அப்ளிகேஷன் வாங்க வேண்டும் என்று தெரியும் . “இன்னும் மூணு மாசம் இருக்கே” என்றாள்.

“சரியாப் போச்சு போ! அதெல்லாம் டிசம்பர் மாசமே முடிஞ்சிருக்கும்!” என்றான்.

“அப்போ அட்மிஷன் கிடைக்காதா?” என்றாள் கவலையாக தாமரை.

“அட்மிஷன் கிடைக்கும், ஆனா பிருந்தா ஸ்கூல்ல கிடைக்காது” என்றான்.

“என்ன கிடைக்காதா?” என்று தாமரை கேட்ட பாவனையில் அவளின் கலக்கத்தை உணர்ந்து…

Mallika Manivannan

“வேணும்னா கேட்டுப் பார்க்கலாம்” என்றான் சமாதானமாக. ஆனால் அவனுக்கு நிச்சயம் தெரியும் கிடைக்காது என்று. அங்கே அட்மிஷன் கிடைப்பது மிகவும் கடினம்.

“எப்போ கேட்கறீங்க” என்று உடனே தாமரை கேட்க..

“இன்னைக்கு முடியுமான்னு தெரியலை முடிஞ்சா வர்றேன்.. எதுக்கும் நீ வேலை முடிச்சிட்டு ரெடியா இரு” என்று சொல்லி அவன் தயாராக..

“நாங்களும் வரணுமா?” என்றாள்.

“பின்ன, குழந்தை அம்மா அப்பா எல்லோரையும் கேள்வி கேட்பாங்க” என்று சொல்ல,

“என்னது கேள்வி கேட்பாங்களா?” என்று வாயைப் பிளந்தவள், “என்ன கேட்பாங்க? எனக்கு பதில் தெரியாதே” என்றாள் கவலையாக...

“ஏதாவது கேட்டா உனக்கு தெரியலைன்னா தெரியலை சொல்லு. தப்பா சொல்லாத! இங்கிலீஷ் நல்லா பேசுவ தானே!”

“என்னது இங்கிலிஷா அதுவும் பேசறதா?”, என்று மீண்டும் வாயை பிளந்தாள். “எங்க ஊர்ல இங்கிலீஷ் பேசினா பந்தான்னு சொல்லுவாங்க. ஸ்கூல்ல கிண்டல் பண்ணுவாங்க. நான் பேச எல்லாம் மாட்டேன். தமிழ்தான் எனக்கு நல்லா வரும். இங்கிலீஷ் படிப்பேன். ஆனா அது எனக்கு ஒரு பாடம், அவ்வளவுதான்! சரளமா பேச எல்லாம் வராது” என்றாள் இன்னும் கவலையாக.

Mallika Manivannan

“யப்பா! ஒரே நாள்ல எத்தனை கவலை காட்டுறா இவ” என்று பார்த்தவன், “பசங்களுக்கு அவங்க அப்பாதான் பாடம் சொல்லி தருவார்ன்னு சொல்லு, அப்புறம் நான் பார்த்துக்கறேன்” என்றான்.

“நீங்க பதில் சொல்லிடுவீங்களா” என்று கேட்க,

அவளைப் பார்த்து முறைத்தான்.. அந்தப் பார்வையில் “அதில்ல நீங்க சொல்லிடுவீங்க” என்று அவளுக்கு அவளே சொல்லி அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

அவர்கள் இருவரும் இதுவரை பேசிய நீளமான சம்பாஷணை இதுதான்... தாமரைக்கு மனதிற்கு சற்று இதமாக இருக்க.. ஆதவன் வெளியே சென்றதும், குழந்தைகள் இருவரையும் உறங்க வைத்து விரைவாக வேலைகளை முடிக்க விரைந்தாள்.

அவள் வேக வேகமாக வேலைகளைச் செய்வதை பார்த்த மரகதம்.. “எதுக்கு இப்போவே சாதம் குழம்பு எல்லாம் வைக்கிற” என்றார்.

“அவர் மித்ரா அட்மிஷனுக்கு கேட்க ஸ்கூலுக்கு போகலாம்னு சொன்னார் அத்தை”

“என்ன ஸ்கூலுக்குப் போகறீங்களா? என் கிட்ட சொல்லவேயில்லை!”

அப்போதுதான் சொல்லாதது உரைக்க.. “மறந்துட்டேன் அத்தை!” என்றாள்.

Mallika Manivannan

“என்ன மறந்துட்ட? வேக வேகமா சமைக்கிற, அப்போ சொல்றது மட்டும் எப்படி மறக்கும்.. எல்லாம் வந்த புதுசுல நல்லாத்தான் இருக்கீங்க! அப்புறம் மட்டு மரியாதை எல்லாம் அப்படியே குறைஞ்சிடுது... ஒரு பெரிய மனுஷி இங்க இருக்காளே அவ கிட்ட சொல்லணும்னு தோணுதா? எல்லாம் அவங்க அவங்க இஷ்டம்....”

“அதுவும் பிருந்தா படிக்கிற ஸ்கூல்ல.. எவ்வளவு ஃபீஸ் தெரியுமா அங்க.. இன்னும் மூணு வருஷத்துல சின்ன குட்டியும் ஸ்கூலுக்கு போவா, எப்படி எல்லோருக்கும் ஃபீஸ் கட்டுவான். என்ன தொழில் பண்றான்னே தெரியலை அவன்..”

“எங்க கூடவும் வரமாட்டேங்கறான். உன் பங்குக்கு நீயும் தொந்தரவு குடு!” என்று நீளமாக பேசி நொடித்துப் போக...

அப்படியே நின்று விட்டாள் தாமரை.

அவளுக்கு ஆதவனை பிடிக்கிறதா இல்லையா எல்லாம் இரண்டாம் பட்சம்... திருமணம் எதற்கு, மித்ராவையும் அவளோடு சேர்த்து பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதால்தானே..

இப்போது அவளுக்கு பீஸ் அதிகம் என்றால், அப்போது இந்த திருமணத்தின் அடிப்படையே ஆட்டம் காண்கிறதே. செல்ல ஆரம்பித்தவரிடம் மெதுவாக “ஃபீஸ் பிரச்சினையில்லை..மித்ராவுக்கு அவங்கப்பாவோட பென்ஷன் வருது” என்றாள்.

Mallika Manivannan

“அப்போ என் பையனுக்கு ஃபீஸ் கட்ட வக்கில்லைன்னு சொல்றியா?” என்றார்.

தாமரைக்கு சட்டென்று கோபம் வந்தது. “என்ன பேச்சு இது? சொல்லாததை நான் சொல்கிறேன் என்கின்றது. இந்தம்மாவாக கேட்டு இந்தம்மாவாக பதில் சொல்லிக் கொள்கிறது” என்று ஆத்திரமாக வர.. அவருக்கு பதிலே கொடுக்காமல் அவள் பாட்டிற்கு வேலையை பார்க்க..

தாமரை எந்த பதிலும் பேசாததால் சண்டை வலுக்க முடியாமல் மரகதம் சென்று விட்டார். ஆனாலும் தாமரைக்கு இன்னம் அவரைப் பற்றியும்  தெரியவில்லை. அவரின் மகனைப் பற்றியும் தெரியவில்லை.

ஆதவன் ஒரு பன்னிரண்டு மணி போல வந்தவன்.. “நீ இன்னம் ரெடியாகலையா?” என்றான்.

“ரெடியாதான் இருக்கேன்” என்று அவள் சொல்ல...

“என்ன இப்படியே வருவியா? போ புடவை மாத்திக்கோ.. முகத்தை கழுவி அந்த மஞ்சள் போக வை. மித்ராக்கு மாத்தி விடு.. இப்படி எல்லாம் அங்க போக முடியாது” என்றான்.

அதற்குள் அவனின் பேச்சு சத்தம் கேட்டு வெளியே வந்த மரகதம், “ஸ்கூலுக்குப் போகறீங்களா என்கிட்ட சொல்லவேயில்லை” என்றார் மகனிடம்.

“இப்போதானே போகப்போறோம். இனிமேதானே சொல்லுவோம்” என்றான்.

Mallika Manivannan

“போய் என்ன பண்ண? உன் பொண்டாட்டி உனக்கு ஃபீஸ் கட்ட வக்கில்லைன்னு சொல்றா!” என்றார்.

“ஐயோ! இல்லை!” என்று தாமரை அவசரமாக ஆதவனைப் பார்க்க.. அவன் தாமரையிடம் பார்வையை திருப்பக் கூட இல்லை.. “என் பொண்டாட்டி தானே! சொல்லிட்டுப் போறா! இப்போ என்ன அதுக்கு?” என்று அம்மாவிடம் திரும்பப் படிக்க...

தாமரை இப்போது இருவரையும் ஆச்சர்யமாக பார்த்து நின்றாள்.. “இது என்னடா இவங்கம்மாவை விட இவர் நிறைய பேசறாரே” என்று.

“ஏண்டா ஆதவா? எப்படி மூணு பேருக்கும் ஃபீஸ் கட்டுவ”

“அது என் கவலை! உங்களுக்கு என்னமா அதைப் பத்தி. உங்க கிட்ட வந்து நிக்க மாட்டேன். சரியா!” என்றான்.

“ஏதோ நல்லதுக்கு சொன்னா புரியாதே.. ஏற்கனவே அந்தப் புள்ளைக்கே மூணாவதுக்கே எண்பதாயிரம் கட்டுற.. இப்ப இவளும்! இன்னம் ஒரு வருஷம் போனா சின்னக் குட்டி! சம்பாதிக்கிற எல்லாம் இப்படியே கொட்டுவியா?”

“எந்தப் புள்ளைக்கு? அவ என்ன பக்கத்துக்கு வீட்டு புள்ளையா? என் மக..! அப்போ நீங்கதான் எனக்கு சம்பாதிக்க வக்கில்லன்னு சொல்றீங்க!” என்று ஒரு பிடி பிடித்தவன்... “மறுபடியும் என்னைத் தனியா போற சூழ்நிலைக்குக் கொண்டு வந்துராதீங்க” என்று சொல்ல...

Mallika Manivannan

மரகதம் அப்படியே கப்பென்று வாயை மூடிக் கொண்டார்.. பின்னே தாமரை மாதிரி வேலை செய்ய ஆள் தேடினாலும் கிடைக்காது.. அவள் திருமணமாகி வந்த பின்தானே அவருக்குச் சமையல்கட்டில் இருந்து விடுதலை. சுகன்யா இருந்த போதும் சுமதி இருக்கும் போதும் அவர்தான் செய்தார். அதை கெடுத்துக் கொள்வாரா என்ன?

“எப்படியோ போங்க! ஒரு பெரிய மனுஷி சொன்னா கேட்கறீங்களா?” என்று ஜகா வாங்கிவிட..

“பெரிய மாமா எப்படி அவங்கம்மாவுக்கு பதில் கொடுக்கறாங்க! என் வீட்டுக்காரரும் இருக்காரே. ஒரு வார்த்தை அம்மாவை எதிர்த்து பேசுறாரா?” என்று இதைப் பார்த்திருந்த சுமதி நினைத்துக் கொண்டாள்.

பின்னே இப்போது கர்ப்பமாக இருக்கிறாள் என்றுதான் சுமதிக்கு பேச்சுக்கள் குறைவாக விழுகிறது.. இல்லையென்றால் அவளுக்கும் இதே கதிதான். ஆதவனாவது மனைவிக்காக பரிந்து பேசுகிறான். சேரன் எல்லாம் அம்மா என்ன சொன்னாலும் தலையாட்டி சுமதியைத் தான் திட்டுவான்.

மரகதமும் சுமதியும் அந்த இடத்தை விட்டு அகன்றதும், “இல்லை நான் அப்படி எல்லாம் சொல்லலை” என்று தாமரை விளக்கம் கொடுக்க முற்பட..

“எங்கம்மா எப்படி பேசும்னு எனக்குத் தெரியும்.. நீ சொல்லியிருக்க மாட்ட ஏன்னா நான் என்ன சம்பாதிக்கறேன்னு உனக்குத் தெரியாது, அப்படியே சொல்லியிருந்தாலும் எங்கம்மா

Mallika Manivannan

அந்த வார்த்தை சொல்ல வைக்கிற மாதிரி பேசியிருக்கும்” என்று சொல்ல..

“யப்பா! ஒரு நாளுல இப்படி நம்மை கண்ணை கட்ட வைக்கிறாரே இவரு” என்று அசந்து பார்த்து நின்றாள்.

இருவரும் ஒருவரைப் பற்றி ஒருவர் ஒரே மாதிரி நினைத்தனர்.

“என்ன பார்த்துட்டு நிக்கிற, கிளம்பு!” எனவும்.. வேகமாக உள்ளே சென்றவள், “இந்தப் புடவையே நல்லாத்தானே இருக்கு. இன்னும் எதைக் கட்ட” என்று அவளின் அலமாரியை திறந்து பார்த்து நிற்க.... அவளுக்கு தெரியவில்லை எதை கட்டுவது என்று..

அஸ்வதியையும் அழைத்து செல்ல வேண்டும் என்பதால் அவளுக்கு உடை எடுக்க உள்ளே வந்தவன் தாமரை அப்படியே நிற்பதை பார்த்து “என்ன?” என்றான்.

“என்ன கட்டுறதுன்னு தெரியலை?” என்று முழிக்க,

“தள்ளு” என்றவன்... அவனே ஒன்றை எடுத்துக் கொடுத்து “இது கட்டு” என்றான். “ஆ” என்று மீண்டும் வாய் பிளந்து நின்றாள். ஒரே நாளில் இத்தனை அதிர்ச்சிகளை எப்படி தாங்குவாள் தாமரை.

வேகமாக அஸ்வதியின் உடைகளை ஆராய்ந்து ஒன்று எடுத்தான், அவளுக்கு மாற்றி விட அஸ்வதியை தூக்கி வெளியே போகப் போனவன் “மித்ராக்கு” என்று கேட்க..

Mallika Manivannan

“நீங்களே எடுத்துக் கொடுங்க” என்றாள் தயங்கித் தயங்கி.

வேகமாக அவளுக்கும் ஒன்றை எடுத்தவன்.. “சீக்கிரம் பத்து நிமிஷத்துல ரெடியாகணும்” என்றான்.

வெளியே போகப் போகிறோம் கணவனுடன் என்பது அவ்வளவு உற்சாகத்தைத் தர, “சரி” என்று சொல்லி மித்ராவை தயார் படுத்தி அவளும் மாற்றி என்று மின்னல் வேகத்தில் கிளம்பினாள்.

ஒரு வயர் புட்டியுடன் கிளம்பி நின்றவளை பரிதாபமாக பார்த்தான்.. “இதை தூக்கிப் போனா, அந்த செக்யுரிட்டி உள்ளயே விட மாட்டான்.. என்ன பொண்ணு போ நீ, வெளில நாலு மனுஷங்களை பார்ப்பியா மாட்டியா நீ” என்று கடிந்தவன்..

“வேற இல்லை” என்று தாமரை நிற்க..

இதுவரை தான் எதுவுமே அவர்களுக்கு வாங்கியதில்லை என்று புரிய... இன்னும் நாகரீகங்களுக்கு அவளும் பழக்கப் படவில்லை என்று புரிந்தது. தாமரையின் ஊர் ஒரு கிராமம் அது தெரியும், இன்னும் மற்ற விவரங்கள் அவன் கேட்டுக் கொண்டதில்லை.

தான் தன்னைப் பற்றி சுகன்யாவைப் பற்றி அதிகம் நினைப்பதை விட்டு, இனியாவது இவர்களை கவனிக்க வேண்டும் என்று மனதிற்குள் நினைத்தான், காலம் எல்லாம் சரியாகக் கொண்டு செல்ல வேண்டும் என்ற வேண்டுதலோடு.

Mallika Manivannan

**அத்தியாயம் ஐந்து :**

மித்ராவை ஆதவன்  பைக்கில் முன் அமர்த்திக் கொள்ள... குழந்தைக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. தாமரை அஸ்வதியை மடியில் வைத்து அமர்ந்து கொண்டாள்.

கணவனுடன் முதல் பைக் பயணம்.. திருமணமாகி வந்த போது வீட்டில் இருக்கும் அம்பாசிடர் காரில்தான் அழைத்து வந்தார்கள். இரண்டொரு முறை அம்மா வீட்டிற்கு சென்ற போதும் அம்பாசிடர் பயணம்தான். அஸ்வதியை ஒரு முறை, மித்ராவை ஒரு முறை என்று ஹாஸ்பிடல் அழைத்து சென்ற போதும் அம்பாசிடர் பயணம்தான்.

இப்போதும் அம்பாசிடரை நினைத்து தாமரை வர,  ஆதவன் புல்லட்டை எடுத்து இருந்தான். தாமரையின் முகமும் மகிழ்ச்சியில் விகசித்தது.

குழந்தைகள் இருப்பதால் மிகவும் மிதமான வேகத்தில் ஆதவன் பைக்கை செலுத்த... தாமரை அந்தப் பயணத்தை அனுபவித்தபடி வந்தாள். புல்லட் மதுரை மாநகரின் போக்குவரத்தில் சீராக சென்றது. குழந்தைகளை விட தாமரை வேடிக்கை பார்த்ததுதான் அதிகம்.

ஸ்கூல் முன்பு பைக்கை நிறுத்த... செக்யுரிட்டி “இப்பல்லாம் யாரையும் உள்ள விட முடியாது” என்றான்.

“கரஸ்பாண்டன்ட் மேடம் இருக்காங்களா” என்று கேட்டு, “ஆதவன் செங்கல் சப்ளை பண்றவர்ன்னு சொல்லுங்க. வர

Mallika Manivannan

சொன்னா உள்ள போறோம் இல்லை இப்படியே போயிடறோம்" என்றான்.

அவன் கேட்டில் இருந்த போன் மூலம் கேட்டு உள்ளே அனுப்பினான்.

அங்கே சென்று வெயிட்டிங் ரூமில் கிட்டத்தட்ட அரைமணிநேரம் காத்திருந்த பிறகு உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். அஸ்வதி உறங்கியிருக்க.. மித்ரா எல்லாம் பார்வையிட்டபடி அமைதியாகத்தான் வந்தாள். தாமரையும் ஒரு மாதிரி பதட்டத்தில் இருந்ததால் பேசவில்லை. அவளுக்கு என்ன கேள்வி கேட்பார்கள் என்ற பதட்டம் மட்டுமே ஸ்கூலுக்குள் நுழைந்த பிறகு.

நால்வரும் உள்ளே நுழைந்தனர்.

ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி அமர்ந்திருந்தவர்... "வாங்க ஆதவன்! எப்படி இருக்கீங்க?"

"நல்லா இருக்கேன் மேடம்" என்றான்.

"உட்காருங்க" என்றவர், "என்ன விஷயம்?" என்று நேரடியாக பேச்சிற்கு வர..

"மேடம்! இது என் பொண்ணு மித்ரா! இவளுக்கு அட்மிஷன் வேணும்.. முன்னாடியே வராததுக்கு மன்னிக்கணும்" என்றான்.

"என்ன ஆதவன்? நம்ம ஸ்கூல் பத்தி உங்களுக்குத் தெரியாததா.. இப்போ எப்படி அட்மிஷன் கொடுக்க முடியும்..

Mallika Manivannan

கண்டிப்பா முடியாது!" என்றவர், "இவங்க யாரு?" என்றார் தாமரையை பார்த்து,

அவருக்கு சுகன்யாவைத் தெரியும்.. ஆதவன்தான் அந்தப் பள்ளியின் புது கட்டிடத்திற்கு செங்கல் சப்ளை செய்தான் மிகவும் குறைந்த விலையில்.

"என் மனைவி மேடம்" என்றவன், "சுகன்யா இப்போ இல்லை" என்றான்.

"என்ன?" என்றார் அதிர்ச்சியாக.. சுகன்யா ஒரு வகையில் நாகரீக மங்கை, பட்டப் படிப்பு படித்தவளும் கூட.. தாமரையிடம் அவரால் நடை உடை பாவனையில் நாகரீகத்தையும் காண முடியவில்லை... படித்திருப்பது போலவும் தெரியவில்லை.

"இப்போ சீட் முடியாது ஆதவன்! அதுவுமில்லாம பேரன்ட்ஸ் கண்டிப்பா படிச்சிருக்கணும், உங்களுக்குத் தெரியாததில்லை" என்றார்.

ஆதவன் இதை எதிர்பார்த்திருந்தான், ஆனாலும் ஒரு முயற்சி செய்து பார்ப்போமே என்றுதான் அழைத்து வந்தான்.

ஆதவன் அமைதியாக இருக்க.. தாமரை "மேடம்! படிக்கப் போறது மித்ரா! அப்பா அம்மா எதுக்கு படிச்சிருக்கணும், அதுமில்லாம ஸ்கூல்லதானே சொல்லிக் குடுக்கப் போறாங்க" என்றாள் அந்த கரஸ்பாண்டன்ட்டைப் பார்த்து..

Mallika Manivannan

அவர் இதை எதிர்பார்க்கவில்லை.. அவரிடம் இப்படி யாரும் கேட்டதும் இல்லை. தாமரை சண்டை இடுவது போலவோ இல்லை கேள்வியாகவோ கேட்கவில்லை.

மிகவும் யதார்த்தமாக, அதே சமயம் மரியாதை சற்றும் குறையாமல் இருந்தது பேச்சு.

ஆதவன் "ஷ், பேசாம இரு!" என்று அதட்டினான்.

தாமரை அமைதியாக, "பேசட்டும் விடுங்க ஆதவன்!" என்றார் அந்த தாளாளர்.

"மித்ரா அந்த பொம்மை பாரு" என்று தாமரை அங்கே இருந்த ஒரு பழங்காலப் பொருளை பார்க்க அனுப்பினாள்.

மித்ரா ஆர்வமாகப் போக.. "நாங்க தான் மேடம் அவளோட அப்பா அம்மா, அவளுக்கு அப்படித்தான் சொல்றோம். ஆனா அவ என் அண்ணா பொண்ணு, அண்ணா நல்லா படிப்பாங்க! அந்த புத்திசாலித்தனம் அவகிட்டயும் இருக்கும்.. அண்ணா ராணுவத்துல இருந்தாங்க.. ஒரு சண்டைல தீவிரவாத தாக்குதல்ல இறந்துட்டாங்க!"

"அவங்க அம்மா"

"அவங்களும் இல்லை! மித்ரா பிறக்கும்போதே அண்ணி இறந்துட்டாங்க" என்றாள்.

ராணுவத்தில் இருந்து நாட்டைக் காக்கும் பணியில் இறந்தவனின் மகளுக்கு சீட் கொடுக்காமல் இருப்பது இந்திய

Mallika Manivannan

நாட்டு பிரஜை என்ற முறையில் மட்டுமல்லாமல் தார்மீக ரீதியாக மிகவும் தவறு என்று நினைத்த தாளாளர்,

“நான்தான் கரஸ்பாண்டன்ட் இருந்தாலும் பிரின்சிபல் தான் சீட் கொடுக்கறது எல்லாம், அவங்க கிட்ட கலந்து ஆலோசிச்சிட்டு சொல்றேன்” என்றார்.

“சரி” என்பது போல தலையசைத்த ஆதவன், “திரும்ப எப்போ மேடம் வரட்டும்” என்றான்.

“அடுத்த வாரம் திங்கக்கிழமை வாங்க! மோஸ்ட்லி ஃபீஸ் கட்டுற மாதிரி வந்துடுங்க!” என்றார்.

அதிலேயே அவர்களின் மறைமுக சம்மதம் தெரிய “நன்றி மேடம்” என்றாள் தாமரை.

அவர்களை வெளியே அனுப்பி விட்டு ஆதவன், அந்தத் தாளாளரிடம் “சாரி மேடம்! அவளுக்கு இன்னும் ஆளுங்க பழகலை! யார்கிட்ட எப்படி பேசணும் தெரியலை! நீங்க எதுவும் தப்பா எடுத்துக்காதீங்க” என்று மன்னிப்பு கேட்டான்.

“இல்லை! அவங்க பேசினதால மட்டும்தான் நான் தப்பா எடுக்கலை! அதுதான் உண்மை! ஏன்னா அட்மிஷன் டைமில் எங்களுக்கு நிறைய டென்ஷன்ஸ். நான் டொனேஷன் வாங்கறதில்லை, ரெகமண்டேஷன் எடுக்கறதில்லை.. சீட் ரெஸ்ட்டிரிக்ட் பண்ண ரூல்ஸ் போட வேண்டியிருக்கு, நாங்க மட்டும் என்ன பண்ண! எல்லாருக்கும் அவங்க அவங்க கஷ்டங்கள் வெளில இருக்குறவங்களுக்குப் புரியாது..” என

Mallika Manivannan

மீண்டும் அவரிடம் ஒரு மன்னிப்பை கேட்டு வந்தான்.. என்ன செய்வது? மகள் படிக்கிறாள்! இப்பொழுது இன்னொருவளும் படிக்கப் போகிறாள்.. சிறு மனக் கசப்பும் வேண்டாம் என்று தோன்ற பேசி வந்தான்.

ரூமை விட்டு வெளியே வந்ததும், தாமரைக்கு திட்டு வேறு விழுந்தது. "யார் கிட்டயும் இப்படி யோசிக்காம அதிகப்ரசங்கித்தனமா பேசக் கூடாது, பொண்ணு நல்லா படிப்பான்னு சொல்லு, அவங்கப்பா பத்தி சொல்லு, ஆனா பொண்ணுதானே படிக்கப் போறா அப்பா அம்மா எதுக்குப் படிக்கணும், இப்படி எல்லாம் பேசக் கூடாது" எனக் கடிக்க,

"நான் உண்மையைத் தானே சொன்னேன்" என்றாள் தயங்கித் தயங்கி,

"உண்மை தான்! ஆனா எல்லா நேரத்திலும் எல்லா இடத்திலும் உண்மை பேச முடியாது! ஸ்கூல் உள்ள கூட யாரையும் இந்த நேரத்துக்கு விட மாட்டங்க! யாரும் அவங்களை இப்படி ஈசியா பார்க்கவே முடியாது".

"ஏதோ நம்ம மேல நல்ல அபிப்ராயம் இருக்கவும்தான் விடறாங்க! நீ அவங்களைக் கேள்வி கேட்பியா! ஊர்ல ஆயிரம் ஸ்கூல் இருக்கு! கவர்மென்ட் இலவசமா கல்வி கொடுக்குது! அதையெல்லாம் விட்டு நாமளா இங்க வந்து, அப்புறம் கேள்வி வேற கேட்போமா! நம்மளை அவங்களா கூப்பிட்டாங்க! இனிமே இப்படிப் பேசக் கூடாது! இப்போ நான் மன்னிப்பு வேற கேட்டுட்டு வர்றேன்" என்று மீண்டும் சுள்ளென்று சொல்ல,

Mallika Manivannan

“சரி” என்று ஆதவனிடம் தலையாட்டி விட்டாலும், “நான் ஒண்ணும் தப்பா பேசலை” என்பதுதான் தாமரையின் எண்ணம். ஆனாலும் ஆதவன் மன்னிப்பு கேட்டது மனதை உதைக்க அமைதியானாள்.

அவர்கள் பள்ளியை விட்டு வெளியே வந்த நிமிடம் ஆதவனின் தொலைபேசி அடித்தது.. எடுத்ததும் “எய்யா ஆதவா! காலையில் நாம் ஃபோன் பண்ணினோம் தானே! அவன் ஆளுங்களை கூட்டிட்டு வந்து தகராறு பண்றான்யா.. எல்லா பணமும் குடுத்துட்டேன்னு எழுதிக் குடுன்றான்”

“அவன் கிட்ட பேச்சு குடுத்துட்டே இருங்க! நான் வர்றேன்!” என்று பேசிக் கொண்டே வண்டியைக் கிளப்பி இருந்தான். “நல்லாப் பிடிச்சிட்டு உட்காரு” என்று தாமரையிடம் சொன்னவன் வந்ததை விடவும் வேகமாக சென்றான்.

அங்கிருந்து சற்று அருகில்தான்.. பத்து நிமிடத்தில் இடத்தை அடைந்து விட்டனர்.

அது அவர்களின் செங்கல் சூளை.. ஆம்! அதுதான் அவர்களின் பரம்பரைத் தொழில்... இப்போது ஐந்து வருடமாக ஆதவன் அதில் இல்லை.. அவனுக்கு அதைத் தவிர வேறு தெரியாது! அதனால்தான் வேறு தொழில் செய்யும்போது அவனால் சோபிக்க முடியவில்லை! ஏறுவதும் இறங்குவதும் மீண்டும் ஏறுவதுமாக இருந்தான்.

Mallika Manivannan

பரந்து விரிந்த இடம்... ஆங்காங்கே ஆட்கள் வேலை செய்து கொண்டு இருந்தனர்.

அங்கிருந்த ஒற்றை ஆபிஸ் ரூமிற்கு சென்றான்... தந்தை பதட்டத்தோடு இருந்தார்.சேரனும் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்து நின்றிருந்தான்.

எதிரில் ஒரு நான்கைந்து பேர் அமர்ந்திருக்க, கூட இரண்டு பேர் நின்றும் இருந்தனர்.

ஆதவன் அங்கே சென்று நிற்க, எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். அவர்களிடம் பேசாமல் "அப்பா வெளில வாங்க! அஸ்வதி தூங்கறா! தாமரையும் மித்ராவும் இருக்காங்க! அவங்க இங்க இருக்கட்டும்!" என்றான்.

"என்ன அவங்க வந்திருக்காங்களா?" என்று சேரனும் அழகரும் எழுந்து வந்தனர், தாமரை அஸ்வதியை தோளில் போட்டிருக்க மித்ரா அவளின் புடவையை பிடித்து நின்றிருந்தது.

"உள்ள வாங்க அண்ணி" என்று சேரன்தான் உடனே அவர்களை அழைத்தான்.. ஆட்கள் இருப்பதால் தாமரை தயங்க..

"அண்ணாச்சிங்களா, கொஞ்சம் வெளில வாங்க!" என்று ஆதவன் குரல் கொடுக்க "யாருடா, இவன் புதியவன்" என்பது போல ஆட்கள் பார்த்தாலும் வெளியே வந்தனர்.

"உள்ள போ!" என்று தாமரையைப் பார்த்து சொன்னவன், வேலையாளை அழைத்து "அவங்களுக்கு ஜூஸ் வாங்கிக் கொடு"

Mallika Manivannan

என்று  பணித்து பின்புதான் அந்த ஆட்களை பார்த்து திரும்பினான்.

“ம்! சொல்லுங்க!” என்றான் அவர்களைப் பார்த்து

“என்னங்க அய்யா! யாரோ போலிஸ் கூப்பிடுவீங்கன்னு நினைச்சா! இவரு யாரு?” என்றான் நக்கலாக.

“யாருப்பா நமக்குப் பணம் கொடுக்கணும்!” என்று அழகரை பார்த்துக் கேட்டான்.

அவர் ஆளைக் காட்டினார். பேசியவன் அவன் இல்லை, பணம் கொடுக்க வேண்டியவனைப் பார்த்து “பேச்சு உனக்கும் எனக்கும் மட்டும்தான்! வேற எவனும் இங்க இருக்கக் கூடாது. எல்லோரையும் இடத்தை காலி பண்ணச் சொல்லு!” என்று சொல்லிக் கொண்டே அவன் வேஷ்டியை மடித்துக் கட்டிய விதத்தைப் பார்த்து எதிரில் இருப்பவர்களுக்குச் சற்று பயம் வந்தது.

அழகர் வேறு “ய்யா! கை வெச்சிடாதைய்யா! பேசித் தீர்த்துக்கலாம்!” என்று சொல்ல..

அங்கே சட்டென்று ஒரு அமைதி.. இப்படி ஒருவனை இங்கே அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

எல்லாவற்றையும் ஜன்னல் வழியாக தாமரை பார்த்துக் கொண்டு இருந்தாள்.. பயத்தோடு அல்ல சுவாரசியமாக. “பெரிய சண்டியரு கணக்கா பில்ட் அப் கொடுக்கறாரு” என்று நினைத்தபடியே.

Mallika Manivannan

நிஜமாகவே ஆதவன் அப்படித்தான்... எதிரில் இருப்பவன் பேசிக் கொண்டு இருக்கும் போதே கை வைத்து விடுவான்..

சுகன்யாவைத் திருமணம் செய்த பிறகு அவனை எந்த வம்பு தும்புக்கும் போக சுகன்யா விட்டதில்லை. சுகன்யா இறந்த பிறகு அந்த அதிர்ச்சியில் அவனாக எதற்கும் சென்றதில்லை. இப்போது தானாக ஒரு விஷயம் வர அவனின் இயல்பு குணம் வெளியே வரத் துவங்கியது.

"ம்! என்ன விஷயம் சொல்லு!" என

அசட்டு துணிச்சலில் ஒருவன் "நாங்க பணத்தைக் குடுத்துட்டோம்! அதை எழுதிக் குடுங்க!" என்றான்.

"வாட்ச்மேன் கேட்டை இழுத்துச் சாத்து!" என்று ஒரு சத்தம் கொடுக்க...

அதற்காகவே காத்திருந்தது போல வாட்ச்மேன் கேட்டை சாத்தினான்.

"இப்போ சொல்லு! யாரு யாருக்கு பணம் கொடுக்கணும்!" என்று பேசியவன் அருகில் சென்றான்..

"நாங்க பணம் குடுத்துட்டோம்! நீங்க எழுதிக் குடுங்க" என்று மீண்டும் அவன் சொல்ல.. அவன் வார்த்தையைக் கூட முடிக்கவில்லை... ஆதவன் விட்ட உதையில் தூரப் போய் விழுந்திருந்தான்.

Mallika Manivannan

அந்த ஆக்ரோஷத்தில் வந்தவர்களுக்கு பயம் பிடிக்க துவங்கியது. அங்கு செங்கல் சூளையில் இருந்த ஆட்கள் எல்லோரும் குழுமி விட்டனர். கிட்டத்தட்ட இருபது பேர் இருக்க..

பணம் கொடுக்க வேண்டியவன் “கை எல்லாம் வைக்காதீங்க! எதுன்னாலும் பேசி தீர்த்துக்கலாம்!” என்றான்.

“அப்புறம் எதுக்குடா இவன்களை கூட்டிட்டு வந்த... சூளையில வெச்சு எரிச்சிருவேன்” என்றான்.

“இருங்க! இருங்க! பேசலாம்!”

“என்ன பேசறது? பேசறதுக்கு ஒன்னுமில்லை.. பணம் வந்தா நீங்க வெளில போகலாம்! இல்லை எவனும் இந்த இடத்தை விட்டுப் போக முடியாது! ஆனதை பார்த்துக்கங்கடா!” என்றான்.

இப்படி ஆகும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.. மூன்று வருடமாக அழகரிடம் செங்கல் வாங்குகிறான். அவரின் மகன் சேரனை தெரியும். இருவரும் பார்க்க பிரச்சினை வந்தால் ஓடுபவர்கள் போல தோன்ற பணம் அதிகமாக பாக்கி சேர்ந்ததும் கொடுக்க முடியாது என்று இழுத்தடித்தான்.

காலையில் அவர்கள் விடாமல் போன் செய்ததும், “பணம் நான் கொடுக்க மாட்டேன்! ஆனா நீங்க கொடுத்துட்டேன்னு எழுதிக் குடுங்க!” என்று வாங்க வந்தான். ஆதவனைப் போல ஒருவனை எதிர்பார்க்கவில்லை.

Mallika Manivannan

“நான் எங்க அசோசியேஷன்ல கம்ப்ளையின்ட் பண்ணுவேன், நீ என்னை மிரட்டுறேன்னு” என்று அப்போதும் விடாமல் சொல்ல...

“அப்படியா நல்லாதா போச்சு! பண்ணுடா!” என்றான் அசராமல்.

“என் பின்னாடி ஒரு கூட்டமே இருக்குடா! என்னை யாருன்னு நினைச்ச” என்று சொல்லியபடி அவன் செல் ஃபோனை எடுக்க..

தாமரைக்கு கவலையானது.

**அத்தியாயம் ஆறு:**

“ஐயோ யாரை வரச்சொல்றாங்க பிரச்சினை பெருசாகிடுமோ” என்ற கவலையோடு தாமரை பார்த்திருக்க...

பத்து பதினைந்து நிமிடத்தில் எதிர்பார்த்தவர்கள் வந்தார்கள்.. அந்த அஸோசியேஷனின் பிரசிடென்ட்டும் செக்ரடரியும்.

வந்தவர்களைப் பார்த்து “அண்ணே! இந்தப் பய என்னை மிரட்டுறாண்ணே! வெளிய விடாம உள்ள பூட்டிட்டாண்ணே” என்று சொல்ல,

“நீ என்ன பண்ணின” என்றனர்.

Mallika Manivannan

“என்ன அண்ணே? நான் என்ன வேணா பண்ணியிருக்கட்டும் என்னை மிரட்டுறான்னு சொல்றேன். அதை விட்டு என்னைக் கேள்வி கேட்கறீங்க”

“ஆதவன் காலையிலயே வந்து உன் மேல அசோசியயேஷன்ல கம்ப்ளையின்ட் குடுத்துட்டுப் போயிட்டான்.. பணம் குடுக்க மாட்டேன் ஆனதை பார்த்துக்கோன்னு சொன்னியாமே.. உன்னை மாதிரி சில ஆளுங்களால எங்க எல்லோருக்கும் கெட்ட பேர், பணத்தை எப்போ குடுக்கற” என்றனர் இருவரும்.

அப்போது தான் வாயை திறந்தான் ஆதவன்.. “வந்ததுக்கு ரொம்ப நன்றிண்ணே! நானும் பேசி தீர்த்துக்கலாம்ன்னு தான் உங்களை வந்து பார்த்தேன். ஆனா இந்தப் பய ஆளுங்களை கூட்டிட்டு வந்து மிரட்டுறான். யார் என்னன்னு தெரியாம விளையாடிட்டான். இனி பணம் வராம இந்த பயலை நான் இந்த இடத்தை விட்டு அனுப்ப மாட்டேன் அண்ணே. நீங்க தப்பா எடுக்கக்கூடாது” என்றான் பணிவாக.

யாரிடம் எப்படிப் பேச வேண்டும் என்று தெரிந்தவன்.

“அப்போ அப்படியே என்னை விட்டுடுவீங்களா?” என்று ஏகத்துக்கும் பணம் கொடுக்க வேண்டியவன் எகிற,

“எங்களால ஒண்ணும் பண்ண முடியாது, ஆதவன் பேசறது தப்பில்லை...” என்று கையை விரித்து விட்டனர்.

Mallika Manivannan

வேறு வழியே இல்லாமல் யாருக்கோ அழைத்து பணத்தைக் கொண்டு வரச் சொன்னான்.

ஒரு மணிநேரம் ஆனது பணம் வர... அதற்குள் அஸ்வதி வேறு விழித்துக் கொண்டு அழ.. “இப்போல்லாம் எங்கயும் போக முடியாது.. அவளை சமாதானம் செய். ஏதாவது பிஸ்கட் கொடு” என்று தாமரையையும் அதட்டினான்.

“என்னை என்னத்துக்கு இவர் திட்டுறாரு” என்று மனம் சுணங்கிய போதும் முகத்தில் எதையும் காட்டாமல் ஆதவன் சொன்னதை செய்தாள்.

வந்து பணம் கொடுத்த பிறகுதான் அவர்களை விட்டான். “ஆழம் தெரியாம காலை விடாத” என்று அவனை மீண்டும் மிரட்டி அனுப்பி..

“தேங்க்ஸ் அண்ணே!” என்றான் ப்ரெசிடென்டையும் செக்ரடரியையும் பார்த்து.

“மிரட்டறது தப்பு ஆதவா, நம்ம நேரம் சரியில்லன்னா ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிடும்” என்றனர் அவனையும் பார்த்து.

“என்ன செய்யட்டும் அண்னே! நானா போனேன்! அவனா வந்து சிக்குறான், என்ன செய்ய?” என்றான் சிரிப்புடன்.

“சரி, விடு! தொழிலுக்கு வந்துட்டியா?” என்றவர்களைப் பார்த்து,

“இல்லைண்ணே” என்றான்.

“ஏன் ஆதவா?”

“அப்பாக்கும் எனக்கும் ஒரு சின்ன மனஸ்தாபம். அதான் விலகிட்டேன்”

“சரி, விலகிட்ட, ஆனா வேற தொழில் ஏன் போற?”

“அப்பாக்கு போட்டியாயிடக் கூடாது, இல்லையாண்ணே”

“அடப் போப்பா! வேற செங்கல் சூளையே மதுரையில இல்லையா என்ன? அவர் ஒரு பக்கம் செஞ்சா நீ ஒரு பக்கம் செய்..” என்று சொல்லி அவர்கள் சென்றனர்.

Mallika Manivannan

அதன் பிறகே மனைவியின் புறமும் மக்களின் புறமும் திரும்பினான்.

எல்லாவற்றையும் ஜன்னல் வழியாக பார்த்து கேட்டு இருந்தாள் தாமரை. “எல்லார்கிட்டயும் நல்லாதான் பேசறாரு, இன்னைக்கு காலையில இருந்துதான் நம்மகிட்ட கொஞ்சம் பேசறாரு” என்று யோசித்தபடியே பார்த்து இருந்தாள்.

பிள்ளைகளின் முகத்தில் பசியின் சோர்வை பார்த்தவன்.. பணத்தை அப்பாவிடம் கொடுத்து உடனே கிளம்பினான்.

வீடு நோக்கி புல்லட்டை செலுத்திக் கொண்டு இருந்தவன் மனதில் அவர்கள் பேசியதுதான் மனதில் ஓடிக் கொண்டு இருந்தது. “நீ ஒரு பக்கம் செய். உங்கப்பா ஒரு பக்கம் செய்யறாரு. ஏன் வேற தொழிலுக்கு போகிற?” என்பதே.

பல முறை தொழிலில் சரிவை சந்தித்தபோது சுகன்யாவும் இதைத்தான் சொல்வாள், “தெரியாதது ஏன் செய்யறீங்க... தெரிஞ்சதை செய்ங்க!” என்று.

ஆனால் ஆதவன் கேட்டுக் கொண்டது இல்லை. இப்போது செய்யலாமோ என்ற யோசனை மனதில் ஓட ஆரம்பித்தது.

அந்த யோசனைகளில் இருந்ததால் சுற்றுப்புறம் கவனிக்கவில்லை. மீண்டும் தனக்குள் சுருங்கிக் கொண்டான். எப்பொழுதும் போல வீடு வந்ததும் தாமரையிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அவன் பாட்டிற்கு அவனே அமர்ந்து சாதத்தை போட்டு உண்டு மீண்டும் வெளியில் கிளம்பிவிட்டான்.

தாமரைக்கும் மக்களை கவனிக்க நேரம் சரியாகப் போய்விட்டது. மாலையில் பிருந்தா வர, அவர்களின் பள்ளி வந்த விவரத்தை தாமரையாகப் போய் சொன்னாள். “அப்பா வந்தாரா? என்னை ஏன் பார்க்கலை!” என்று பிருந்தா எதிர் கேள்வி கேட்க..

“நான் கேட்டேன்! விடமாட்டாங்க சொல்லி கூட்டிட்டு வந்துட்டார்!” என்று சொன்ன போதும் பிருந்தாவின் முகம் சுணக்கம் காட்டியது.

“ஆமா! விட மாட்டாங்க!” என்றாள் அவளும் கூடவே.

“மித்ராவை அங்கதான் சேர்க்கப் போறோம் பிருந்தா. நீதான் அவளைப் பார்த்துக்கணும்” என்று சொல்ல..

Mallika Manivannan

“எங்க ஸ்கூல் வந்தா நீ இப்படி எல்லாம் குறும்பு செய்யக் கூடாது” என்று பெரிய மனுஷியாக பிருந்தா மித்ராவிடம் சொல்ல..

அதற்கு என்ன புரிந்ததோ, அக்கா சொல்லவும் தலையைத் தலையை ஆட்டியது. “எங்க ஸ்கூல் அப்படி, இப்படி” என்று பிருந்தா சற்று பெருமை பேச... அதை பார்த்த தாமரைக்கு புன்னகை மலர்ந்தது.

அஸ்வதி, மித்ரா, பிருந்தா என்று மூவரும் சற்று நேரம் விளையாட அங்கே ஓரே சத்தம்.. அதுவும் அஸ்வதி வீல் வீல் என்று கத்துவாள். சற்று நேரம் பொறுமையாக இருந்த மரகதம்.. “சத்தம் போடாம விளையாடுங்க” என்று ஒரு அதட்டல் போட.. அதன் பிறகு குழந்தைகளின் சத்தம் இன்னும் கூடியது.

அங்கொன்றும் இங்கொன்றுமாய் சாமான்களை வேறு வீட்டு ஹால் முழுவதும் பரப்பினர்.. பேப்பர்களை கிழித்து குப்பையாக்கினர்..

சொல்லிச் சொல்லி பார்த்தவர் முடியாமல், தாமரையிடம் அதட்டல் போட்டார், “அவங்களைச் சத்தம் போடாம விளையாட சொல்லு! நான் டீவி பார்க்கணும்!” என்று..

“ஷ்! மெதுவா பேசுங்க!” என்று தாமரையின் அதட்டல் சற்று வேலை செய்ய அமைதியாக விளையாடினர்.

Mallika Manivannan

ஏழு மணி ஆனதும் “சாப்பிடலாம் வாங்க” என்று அவர்களை அந்த இடத்தை விட்டு அகற்றி.. அவர்களுக்கு உணவு கொடுக்க ஆரம்பிக்க..

அப்போதுதான் சேரனும் அழகரும் வீடு வந்தார்கள்.. மரகதத்திடம் விஷயம் சொல்ல “என்ன பணம் வசூல் ஆகிடுச்சா?” என்று வாயைப் பிளந்தார் .

“இந்தம்மா எதுக்கு இப்படி வாயப் பிளக்குது! நமக்குதான் அவரைப் பத்தி எதுவும் தெரியாது! வாயைப் பிளக்கிறோம்! இவங்களுக்கு அவங்க பையனைப் பத்தி தெரியாதா?” என்று மனதிற்குள்ளேயே தலையில் அடித்துக் கொண்டாள் தாமரை.

அவளுக்கு என்ன தெரியும்? ஆதவனை யாராலும் கணிக்க முடியாது என்று. செய்வான் என்று நினைத்தால் செய்ய மாட்டான். செய்ய மாட்டான் என்று நினைத்தால் செய்வான்.. எல்லாம் அவன் எண்ணம்தான்.

சுகன்யா நிறைய வகையில் அவனைக் கட்டுப்படுத்தி இருந்தாள்.. இப்போது அவனுக்கு எந்த தடையும் இல்லையே அவன்தானே ராஜா.. தாமரையிடம் இன்னும் அவன் மனைவி என்ற உரிமையோடு பேச ஆரம்பிக்கவில்லையே. சுகன்யாவிற்கு கட்டுப்பட்டான் தாமரைக்கு கட்டுப்படுவானா என்பதும் கேள்வியே.

எப்போதுமே தாமரைக்கு ஆதவனை பற்றிய எண்ணம்தான்.. இப்போது அவனின் பல முகங்களை வேறு

Mallika Manivannan

காலையில் இருந்து கண்டிருக்கிறாள். இப்போது சொல்லவா வேண்டும். அவனைப் பற்றிய நினைப்பே அதிகமாக இருந்தது.

முதன் முதலில் தாமரைக்கு அவனிடம் பிடித்தது அவனின் பெயர்.. ஆதவன்.. தன்னுடைய தாமரை என்னும் பெயருக்கு மிகவும் பொருத்தமாக இருந்ததுதான் அவன் பால் சற்று கவனத்தை திருப்பியது

இதில் அவன் "நீ எனக்கு வேண்டாம். உன் வாழ்க்கை வீணாகிவிடும்" என்று சொல்ல அது இன்னம் பிடித்தது. தன்னைப் பற்றி நினைக்காமல் முன்பின் தெரியாத போதும் ஒரு பெண்ணின் வாழ்க்கையை இரண்டாம் திருமணம் செய்து வீணாக்குகிறோம் என்ற அவனின் நினைப்பு பிடித்தது.

அதனாலேயே திருமணம் செய்து கொண்டாள். ஆனால் இத்தனை நாட்களாக ஆதவன் அவசியமான வார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் பேசியதில்லை. உண்மையான காரணம் ஆதவன் தன் தொழில் பிரச்சினைகளில் உழன்று கொண்டிருந்தது, சுகன்யாவின் இழப்பு, இவ்வளவு வயது வித்தியாசத்தோடு ஒரு பெண்ணை திருமணம் செய்தது எல்லாம்தான்.

இவ்வளவு நாட்களாக ஆதவன் பேசாத போது கூட தன்னிடம் பேச மாட்டானா என்று எதிர்பார்த்து இருந்த தாமரை.. இப்போது காலையில் இருந்து அவனுடன் இருந்து அவன் எல்லோரிடமும் பேசும் விதத்தைப் பார்த்தவள்.. "எல்லோர் கிட்டயும் நல்லாத்தான் பேசறாங்க! நம்ம கிட்ட ஏன் பேசறதில்லை? ஏன் பார்க்கறது கூட இல்லை? நம்மை பிடிக்கலையோ?" என்று நினைக்க ஆரம்பித்தாள்.

Mallika Manivannan

எல்லா வேலைகளையும் முடித்து பிள்ளைகளைத் தூங்க வைத்து.. அங்கே ரூமில் இருந்த இடுப்புவரை தெரியும் பெரிய கண்ணாடியின் முன் நின்றவள்... "தான் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறோமா இல்லை சகிக்க மாட்டாமல் இருக்கிறோமா" என்று பார்க்கத் துவங்கினாள்.

எப்படிப் பார்த்தாலும் பெரிய அழகியாக தோன்றாத போதும் பார்ப்பதற்கு நன்றாகத்தானே இருந்தாள்.

என்ன நிறம் கொஞ்சம் குறைவு.. சிவந்த நிறம் எல்லாம் இல்லை அதனால் என்னை பிடிக்கவில்லையோ என்று பலவாறாக மனதில் எண்ணங்கள் ஓடியது.

இப்படியே யோசனைகள்! எப்போதும் கேட்கும் பாடல்கள் கூட கேட்கவில்லை.. நேரம் போனதும் தெரியவில்லை.. எப்போதும் வரும் நேரத்தை விட அன்று நேரமாகிவிட்டது ஆதவன் வரும் பொழுது.

பன்னிரெண்டை நெருங்கி இருந்தது. அவனின் வண்டி சத்தத்திற்கே செல்பவள், இன்று அவன் ஒரு லாங் ஹார்ன் அடித்ததும்தான் நிகழ்காலத்திற்கு வந்து விரைந்து சென்றாள்.

வேகமாக சென்று கதவை திறக்க, பெல் அடிப்போமா என்று பெல்லில் கை வைக்கப் போனவன்.. கதவு திறந்தது. அவன் முகத்தை பார்த்து நின்ற தாமரையைப் பார்த்தான்.

சில நொடி பார்த்து, எப்பொழுதும் போல உள்ளே சென்று விட்டாள்.

Mallika Manivannan

ஆதவன் கதவை தாளிட்டு பூட்டி உள்ளே சென்று கை கால் கழுவி வந்தபோது இன்னம் தட்டம் வைக்கப் படவில்லை. எப்பொழுதும் எல்லாம் ரெடியாக இருக்கும் இன்று இல்லை.

தாமரையின் மனதின் சோர்வு சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்ய விடவில்லை. சமையல் அறையில் தோசை சுடுவது தெரிந்தது. சரி நாமாக தண்ணீரும் தட்டமும் எடுத்து வருவோம் என்று உள்ளே வந்து அவனாக எடுத்துப் போக.. அவனாக வந்து எடுத்து செல்வதை பார்த்தவள் அவசரமாக தோசையை சாம்பாரை கொண்டு போய் வைத்தாள்.

திரும்ப அடுப்பில் இருக்கும் தோசை தீய்ந்து விடும் என்று வேகமாக வர.. அவசரத்தில் சமையலறை நிலவு காலில் காலில் இடித்துக் கொள்ள..  பெரு விரல் நகம் சற்று பெயர்ந்து ரத்தம் வர ஆரம்பித்தது.. அப்படி ஒரு வலி கூட.... ஆனால் இடித்த இடத்தையே இவள் பார்க்கவில்லை.. இடித்துக் கொண்டு அவள் பாட்டிற்கு உள்ளே சென்று தோசையை திருப்பி போட்டு அவனுக்கு எடுத்து வந்து போட்டாள்.

Mallika Manivannan

இப்படியாக அவனுக்கு தோசைகளை சுட்டு முடித்து... சமையல் அறையில் நின்று பிறகுதான் கால் தெறித்து விடுவது போல வலிப்பது தெரிந்து காலைப் பார்த்தாள்.. நகம் பெயர்ந்து ரத்தம் வந்திருப்பது தெரிந்தது.

“அச்சோ” என்று அப்படியே  அமர்ந்து காலை ஆராய்ந்தாள். அவள் ரத்தம் வந்தது கவனிக்காமல் நடந்ததால் ஆங்காங்கே ரத்தம் சிறு சிறு துளியாய் சொட்டி இருந்தது.

என்றும் இல்லாத திருநாளாக ஆதவன் உண்டு அன்று தட்டம் அவனே எடுத்து வர சொட்டு சொட்டாக ரத்தம்.. சமையல் அறையில் கால் பிடித்து தாமரையும் அமர்ந்து இருக்க..

“என்ன ஆச்சு?” என்று விரைந்து அருகில் வந்தான்..

“இடிச்சிக்கிட்டேன்” என்று நிலவு காலைக் காட்ட

“பார்த்து வரக் கூடாது” என்று ஒரு அதட்டல் போட்டான். அதில் வலியில் சுருங்கியதை விட முகம் இன்னும் அதிகமாக சுருங்கியது.

தட்டம் வைத்து “எழுந்திரு” என்று கை பிடிக்க கை நீட்டினான்.

“நான் எழுந்துக்குவேன்” என்று அவளாக எழ முயல..

“பிடின்னு சொன்னேன்” என்று மீண்டும் ஒரு அதட்டல் போட.. வேறு வழியில்லாமல் கை பிடித்து எழுந்தாள்.

“போ! போய் பைப் திறந்து விட்டு கால் கழுவு... ஈரத்துணி சுத்தலாம்! அப்போதான் ரத்தம் நிக்கும்” என்றான்.

மறுபேச்சு பேசாமல் அவன் சொன்னது போல கால் கழுவினாள்... பின்பு அவன் ஏதோ ஈரத் துணி கொடுக்க காலில் சுற்றினாள்.

“வேலையிருந்தா காலையில பார்த்துக்கோ! இப்போ போய்த் தூங்கு” என்று சொல்ல... அதைக் காதில் வாங்கினாலும் அவள் பாட்டிற்கு சொட்டியிருந்த இரத்தத்தை துடைத்தாள்.

Mallika Manivannan

பின்பு அவளுக்கு சாப்பிட சாதத்தை எடுத்துப் போட்டு அமர்ந்தாள்.

எப்போதும் உண்டவுடன் உறங்கப் போய் விடுபவன்.. இன்று அவளின் காலின் காயத்தைக் கொண்டு நின்று அவள் என்ன செய்கிறாள் என்று பார்த்தான்.

“ஏன் சாப்பாடு சாப்பிடற! மாவு தீர்ந்துடுச்சா!” என்று ஆதவன் கேட்க..

மாலையில் இருந்து ஆதவனுக்கு தன்னைப் பிடிக்கவில்லையோ என்ற மனதின் சோர்வு, காலின் வலி, ஆறு மாதமாக இதைத்தானே சாப்பிடுகிறேன், இன்று கேட்டால் என்ற நினைப்பு, தானாக தாமரையின் கண்களில் நீர் வரவைத்தது.

Mallika Manivannan

**அத்தியாயம் ஏழு:**

குனிந்து கண்களின் நீரை ஆதவனுக்கு தெரியாமல் மறைத்தாள், பின்பு சுதாரித்து “சாப்பாடு வேஸ்ட் ஆகும்னு” என்று அவளாக சாப்பிடுவது போல விளக்கம் சொல்ல,

“இப்போ இதை எப்படி சாப்பிட முடியும். பார், நீர் விட்ட மாதிரி இருக்கு.. தோசை சாப்பிடு” என்றான்.

அவள் அப்போதும் தலை நிமிராமல் இருக்க...

“மணி என்ன தெரியுமா பன்னெண்டு.. நானே ரொம்ப லேட் பண்ணிட்டேன். நான் வர்றவரை நீ வெயிட் பண்ணாதன்னு நான் சொல்லியிருக்கணும். அதுவே நான் பண்ணிட்டு இருக்குற பெரிய தப்பு. அதுக்கே நான் உன்கிட்ட மன்னிப்பு கேட்கணும். ஆனா வேணும்னு செய்யலை. நான் இதை யோசிக்கலை, தோசை சுட்டுக்கோ”

“இல்லை! பரவாயில்லை!” என்று சொல்லி நிமிர்ந்து பார்த்தாள்.

“சொன்னாக் கேட்கணும்” என்று கையில் இருந்த தட்டத்தைப் பிடுங்கிக் கொண்டான்.

“எனக்குப் பசிக்குது, கால் வலிக்குது, நான் இன்னும் சுட்டு எப்படி சாப்பிடுவேன். ஆறு மாசமா ராத்திரி இதைத் தான் சாப்பிடறேன். இன்னைக்கு மட்டும் ஏன் கேட்கறீங்க. போங்க எப்பவும் போல நீங்க போய் தூங்குங்க” என்று ஒரு ஆவேசத்தில் சொல்லி அவன் கையில் இருந்த தட்டத்தை மீண்டும் தாமரை பிடுங்கிக் கொண்டாள்.

அவனிடம் யாரும் இப்படி நடந்து கொண்டதும் இல்லை, தாமரையிடம் இப்படி ஒரு கோபத்தையும் ஆதவன் பார்த்ததில்லை.

அமைதியாக திரும்பி உள் சென்று விட்டான். தாமரைக்கு அழுகை பொங்கியது. சுவரில் சாய்ந்து அமர்ந்து தேம்பித் தேம்பி அழத் துவங்கினாள்.

ஆதவன் சென்று மகள்களுடன் படுத்தவன் அந்த இடத்தை ஆராய, ஒரு பாயில் மித்ரா படுத்திருப்பது தெரிந்தது.

தன் மக்கள் மட்டும் படுக்கையில்.. இவ்வளவு நாளாக பார்த்துதான் இருந்தான்.. ஆனால் அது கருத்தில் பதியவில்லை...

“ச்சே! ச்சே! என்ன செய்திருக்கிறேன் நான்!” என்று ஒரு கழிவிரக்கம் தோன்ற.. தன்னையே மிகவும் கீழாக உணர்ந்தான். மித்ராவைத் தூக்கி மெத்தையில் பிருந்தாவிற்கு பக்கத்தில் படுக்க வைத்தான். பின்பு அவன் அப்படியே வெறும் தரையில் படுத்துக் கொண்டான்.

Mallika Manivannan

ஆனால் உறக்கம் ஏனோ இன்று அணுகவில்லை. கிட்ட தட்ட அரை மணிநேரம் ஆகிற்று, நேரம் ஒரு மணியை நெருங்கிக் கொண்டு இருந்தது.

தாமரை உறங்க வருவதாக காணோம்... எழுந்து சென்று பார்க்க.. சமையலறையில் அப்படியே காலை குறுக்கி படுத்து உறங்கியிருந்தாள். சாதம் போட்டு வைத்த தட்டம் அப்படியே இருக்க, அந்த சாதமும் தொடப்படாமல் இருந்தது.

அருகில் சென்று அவளின் முகத்தைப் பார்க்க, கண்களில் கண்ணீர் துளிகள் வடிந்து கன்னத்தில் இறங்கி கறைகளாக காட்சியளித்தது.

“நேற்றுதானே நினைத்தோம்! இவள் எனக்கு நிம்மதியை கொடுக்கிறாள் என்று. இன்று காலையில் இருந்து எவ்வளவு பிரச்சினைகள்..”

“தன்னை வருத்தி இவள் எனக்கு நிம்மதியைக் கொடுக்கிறாளா” என்று தோன்றியது.

தட்டத்தை சத்தம் செய்யாமல் எடுத்து வேறு இடத்தில் வைத்து.. தாமரையை இரண்டு கை கொண்டு அப்படியே தூக்க.. தாமரைக்கு விழிப்பு வந்து என்ன நடக்கிறது என்று உணராமல் அவள் மேலே எழும்புவது மட்டும் தெரிய வீல் என்று கத்தப் போனவளை “ஷ், கத்திடாத” என்று அதட்டல் போட..

“அய்யோடா! இவர் என்னைத் தூக்குகிறாரா. ஒரே நாளில் எனக்கு இவ்வளவு அதிர்ச்சியா!” என்று தாமரை துவண்டு தான் போனாள். ரூமின் உள் சென்று இறக்கிவிட்டு “படு” என்றான்

“சமையல் கட்டுல லைட் எரியுது” என்று தாமரை தன் கடமை உணர்ச்சியைக் காட்ட..

“நான் ஆஃப் பண்ணிக்கறேன். பேசாம தூங்கு!” என்றான்.

Mallika Manivannan

அப்போதுதான் மித்ரா இல்லாததை பார்த்தவள். மித்ரா அங்கே குழந்தைகளுடன் படுத்திருப்பதை பார்த்து “மித்ரா” என்றாள்.

“அவ எல்லாம் இங்க வந்து படுக்க மாட்டா, வேணும்னா நீ அங்க போய்ப் படு!” என்று ஆதவன் சொல்ல...

“எங்கே படுக்க” என்று குழம்பி நின்றாள்.

“போ! போய்ப் படு!” என்று சொல்ல,

“நீங்க எங்க படுப்பீங்க?” என்று கேட்டாள்.

“இத்தனை நாளா கேட்டியா? இல்லையில்லை! இப்போ மட்டும் ஏன் கேட்கற. எனக்குத் தெரியும்! நீ குழந்தைங்களோட படு!” என்றான்.

கோபமாக சொல்கிறானா! கடுப்பில் சொல்கிறானா! இப்படிப் பல வகையிலும் ஆராய்ந்தாள், அவன் முகத்தில் இருந்து ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை.

பேசாமல் படுத்துக் கொண்டாள். ஒரே நாளில் எத்தனை அதிர்ச்சிகள். எப்படித் தாங்குவாள். ஆனாலும் களைப்பு.. உறங்கிவிட்டாள். புதிதாக கிடைத்த மெத்தை வேறு உடல் வலிக்கு சற்று சுகமாக இருக்க, நிமிடத்தில் உறங்கி விட்டாள்.

ஆதவனுக்குதான் உறக்கம் வரவில்லை. உள்ளே உப்புசமாக இருக்க கதவைத் திறந்து படியில் அமர்ந்து கொண்டான்.

தன்னைத் திருமணம் செய்து வந்த பெண், ஆறு மாதமாக என்ன உண்கின்றாள் என்று கூடத் தெரியாமல் இருந்திருக்கிறேன். என்ன மனிதன் நான். செலவுகளும் அதிகரிக்கின்றது. அடுத்த வாரம் மித்ராவிற்கு ஃபீஸ் வேறு கட்ட

Mallika Manivannan

வேண்டும். பேசாமல் தொழிலை மாற்றிக் கொள்வோமா என்று யோசித்தபடி அமர்ந்திருந்தான்.

வெகு நேரம் கழித்தே உறங்க சென்றவன், விழிக்கும் போதும் வெகு நேரமாகி விட்டது.

Mallika Manivannan

“அப்பா! பஸ்க்கு டைம் ஆச்சு! எழுந்திருங்க!” என்று பிருந்தா வந்து எழுப்பவும்தான் எழுந்தான். அவளை பஸ் ஏற்றி வந்தபோது வீடு பரபரப்பாக இருந்தது.. சுமதிக்கு பிரசவ வலி எடுத்திருக்க.. சேரன் அம்பாசிடரை எடுத்துக் கொண்டிருந்தான்.

“நீ போ! சுமதியைக் கூட்டிட்டு வா! நான் கார் எடுக்கறேன்!” என்று சொல்லி அவனை அனுப்பினான்.. இவன் கார் எடுப்பதற்குள் சுமதி வெளியே வந்திருந்தாள்..

மரகதம் பொருட்களை இன்னும் எடுத்துக் கொண்டிருக்க.. “அம்மா நான் இவங்களை விட்டுட்டு வர்றேன். நீ ரெடியா இரு..” என்று மதுரையின் ஒரு புகழ் பெற்ற மகப்பேறு மருத்துவமனையை நோக்கி காரை விட்டான். அங்கேதான் அவர்கள் காட்டிக் கொண்டு இருந்தார்கள்.

சுமதியை பிரசவ அறை நோக்கிக் கொண்டு சென்றனர். அவர்களின் பிறந்த வீட்டிற்கு சொல்லி.. திரும்ப அம்மாவைக் கூட்டி வந்து விடுகிறேன் என்று ஆதவன் சென்றான்.

அங்கே தயாராக இருந்த மரகதம்.. “வீட்டை இப்படிப் பார்த்துக் கொள்! இதை செய்! அதை செய்!” என்று தாமரைக்கு சட்டதிட்டங்கள் போட்டுக் கொண்டிருக்க....

“முதல்ல நீ கிளம்பு!” என்று அம்மாவை அதட்டிக் கிளப்பி, "நான் இவங்களை விட்டுட்டு வர்றேன்” என்று தாமரையிடம் சொல்லி அம்மாவையும் அப்பாவையும் கூட்டிக் கொண்டு கிளம்பினான்.

அவர்களை விட்டு இவன் வீட்டிற்கு திரும்பி வந்தபிறகு குளிக்கப் போக, தாமரை அவனுக்கு பசிக்கும் என்று வெளியே வரும் சமயம் டீயுடன் தயாராக நின்றாள்.

Mallika Manivannan

என்றுமில்லாத அதிசயமாக சிறு புன்னகையுடன் ஆதவன் அந்த டீயை வாங்க.. இப்போது தாமரை அவனை அதிசயமாக பார்த்தாள்...

"உன் விரல் எப்படி இருக்கு?" என்றான்..

அவளுக்கு சட்டென்று அடி பட்டது ஞாபகம் வரவில்லை, "என்ன விரல்" என்றாள்.

"உன் கால்ல அடிபட்டது"

"ஓஹ்! அதுவா!" என்று அப்போதுதான் அதை குனிந்து பார்த்தாள். "வலி அதிகமில்லை! சரியாகிடும்!" என்று அவள் பாட்டிற்கு செல்ல.. அவளைத் தேடிப் போய் குழந்தைக்கு அடிபட்டால் போடும் ஆயின்மென்ட் ஒன்றைக் கொடுத்தான். வாங்கி வைத்துக் கொண்டாள்.

"மறக்காம போட்டுக்கோ" என்று சொல்லிக் காலை உணவை முடித்து வெளியே கிளம்பியவன்.. "கதவைத் தாள் போட்டுக்கோ தாமரை.. அஸ்வதியும் மித்ராவும் வெளில ஓடிடப் போறாங்க.. வீட்ல யாருமில்லை! கவனமா இரு!" என்று சென்றான்.

"இருந்தா மட்டும் அவங்களா பார்த்துக்கறாங்க" என்ற வார்த்தை மனதில் தோன்றிய போதும் அதை வெளியில் சொல்ல எல்லாம் தாமரை விழையவில்லை. வெளி ஆட்களிடம் கூடப் பேசி விடுவாள், இன்னும் வீட்டு ஆட்களிடம் வாயைத் திறக்க முடியவில்லை.. முக்கியமாக ஆதவன் முன் அதிகம் பேச வருவதில்லை.

அவன் ஸ்ட்ரிக்ட் ஆபிசராக சொல்லிச் செல்ல.. இவள் தலையசைத்து கேட்டுக் கொண்டாள்.

மதியம் உணவிற்கு வந்தவன்... "பையன் பொறந்திருக்கான் சேரனுக்கு" என்று சொல்ல.. தாமரைக்கு சந்தோஷமாகியது.

Mallika Manivannan

“எப்போ பொறந்தான்?” என்று கேட்க..

“காலையிலயே.. உனக்கு யாரும் சொல்லலையா?”

“இல்லை! வீட்டுக்கு யாரும் வரலை..” என்றாள். தாமரையினது பிறந்த வீட்டில் எளிய வாழ்க்கை... இந்த பெரிய குடும்பங்களின் சூட்சுமங்கள் இன்னும் புரிந்தவள் அல்ல. அது மட்டுமன்றி இங்கே யார் அவளிடம் அரட்டை அடிப்பவர்கள் எல்லோரும் அவசியத்திற்கு பேசுபவர்கள்.. இதில் அவர்கள் ஏன் சொல்லவில்லை என்பது போல எல்லாம் தோன்றவில்லை.

ஆனால் ஆதவன் அப்படியல்ல! அவனுக்கு மரியாதை மிகவும் முக்கியம்! வீட்டில் வெளியில் எல்லா இடத்திலும்..

“வீட்டுக்கு வரலை சரி! போன் செஞ்சு சொல்லியிருக்கலாம் தானே! வீட்ல நீ மட்டும்தானே இருக்க!” என்று சொல்லும்போதே ஆள் வந்தது..

செங்கல் சூளையில் வேலை செய்பவன்.. “பெரியம்மா சாப்பாடு வாங்கிட்டு வரச் சொன்னாங்க” என்றான்.

“சமைச்சு குடுத்து அனுப்ப சொல்லியிருந்தாங்களா?”

“ஆம்!” என்பது போலத் தாமரை தலையசைக்க..

“குடுத்து விடு!” என்றான்.

இரண்டு வயர் புட்டிகளில் தனித்தனியாக கொடுத்தாள்.. “இது  பெரியய்யாக்கு.. இது ஆஸ்பத்திரிக்கு”.

அதன் பிறகு தாமரையிடம் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. அஸ்வதியை தூக்கி வைத்து கொண்டான். உண்டு முடித்து மாலை வரை வீட்டில்தான் இருந்தான்.

யோசனை எல்லாம் புதிய செங்கல் சூளை அமைப்பதில் தான் இருந்தது. அஸ்வதி தந்தையின் மடியிலேயே இருக்க...

Mallika Manivannan

மித்ரா அவனை எட்டிப் பார்ப்பதும் அம்மாவின் பின் மறைவதுமாக இருந்தாள்.

குழந்தையை பார்க்கச் செல்லவில்லை. தாமரையிடம் சொல்லாததால் செல்லவில்லை.

தான் அவளுக்கு உரிய மரியாதை அளிக்காதது மற்றவர்களின் பார்வையில் அவளை அலட்சியமாக பார்க்க வைக்கிறதோ என்று உறைத்தது.

வீட்டில் சற்றுநேரம் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் அப்போதுதான் என்ன நடக்கிறது என்று தெரியும்.

மாலை பிருந்தாவை தாமரைதான் மெயின் ரோட் சென்று ஸ்கூல் பஸ் வந்ததும் அழைத்து வருவாள். இன்று ஆதவன் இருக்க "நான் போறேன்!" என்று சொல்லி நிறுத்தம் செல்ல... அவனைப் பார்த்த பிருந்தாவிற்கு சந்தோசம் பிடிபடவில்லை.

"அப்பா!" என்று தாவி ஏறினாள். நிறைய, குழந்தைகளையும் தவிக்க விட்டுவிட்டோம் என்று உணர்ந்தான்.

அதிகம் பேசாத பிருந்தா அன்று அப்பாவிடம் பள்ளியில் நடந்ததை சொல்லிக் கொண்டே வந்தவள்... வீடு அருகில் வந்ததும்... "அம்மா கிட்ட எப்பவும் நான் இப்படித்தான் சொல்லிக்கிட்டே வருவேன். அம்மா ஏன் விட்டுட்டு போயிட்டாங்க" என்று கண்கள் கலங்க சொல்ல... எட்டு வயது பெண்ணையும் கையினில் தூக்கிக் கொண்டான்.

மனது கலங்கியது. என்ன செய்தாலும் சென்றவர்கள் திரும்ப வர மாட்டார்களே.

"தாமரை அம்மா கிட்ட சொல்ல மாட்டியா? அவங்க கேட்க மாட்டாங்களா...?"

"கேட்பாங்க! ஆனா நான் சொல்ல மாட்டேன்!"

Mallika Manivannan

“ஏன் குட்டிம்மா?”

“அவங்க அம்மா மாதிரி பேசறதில்லை! ட்ரெஸ் பண்றதில்லை! என்னோட சில பஸ் ஃபிரண்ட்ஸ் அவங்க உங்க வீட்டு மெயிடான்னு கேட்கறாங்க” என்றாள்.

“என்ன?” என்று அதிர்ந்து நின்று விட்டான்.

“உங்க வீட்ல வேலை செய்யறவங்களான்னு கேட்கறாங்களா? ஏன் ஏன் அப்படிக் கேட்கறாங்க” என்று தெரிந்து கொள்ள முயல..

பேசிக் கொண்டே வீட்டின் வாசல் வரை வந்திருந்தார்கள். தாமரை அவர்கள் வருவதை வாயிலில் இருந்து பார்த்தாள்.

“அவங்க ஒரு ரெண்டு மூணு சாரி தான் திரும்பத் திரும்ப கட்டுறாங்க.. அதுவும் பழசா இருக்கு, வேலை செஞ்சிக்கிட்டே அப்படியே வந்துடறாங்க..”

“ரெண்டு சின்ன குழந்தைங்களை சமாளிக்கும் போது அப்படிதான் இருக்கும். நீ சொல்லலாம் தானே!”

“அவங்க பேட் ஃபீல் பண்ணினா?” என்று சொல்லித் தன் முகத்தை பார்த்த பிருந்தாவைப் பார்த்தவன்..

“எஸ்! சொல்ல வேண்டாம். மெதுவா மெதுவா மாத்திடலாம்.. அம்மா சாமியாகிட்டாங்க இல்லையா? நாம தாமரை அம்மாவைப் பார்த்துக்குவோம்” என்று சொன்ன நிமிடம் ஆதவனின்  மனம் கனத்துப் போனது.

“அப்பா! எப்பவும் வெளில போயிடறேன் இல்லையா. நீ தான்  தாமரை அம்மாவை, மித்ராவை, அஸ்வதியை எல்லாரையும் பார்த்துக்கணும்” என்ற பெரிய பொறுப்பை அவளிடம் கொடுத்தான்.

அதுவும் சமர்த்தாக தலையாட்டியது.

Mallika Manivannan

“எங்கேடா இன்னும் காணோம். அப்போதே வாசல் அருகில் வந்தார்கள் இன்னும் காணோம்” என்று பிருந்தா குடிப்பதற்காகப் பாலை கையினில் வைத்து தாமரை வாசல் வர... அஸ்வதியும் மித்ராவும் அவளை நூல் பிடித்து வந்தனர்.

மூவரும் படியில் நிற்க.. அதைப் பார்த்தபடியே தந்தையும் மகளும் வீட்டின் உள் வந்தனர்.

“பால் ஆறிப்போனா நீ குடிக்க மாட்ட, குடிச்சிடு பிருந்தா!” என்று உள் நுழைந்ததும் அவளைப் பால் குடிக்க வைத்து, “போ! போய் முகம் கழுவு” என..

அவளின் லஞ்ச் பேகை அஸ்வதி தரையில் இழுத்துப் போக.. மித்ரா அவளின் ஸ்கூல் பேகை தம் கட்டி தூக்கி சிறிது தூரம் சென்று வைத்து மீண்டும் தூக்கி என்று கொண்டு சென்று கொண்டிருந்தாள்.

ஆதவனுக்கு தானாக முறுவல் வந்தது. முதல்ல இன்னக்கு நைட் இவங்களுக்கு ஒரு எலுமிச்சம் பழம் சுத்திப் போடணும் என்று நினைத்துக் கொண்டான்.

Mallika Manivannan

**அத்தியாயம் எட்டு :**

அன்று இரவு மரகதம் வீட்டிற்கு வரும்போது மணி எட்டு. அவருடன்தான் அழகரும் வந்தார். ஆதவன் எங்கும் வெளியே செல்லவில்லை. பிருந்தா அப்பா “எங்கயும் போகாதீங்க! இங்கயே இருங்க!” என்று சொல்லியிருக்க வீட்டில்தான் இருந்தான்.

மகளுக்கு செஸ் சொல்லிக் கொடுத்து கொண்டிருந்தான். அஸ்வதி தந்தையின் மடியில் அமர்ந்திருக்க.. மித்ரா எப்பொழுதும் போல தாமரையிருக்கும் இடம் அமர்ந்து.. அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

“வா! வா!” என்று பிருந்தாவும் , ஆதவனும் கூப்பிட்டும், “போ! போ!” என்று தாமரை சொல்லியும் மித்ரா அருகில் செல்லவில்லை.

அவன் வீட்டில் இருப்பதை மரகதமும் அழகரும் ஆச்சர்யமாகப் பார்த்தனர். தாமரையைத் திருமணம் செய்த நாளாக அவன் வீட்டில் இருந்ததே இல்லை.

அழகர் “ஏன் ஆதவா வீட்ல இருக்க, குழந்தையைப் பார்க்க வரலை” என்று யதார்த்தமாகக் கேட்க...

“யார் கிட்ட சொன்னீங்க” என்றான்.

“என்ன? சேரன் சொல்லலையா!” என்றார்.

“என்கிட்டே சொன்னா மட்டும் போதுமா” என,

சட்டென்று விஷயம் புரிய, “தாமரை கிட்ட சொல்லலியா.. தப்பாச்சே!” என்று மனைவியைப் பார்த்தார்.

“மறந்திருப்பாங்க!” என்று அசால்டாக சொல்ல,

“தப்பு மரகதம்! வீட்ல இருக்கறவங்களுக்கு சொல்ல வேண்டாமா!” என்று அழகர் சொல்ல..

“அதான் மறந்திருப்பான்னு சொல்றேன் இல்லை! நான் சொல்ல வேண்டாம்னு எல்லாம் சொல்லலை” என்றார்.

“நீ சொல்ல வேண்டாம்னு சொல்லலை! ஆனா யார் யாருக்கு சொல்லணும்னு நீதானே லிஸ்ட் போட்டு சேரன்கிட்ட கொடுத்த”

“கொடுத்தேன்! ஆனா அதுல நான் ஆதவன் பேர்கூட சொல்லலையே.. அவனுக்கு சொன்னான் தானே, அப்போ தாமரைக்கும் அவன் சொல்லியிருக்கணும்! மறந்திருப்பான்!” என்றார் அப்போதும் மகனை விட்டுக் கொடுக்காமல்.

Mallika Manivannan

“எப்படி? தாமரை கிட்ட சாப்பாடு வாங்கிட்டு வர சொல்ல மட்டும் மறக்கலையா?” என்றான்.

மரகதம் பதில் பேசாமல் இருக்க...

தாமரை அங்கிருக்க “நீ உள்ள போ!” என்றான் அவளைப் பார்த்து.

எதற்கு என்று புரியாத போதும் தன் பெற்றோரிடம் ஏதோ தனியாக பேச விருப்பப்படுகிறான் என்று நினைத்தாள். ஆனால் தன்னைப் பற்றி என்று நினைக்கவில்லை. உள்ளே சென்று விட்டாள்.

“நேத்து எவ்ளோ பா வசூல் பண்ணிக் கொடுத்திருக்கேன்”

“பன்னிரெண்டரை லட்சம்”

“உங்க பொண்டாட்டி கிட்ட சொல்லி தாமரைக்கு கொஞ்சம் மிச்சம் மீதி ஆகறதை போடாம, நல்ல சாப்பாடா போட சொல்லுங்க” என்றான். சொல்லும் போதே குரலில் அவ்வளவு அடக்கப்பட்ட ஆத்திரம்.

அழகர் விழித்தார் “என்ன இது?” என்பது போல.

“ராத்திரி நான் வீட்டுக்கு தினமும் பதினோரு மணிக்கு மேல வர்றேன். எனக்கு இவ டிஃபன் செஞ்சு போட்டுட்டு மீதியான சாப்பாடை சாப்பிடறா, அது நீர் விட்டுப் போய் வாசனை வருது. அதுல தண்ணி ஊத்தி சாப்பிடறா. என்னப்பா இது? என்ன நடக்குது வீட்ல? நம்ம ஒரு நல்ல சாப்பாடு போடக் கூட வக்கிலாம போயிட்டோமா இல்லை என் பொண்டாட்டிக்கு இது போதும்னு நினைச்சிட்டாங்களா?”

அழகர் மரகதத்தைப் பார்க்க “சாப்பாடு வேஸ்ட் ஆகும்னு சொன்னேன்” என்றார் தடுமாறியபடி. உண்மையில் அதற்கு தான் சொல்லியுமிருந்தார்.

Mallika Manivannan

“அவளுக்கு அந்த மாதிரி ஒரு சாப்பாடை குடுத்துட்டு நான் நல்ல சாப்பாடு சாப்பிட்டு இருக்கேன்னு நினைக்கும் போது.. நானும் ஆம்பளைன்னு மீசையை முறுக்கிக்கிட்டு சுத்திட்டு இருக்கேன்”

“இதுல உனக்கு சம்பாதிக்க வக்கில்லைன்னு உன் பொண்டாட்டி சொல்றான்னு சொல்றாங்க... அப்பா! இது வீடு! அரசியல் பண்ற இடமில்லை.. இப்படி பேச்சு எல்லாம் இங்க இருக்கக் கூடாது அம்மாகிட்ட தெளிவா சொல்லிவைங்க”.

“சுகன்யான்னா வேற.. அவளும் அம்மாவை எதிர்த்து எதிர்த்து பேசுவா. ஆனா தாமரை வாயைத் திறக்கறது இல்லை. என்ன சொன்னாலும் செய்யறா. அவகிட்ட இப்படி எல்லாம் நடக்க வேண்டாம்னு சொல்லுங்க, மீறி நடந்தா.. அப்புறம் நம்ம உறவுக்குள்ள பிளவுதான் வரும்” என்றான் தெளிவாக..

இப்போதுதான் மகன் வீடு வந்து சேர்ந்திருக்கிறான். மீண்டும் இப்படியா என்று நினைத்த அழகர் மனைவியை முறைக்க, “இல்லையில்லை சாப்பாடு வீண் ஆகுதுன்னு தான் சொன்னேன்” என்றார் மீண்டும்.

“ஏன் வீண் ஆகுது? அரிசி கம்மியா போடச் சொல்லு. அப்படியும் ஆனா நீ சாப்பிட வேண்டிதுதானே” என்றார் அழகர்..

“இல்லை! எனக்குப் போடு! அதை விட்டு நம்ம வீட்டுக்கு வந்த பொண்ணுங்க கிட்ட இப்படி செய்வியா.. நம்மளும் ஒரு பொண்ணை கல்யாணம் செஞ்சி கொடுத்திருக்கோம். அவளுக்கு இப்படிச் சாப்பிட சொன்னா ஒத்துக்குவியா..”

“அவங்கப்பாக்கு தெரிஞ்சது நம்மளை நிக்க வெச்சு கேள்வி கேட்பான்.. மிலிட்டரிக்காரன்டி அவன்.. எப்படி ரெண்டாம் தாரமா நம்ம பயலுக்குப் பொண்ணைக் கொடுத்தான்னு இப்பவும் எனக்கு யோசனைதான்”.

Mallika Manivannan

“நான் ஒரு ரெண்டு தடவை சொன்னேன். அதையே அவ செய்வான்னு எனக்கு எப்படித் தெரியும்.. தோ இவன் பொண்டாட்டி கிட்ட எத்தனை தடவை சொல்லியிருக்கேன்.. இப்போ சுமதி கிட்ட சொல்றேன் யாரும் செஞ்சது இல்லை.. இவ அதையே இத்தனை நாளா செய்வான்னு எனக்கு எப்படி தெரியும்”.

“என்ன மரகதம் பேசற நீ.. டீ வி யைப் பார்த்து பார்த்து அதுல வர்ற கொடுமைக்கார மாமியார் ஆகிட்டியா.. உனக்கும் சுகன்யாக்கும் எப்பவும் ஆகாது ஏட்டிக்குப் போட்டியா பேசுவீங்க, செய்வீங்க!”

“ஆனா தாமரை ஒரு வார்த்தை திரும்பக் கூடப் பேசறது இல்லை .. அந்தப் பொண்ணு கிட்டயும் இப்படி நடந்துக்கறயே...”

“ரெண்டு மருமகளும் உனக்கு எப்பயாவது சமையல் வேலையில இருந்து விடுவிச்சு இருக்காங்களா. இந்த பொண்ணு வந்த நாளுல இருந்து நீ சமையல்கட்டு போய் இருப்பியா”

“இந்த ஆறு மாசமாதான் வேலை குறைஞ்சு நிம்மதியா இருக்க. நீ செய்யறது சரியா நீயே முடிவு பண்ணிக்கோ. யாரும் சொல்லி, திட்டி, செய்யற வயசை நீ தாண்டிட்ட” என்றார் கடுமையாக.

மரகதம் அமைதியாகத்தான் இருந்தார்.

“உனக்கு எப்படித் தெரியும் தாமரை சொல்லிச்சா” என்றார் ஆதவனை பார்த்து.

“ப்ச்! இல்லைப்பா! நானா பார்த்தேன். அவ எதுவும் சொல்றது எல்லாம் இல்லை”

“நீயும் கொஞ்சம் கவனிச்சு பார்த்துக்கோ! ஆறுமாசமா அந்தப் பொண்ணு எங்கயும் போய் நான் பார்க்கலை..” என்றார் மகனுக்கும்.

Mallika Manivannan

அவர்கள் பேசிக் கொண்டு இருக்கும்போதே வீட்டின் பெல் அடிக்கப்பட்டது. கதவு திறந்திருக்க யார் பெல் அடிக்கிறார்கள் என்று எழுந்து போய் ஆதவன் பார்க்க... அங்கே மிலிட்டரி முருகேசன் நின்று கொண்டிருந்தார். தாமரையின் தந்தை.

“வாங்க! வாங்க மாமா!” என்றான் சிறு புன்னகையுடன். முன்பும் புன்னகைப்பான். ஆனால் அதற்கும் இதற்கும் ஏதோ வித்தியாசம் தெரிந்தது.

“பயபுள்ள என்னடா நம்மைப் பார்த்து இந்த சிரிப்பு சிரிப்பு சிரிக்குது!” என்று புன்னகைக்கே நினைத்தார் முருகேசன். இந்த ஆறுமாதமாக பார்த்துத் தானே இருந்தார். பேச்சு புன்னகை எல்லாம் கடமைக்கே என்பது போலதான் இருக்கும். இன்று ஏதோ வித்தியாசம் தெரிந்தது.

“தாமரை!” என்று அவளையும் சத்தமிட்டு கூப்பிட்டு, “வாங்க” என்று உள் அழைத்துச் சென்றான்.

“என்ன இந்த நேரத்தில்?” என்று அழகரும் மரகதமும் நினைத்த போதும் “வாங்க சம்மந்தி” என்றனர்.

மரகதத்திற்கு உள்ளூர ஒரு நடுக்கம் கூட, இந்தப் பெண் தன் தந்தையிடம் சாப்பாட்டைப் பற்றி சொல்லி விட்டதோ? அதற்குதான் இவ்வளவு அவசரமாக இந்த நேரத்திற்கு வந்து விட்டாரோ என்று தோன்றியது.

“அப்பா” என்று முக மலர்ச்சியோடு தாமரை வர.. மித்ரா அப்போதும் தாமரை பின்தான் நின்றாள். மித்ரா என்று அவர் ஆசையோடு அழைக்க.. போகவில்லை.

“போ! போ மித்து!” என்று வலுக்கட்டாயமாக மித்ராவை அவரிடம் தாமரை விட.. அவர் தூக்கவும் ஏறியவள்.. சில நொடிகளிலேயே இறங்கி தாமரையிடம் வந்து விட்டாள்.

Mallika Manivannan

"உங்க அக்கா எங்க? தங்கை எங்க?" என்று மித்ராவிடம் கேட்க... உள்ளே ஓடிச் சென்று பிருந்தாவையும் அஸ்வதியையும் அழைத்து வந்தாள்.

"பெரிய பேத்தி எப்படி இருக்கீங்க?"

"நல்லா இருக்கேன் தாத்தா!" என்று பிருந்தா சொல்ல...

வாசலில் வைத்திருந்த திண்பண்டங்கள் நிறைந்த பையைத் தூக்கி வந்து கடைக் குட்டியான அஸ்வதியிடம்தான் நீட்டினார். அந்தப் பை அவளின் உயரத்திற்கு இருந்தது.

"பெரிய பேத்தி வாங்க பிடிச்சிக்கோங்க!" என்று சொல்ல.. "மித்ரா வா!" என்று மித்ராவையும் அழைத்து பிருந்தா அதை சமையல்கட்டிற்கு கொண்டு போனாள்.

இதையெல்லாம் பார்த்திருந்த அழகர் மரகதத்தை முறைத்துப் பார்த்தார். "நீ என்ன செய்திருக்கிறாய் பார்" என்று அவரின் கண்கள் குற்றம் சாட்டியது. "அவரின் பேத்திக்குக் கொடுக்காமல்.. உன் பேத்திகளுக்கு கொடுக்கிறார், நீ அவரின் மகளுக்கு என்ன செய்திருக்கிறாய்?" என்று கேள்வி கேட்டது.

"நின்னுகிட்டே இருக்கீங்க. முதல்ல உட்காருங்க!" என்றான் ஆதவன்.

"தாமரை டிஃபன்க்கு ரெடி பண்ணு" என்று கூடவே சொல்ல..

"இல்லை! இல்லை வேண்டாம்! பார்த்துட்டு கிளம்பலாம்னு தான் வந்தேன்.. காலையில வந்திருந்தா அவங்கம்மா கூட வந்திருப்பா.. எனக்கு இன்னைக்குன்னு பார்த்து கிளம்ப முடியாதபடி வேலை.. பெரிய பொண்ணு வீட்டுக்குப் போயிட்டு இப்ப இங்க வந்திருக்கேன்.. ஊர்ல அடுத்த வாரம் திருவிழா! எல்லோரும் குடும்பத்தோட வரணும்.. நேரமாகிடுச்சு.. கடைசி பஸ் போயிடும்" என்று அவர் அவசரப்பட,

Mallika Manivannan

“முதல்ல நீங்க உட்காருங்க.. தாமரை டிஃபன் செய்.. பஸ் போனா போகுது. உங்களை ஊருக்கு அனுப்ப வேண்டியது என் பொறுப்பு” என்றான்.

எப்போதும் “வாங்க” என்று மரியாதையாக ஒரு வார்த்தை சொல்லி வேறு பேச மாட்டான். இன்று இவ்வளவு பேசுகிறான். எந்த போதி மரத்தடியில் இவருக்கு ஞானம் வந்தது என்று விழி விரித்துப் பார்த்த தாமரை.. “அச்சோ! நாம் ஏன் புத்தரைப் பற்றி நினைக்க வேண்டும் ... அவர் இக வாழ்வை விட்டு சென்றவர் அல்லவா... நினையாதே மனமே!” என்று அவளுக்கு அவளே நினைத்து தலையில் வேறு குட்டிக் கொள்ள..

ஆதவனும் பார்த்தான், முருகேசனும் பார்த்தார். “என்ன கண்ணு?” என்று அப்பாக் கேட்க... “ஒண்ணுமில்லைப்பா! இன்னும் தண்ணி கூட கொடுக்கலைன்னு” என்று அசடு வழிந்து சென்றாள்.

Mallika Manivannan

அழகரும் மரகதமும் கூட வியந்துதான் பார்த்தனர்.. இத்தனை நாட்களாக தெளிவற்று சுற்றிக் கொண்டு இருந்தவன், இரண்டு நாட்களாக சற்று தெளிவாக இருக்கிறான் என்று. சுகன்யா இறந்தபோது மிகவும் மோசம் எதிலும் பற்றற்று இருந்தான்.

குழந்தைகள்தான் அவனை சற்று நடப்பிற்கு கொண்டு வந்தனர். குழந்தைகளைக் காட்டி மிரட்டிதான் இந்த திருமணமும். ஆனாலும் இத்தனை நாட்களாக ஒரு ஒட்டியும் ஒட்டாத தன்மை, இரண்டு நாட்களாக சற்று மறைந்து இருந்தது.

பெற்றவர்கள் இருவருமே அவசரமாக கடவுளிடம் மனு செய்தனர். இனி எப்போதும் அவன் இப்பொழுது மாதிரி நன்றாக இருக்க வேண்டும் என்று.

அழகர், முருகேசனிடம்.. "நானே உங்களை போன்ல கூப்பிடணும்னு இருந்தேன். நம்ம சின்ன பயலுக்கு பையன் பொறந்திருக்கான் காலையில" என்றார்.

"ரொம்ப சந்தோசம்.. காலையில கூட தாமரை போன்ல பேசிச்சே, சொல்லலை! சொல்லியிருந்தா அவங்கம்மாளையும் கூட்டிகிட்டு வந்திருப்பேன்" என்றார்.

"அது மறந்துட்டேன்பா!" என்றாள் தாமரை.. "இவங்க என்கிட்டயே சொல்லலை" என்றா சொல்ல முடியும்...

பின்பு அப்பாவிற்கு சமைக்கச் சென்று விட..

மித்ராவை "வாடா கண்ணு" என்று முருகேசன் வித விதமாக அழைக்க, சமையல் அறை வாயிலில் நின்று பார்த்துதான் இருந்தாள்.. வரவேயில்லை.

"அங்க ஊர்ல கூட உங்ககிட்ட வரமாட்டாளா?" என்று ஆதவன் கேட்க..

"ம்கூம்! தாமரை விட்டு யார்கிட்டயும் வர மாட்டா.. அவ இல்லாத போது தாமரை அம்மா கிட்ட போவா அவ்வளவுதான், ரெண்டு வயசு இருக்கும்போது.. ஒரு ரெண்டு நாள் தாமரைக்குக் காய்ச்சல். குழந்தைக்கும் காய்ச்சல் வந்திடும்னு நாங்க பக்கத்துல விடலை! அவ்வளவுதான் மித்ராவை ஒரு வாரம் பெட்ல சேர்க்கற மாதிரி வந்துடுச்சு! ஆச்சு போச்சுன்னு ஆகிடுச்சு!" என்று அவர் சொல்ல...

சின்ன வயது ஏன் இப்படி இரண்டாம்தாரம் என்று சில முறை யோசித்திருந்த ஆதவனுக்கு மித்ராவிற்காகத் தான் எல்லாம் என்று புரிந்தது. கவனித்துப் பார்த்த போது மித்ரா தாமரையின் பின் சுற்றுவதும் அவளை ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை தூக்கு என்று சொல்வதும் தெரிந்தது.

அவளை தூக்கி விட்டால் அஸ்வதி உடனே நானும் என்பது போல போவது தெரிந்தது.

பிருந்தாவை அழைத்து “போடா, ரெண்டு பேரையும் இங்க கூட்டிட்டு வா” என்று அனுப்பினான்.

அதன் பிறகு அழகர் முருகேசனுடன் பேசிக் கொண்டிருக்க.. சம்மந்திகள் அமர்ந்து இருவரும் உணவு அருந்த.. உண்டு முடித்ததும் அவர்களின் செங்கல் சூளைக்கு எப்போதும் வரும் வேன் டிரைவரை அழைத்து… “அய்யாவை கொண்டு விட்டுட்டு வா” என்று சொல்லி அவனின் புல்லட்டைக் கொடுத்தான்.

மதுரைக்கு பக்கத்தில் இருக்கும் ஒரு கிராமம்தான் தாமரையினுடையது. ஆனால் பஸ் குறிப்பிட்ட சமயம் மட்டும்தான் வரும். அதுவும் கடைசி பஸ் எட்டு மணிக்கு பிறகு இல்லை. மெயின் ரோடில் இறங்கி கிட்டத்தட்ட மூன்று கிலோமீட்டர் உள்செல்ல வேண்டும்.

“பரவாயில்லைங்க, நான் ரோட்ல இருந்து நடந்து போய்க்குவேன்!” என்று அவர் மறுக்க மறுக்க..

“சொன்னா கேளுங்கப்பா! தனியா எல்லாம் நடந்து போகாதீங்க!” என்று சற்று அதட்டலாகப் பேசினாள் தாமரை… இவள் இப்படிக் கூடப் பேசுவாளா என்று ஆதவன் பார்த்திருக்க..

“மிலிட்டரிக்காரன்மா! எனக்கு என்ன பயம்..!”

“அதுதான்பா என் பயம். அதுக்குதான்பா சொல்றேன். உங்களுக்கு பயமில்லை.. நீங்க நடந்து போகும்போது ரோட்ல ஆயிரம் நடக்கும். தட்டிக் கேட்கறேன் பேர்வழின்னு நீங்க கிளம்பி வேண்டாத பிரச்சினையெல்லாம் இழுத்து விட்டுக்குவீங்க.. என் நாடு, என் தேசம்ன்னு கிளம்புவீங்க! போங்க! சொல்றதை செய்ங்க!” என்றாள்.

Mallika Manivannan

இப்போது மரகதமும் பார்த்தார்.. “நான் பேசுவதற்கு ஒரு வார்த்தை மறுத்துப் பேசமாட்டாள்.. நான் சுபாவம் அப்படி என்று நினைத்திருக்க என்னிடம்தான் பேசுவதில்லையா” என்று பார்த்திருந்தார்.

இத்தனை நாட்களில் இன்றுதான் சற்று மனநிறைவோடு அவர் தன் பெண் வீட்டில் இருந்து கிளம்பினார் “நாளைக்கு அம்மாவைக் கூட்டிட்டு வரேன், பொறந்த குழந்தையைப் பார்க்க” என்று சொல்லியபடி.

“இன்னைக்கு தானேப்பா வந்தீங்க. நாளைக்கே அலைச்சல் படாதீங்க.. ஒரு ரெண்டு நாள் போகட்டும்” என்றாள் அவரிடம் சென்று மெதுவாக.

“ஐயோ கண்ணு! சம்மந்தக்காரங்க வீட்ல எல்லாம் இப்படித் தள்ளி போடக் கூடாது” என்று சொல்லியபடி அவரும் கிளம்பினார்.

“அப்பா நாளைக்கு வரும்போது மித்ராவோட பாஸ்புக் எடுத்துட்டு வாங்க…, அந்த அக்கௌன்ட்டோட ஏ.டி.எம் கார்ட் எல்லாம் எடுத்துட்டு வாங்க” என்றாள்.

எதற்கு என்றெல்லாம் அவர் கேட்கவில்லை.. “சரி” என்று சொல்லியபடி அவர் போய் விட..

அதைக் கேட்டிருந்த ஆதவன்தான் “எதுக்கு பாஸ்புக்” என,

“மித்ராக்கு ஃபீஸ் கட்ட” என்றாள் தயங்கித் தயங்கி.

“என்ன?” என்று ஒரு நிமிடம் நின்று விட்டான்.. அவன் முகம் கோபத்தில் சிவந்தே விட்டது. மாநிறம் கருமை நிறமாக மாறிவிட்டது அவ்வளவு கோபம்.

அவனின் முகம் காட்டிய கோபத்தில் தாமரை பயந்து நின்று விட்டாள்.

Mallika Manivannan

**அத்தியாயம் ஒன்பது :**

"அத்தைதான் சொன்னாங்க, மித்ராக்கு ஃபீஸ் கட்டுறது உங்களுக்கு தொந்தரவுன்னு அதான்" என்று அவசரமாக ஒரு விளக்கம் கொடுத்தாள்.

அதை ஆதவன் காதில் வாங்கியது மாதிரியே தெரியவில்லை, அவன் பாட்டிற்கு உள்ளே சென்று விட்டான். கோபம் அதிகமாக அவனால் தன்னைக் கட்டுப்படுத்த முடியாது என்று நினைக்கும்போது அந்த இடத்தை விட்டு அகன்றுவிடுவான். இப்போது அதைத்தான் செய்தான்.

அப்பாவுடன் அவன் பேசிக் கொண்டிருக்க.. தாமரையால் அவனைப் பார்க்கத்தான் முடிந்தது. அருகில் நெருங்கிப் பேச முடியவில்லை. குழந்தைகள் அவள் செல்லாமல் உறங்க மாட்டார்கள் என்றுணர்ந்து அவர்களை உறங்க வைக்க சென்றாள்.

"அம்மா! நாம இங்க படுக்கிறோமா" என்று மித்ரா மெத்தையைக் காட்ட, "ஆம்" என்று தலையசைத்து மூவரையும் வரிசையாகப் படுக்க வைத்து, அஸ்வதியைத் தட்டிக் கொடுக்க.. மூவருமே சிறிது நேரத்தில் உறங்கி விட்டனர்.

பின்பு வெளியே ஹாலிற்கு செல்ல.. மரகதம் உண்டு கொண்டிருந்தார், அழகரும் ஆதவனும் அப்போதும் பேசிக் கொண்டுதான் இருந்தனர்.

சமையலறை சென்று சிங்க்கில் கிடந்த பாத்திரங்களைக் கழுவ ஆரம்பித்தாள். கை கழுவ வந்த மரகதம்.. "ஒரு ரெண்டு தடவை சொன்னா இந்த வெயில் காலத்துலயும் மதியம் செஞ்ச சாப்பாடு சாப்பிடுவியா! வேண்டாம்..!" என்றார்.

எதற்கு இந்தக் கரிசனம் திடீரென்று என்று புரியாமல் பார்த்து நின்றாள்.

Mallika Manivannan

“ஆதவனுக்கு என்ன கொடுக்கறியோ அதைச் சாப்பிடு” என்றார்.

“சரிங்கத்தை” என்று சொல்ல.. “அவனோட உட்கார்ந்து சாப்பிடு! அப்போதான் நீ என்ன சாப்பிடறேன்னு அவனுக்குத் தெரியும்” என்று சொல்லி மரகதம் அவரின் ஜோலி முடிந்தது என்று சென்று விட்டார்.

அவரின் பேச்சிலேயே இது ஆதவனின் வேலை என்று புரிந்தது. “சற்று இளகி இப்போதுதான் கவனிக்கிறார், இதில் நான் வேறு கோபப்படுத்தி விட்டேனே” என்று தாமரைக்குத் தோன்றியது.

சாப்பிட அமருவானா என்று பார்க்க.. அப்பாவிடம் பேசி முடித்தவன்.. பின்பு யாரிடமோ வெளியில் வாயிலில் நின்று போன் பேச ஆரம்பிக்க... மாற்றி மாற்றிப் ஃபோன்கள் பேசிக் கொண்டிருந்தான். மீண்டும் செங்கல் சூளை ஆரம்பிக்க முடிவெடுத்து இருந்தான். அதைதான் அப்பாவிடம் சொல்லி விட்டு வேறு ஏற்பாடுகள் பார்த்துக் கொண்டிருந்தான்.

Mallika Manivannan

தாமரையின் அப்பாவை விடச் சென்றவன், திரும்ப வந்து வண்டியை விட.. அவனிடம் ஒரு அரை மணிநேரம் பேசினான். வேலை என்று வந்துவிட்டால் ஆதவனுக்கு வேறு யோசனைகள் வராது.

பார்த்துக் களைத்தவள் ஹாலில் சுவரோரமாக சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

அன்றும் பதினோரு மணி ஆகிவிட்டது. ஆதவன் வீட்டின் உள் வந்த போது, சுவரில் சாய்ந்து வாயிலை அவன் எப்போது வருவான் என்பது போல பார்த்து இருந்த தாமரை ஆதவனின் பார்வையில் பட்டாள்.

அவள் அமர்ந்து இருந்த விதமே மனதை என்னவோ செய்தது. கோபம் குறைந்து இருந்தாலும் முற்றிலும் மறையவில்லை.

இவனைப் பார்த்ததும் எழுந்து சமையலறை நோக்கி போக...

“எனக்கு டிஃபன் வேண்டாம்” என்றான்.

“ஏன்?” என்றாள் திரும்பி.

“வேண்டாம்!” என்று ஆதவன் முறுக்கிக் கொள்ள.. மனது ஏனோ சலிப்பாக வந்தது தாமரைக்கு.

பதில் பேசாமல் போய் சமையல் கட்டில் இருந்ததை எல்லாம் எடுத்து பிரிட்ஜில் வைத்து... அவளும் உறங்க வர...

“நீ சாப்பிடலை”

“சாப்பிடலை” என்று மித்ராவைக் கூட எதிர்பார்க்காமல் மெத்தையில் படுக்காமல் பாயை விரித்துப் படுத்துக் கொண்டாள்.

எல்லாம் ஒரு இரண்டு நிமிடத்தில், மின்னல் வேகத்தில்..

ஏதாவது பேசுவாள் என்று பார்த்தால் பேசவே இல்லை. ஆதவனுக்கு கடுப்பாக வர, அவளருகில் வந்து நின்றான்.. எதற்குப் பார்க்கிறான் என்று தெரியாமல் எழுந்து அமர்ந்து “என்ன” என்று பார்க்க.

“ஒரு மனுஷன் சாப்பிடலைன்னு சொன்னா, சாப்பிடுங்க சொல்லணும், எப்படியோ போகட்டும்னு நீயும் சாப்பிடாம போய் படுத்துக்குவியா” என்று கேட்க,

“நான் என்ன பண்ணட்டும்” என்றாள் பாவமாக,

Mallika Manivannan

“என்ன பண்ணட்டும்னு என்னைக் கேட்டா? உங்க அப்பாகிட்ட அவ்வளவு பேசற?”

“அவர் என்கிட்ட பேசறார், பேசறேன்! நீங்க எங்க பேசறீங்க?” என்றாள் நேரடியாக.

ஆதவனுக்கு கோபம் போய் புன்னகை வருவேனா என்றது. இருந்தாலும் முகத்தை சீரியசாக வைத்து, “சரி இப்போ பேசறேன்.. எதுக்கு பாஸ் புக் கேட்ட, என்னால ஃபீஸ் கட்ட முடியாதுன்னா? அப்போ எதுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும், மித்ராவையும் பார்த்துக்கணும்னு தானே.. இப்போ எங்க அம்மா சொன்னாங்கன்னு பாஸ் புக் கொடுக்கற?” என்று வரிசையாக கேள்விகளை அடுக்க...

அவன் என்ன கேட்க வருகிறான் என்றே தாமரைக்குப் புரியவில்லை.

“நாளைக்கு எங்கம்மா அவ இங்க இருக்கக் கூடாதுன்னு சொன்னா என்ன பண்ணுவ?” என்றான்.

தாமரை சற்றும் யோசிக்கவில்லை “நானும் போயிடுவேன்” என்றாள் நொடியும் தாமதியாது.

“என்ன? என்ன சொல்ற?” என்று அதிர்ந்து நின்று விட்டான்.

ஆதவன் எதிர்பார்த்த பதில் “அப்படி எல்லாம் மித்ரா போக மாட்டா! அவ இங்க தான் இருப்பா! அவ என் பொண்ணு!” என்ற பதிலைத் தான்.. இந்த பதிலை அவன் எதிர்பார்க்கவில்லை.

அப்படியே சுவரில் சாய்ந்து நின்று விட்டான்.

கேட்டதற்கு பதில் சொன்னேன் என்பது மாதிரி தாமரை அவனை பார்த்து நின்றிருக்க.. “இதுக்கு நீயும் பேசியிருக்க வேண்டாம்! நானும் பேசியிருக்க வேண்டாம்!” என்றவன்,

Mallika Manivannan

“பசிக்குது!” என...

வேகமாகச் சென்று தட்டை வைத்தாள்.. அவனின் முகம் பார்க்க... அது இறுகியிருந்தது.

“நான் உங்களைக் கோபப்படுத்தணும்னு சொல்லலை! நிஜமாத்தான் சொன்னேன்..”

“நேத்துதானே சொன்னேன்! நிஜம்னாலும் சில சமயம் பேசக் கூடாது. பொய் சில நேரங்கள்ல இல்லை பல நேரங்கள்ல அழகானது. அந்த ஒரு மாயத் தோற்றம் தான் பல உறவுகளை, பந்தத்தை பிடிச்சு வைக்குது” என்றான் உணர்ந்து.

“ஆனா, இங்க, இப்ப, நீ சொன்னது உண்மை கிடையாது.... உண்மை என்னன்னா, நீ என் மனைவி! அதனால் மித்ரா என் பொண்ணு! அவ்வளவுதான்.. இந்த உலகத்துல நான் உயிரோட இருக்குறவரை நீங்க என்னை விட்டுப் போக முடியாது! புரிஞ்சதா?” என்றான் சற்று கடுமையாக

“இந்த மாதிரி பேச்சுக்குக்கூடப் போயிடுவேன் சொல்லக் கூடாது.. உன்னோட இந்தக் கல்யாணம் மித்ராவுக்காக என்னோட நடந்து இருக்கலாம்! ஆனா இனிமே மித்ராவுக்காகக் கூட என்னை விட்டு நீ போக முடியாது” என்றான் கடுமையாகவே.

தாமரை அவன் பேசுவதை புரியாத பாவனையில் பார்த்து இருந்தாள். கூடவே “அந்தப் பணம் வசூல் பண்ண ஆளுங்களை மிரட்டுன மாதிரியே என்கிட்ட மிரட்டுறாரே! பெரிய சண்டியர்தான்!” என்று மீண்டும் மனதில் ஓடியது.

“என்ன புரிஞ்சதா?” என்றான்.

“இந்த ஒரு தடவை உண்மை பேசட்டா” என்றாள்.

“என்ன உண்மை?”

“அது புரிஞ்ச மாதிரியும் இருக்கு, புரியாத மாதிரியும் இருக்கு!”

“என்ன புரிஞ்சது? என்ன புரியலை?”

“நமக்குக் கல்யாணம் ஆகி ஆறு மாசம் ஆகிடுச்சு! அது புரிஞ்சது! ஒரு ரெண்டு மூணு நாளாதான் என்கிட்டே சகஜமா பேசவே ஆரம்பிச்சு இருக்கீங்க! அதுக்குள்ள இப்படிப் பேசினா? அதுதான் புரியலை!”

“இவள் என்னைக் கிண்டல் செய்கிறாளோ?” என்று ஆதவன் பார்க்க... தாமரையின் பேச்சில் கிண்டல் எல்லாம் இல்லை, அவன் பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

“நிஜமா கேட்கறியா?”

“ஆமாம்!” என்பது போல தலையாட்ட,

“அதுவா நான் ரொம்ப கொடுமைக்காரன்! அதுதான் இப்படிப் பேசறேன்!” என்றான் நக்கலாக.

“நிஜமாகவே இவன் கொடுமைக்காரனா” என்பது போலப் பார்த்தாள். பேச்சின் ஜாலங்கள் புரியாத அவளின் எளிமை கவர.... “இவ்வளவு நல்லவளாடீ நீ” என்ற நினைப்பு தோன்ற அவனுக்கு சிரிப்பு வந்தது.

சிரித்தவனைப் பார்த்து “நீங்க என்னைக் கிண்டல் பண்ணறீங்களா?” என்றாள்.

“ரொம்ப சீக்கிரம் கண்டுபிடிச்சிட்ட” என்றவன்.. “என் மேல ஏதோ ஒரு நம்பிக்கை இருக்கவும்தான கல்யாணம் பண்ணிக்கிட்ட.... இனிமே இப்படிப் போயிடுவேன் எல்லாம் சொல்லக் கூடாது” என்றான் நல்ல விதமாக அவளுக்குப் புரிய வைக்கும் நோக்கில்.

Mallika Manivannan

“ஆனா மித்ராவை விளையாட்டுக்குக் கூட நீங்க அப்படி சொல்லக் கூடாது”

“சொல்ல மாட்டேன்.. பிருந்தா மாதிரி அஸ்வதி மாதிரிதான் எனக்கு அவ.. நீ சீக்கிரம் அவளை என்கூட ஃபிரண்ட் ஆக்கு. மத்தது நான் பார்த்துக்கறேன்” என்றவன் “சாப்பிடலாமா” என்றான்.

“ம்” என்றவள் அவனுக்குப் பரிமாற.. சாப்பிட ஆரம்பித்தான். அவளைப் பரிமாற சொன்னதையே அவன் உணரவில்லை, இயல்பாக நடந்தது, உண்டு கொண்டிருக்க...

“நானும் சாப்பிடட்டுமா?” என்றாள்.

“சாப்பிடு!” என்றவன், அதிசயமாக என்ன கேள்வி இது என்பது போல பார்த்தான்.

“அது, அத்தை உங்களுக்கு என்ன டிஃபன் செய்யறனோ அதை தான் நானும் சாப்பிடணும்! உங்களோட உட்கார்ந்து சாப்பிடணும்னு சொன்னாங்க” என்றாள்.

“எங்கம்மா என்னோட அம்மான்னு காட்டுறாங்க போல!” என்று நினைத்தவனாக இப்போது மீண்டும் ஆதவனுக்கு சிரிப்பு வந்துவிட்டது..

சிரித்தவுடன் ஏதோ கிண்டல் செய்கிறான் என்று புரிந்தவள்.. “நான் வேணும்னா திரும்பி உட்கார்ந்து சாப்பிடறேன்” என்று சொல்ல,

இப்போது இன்னும் ஆதவனுக்கு சிரிப்பு பீறிட.. புரையேறிக் கொண்டது அவனுக்கு.

அவசரமாக தண்ணீர் எடுத்துக் கொடுத்து.. அவன் தலையில் வேறு தட்டி விட்டாள்.

Mallika Manivannan

சற்று ஆசுவாசப்பட்டதும்.... “இதுதான் சாக்குன்னு என்னை அடிச்சிட்ட” என்று சொல்ல,

“அச்சோ! இல்லையில்லை!” என்று பதறினாள்.

“அச்சோ! பதட்டப்படாத!” என்று அவள் மாதிரியே சொல்லவும்..

“என்னடா ஆச்சு இவருக்கு? ஏதாவது காத்து கருப்பு அண்டிடுச்சா!” என்பது போல அவனைப் பார்த்திருந்தாள்..

அவளின் இந்த பாவனை மீண்டும் புன்னகைக்க வைக்க, “இந்த மாதிரி நான் எப்போ சிரிச்சேன்னு கூடத் தெரியலை! தேங்க்ஸ்!” என்றான்.

“சரி, சாப்பிடு!” என்று சொல்ல... அவளும் உண்ண ஆரம்பித்தாள். ஆனால் ஆதவன் எப்பொழுதும் போல விரைவாக உண்டு முடித்து விட்டான்.

இன்னம் தாமரையின் தட்டில் உணவு அப்படியே இருக்க.. தான் இருப்பதால் விரைவாக உண்ண வரவில்லை போல என நினைத்து, “நான் எழுந்துக்கறேன்” என்று சொல்லி எழுந்து போக.... அவன் சென்று விட்டதை உறுதி செய்து,

“ஹப்பா” என்று பெருமூச்சு விட்ட தாமரை... “நான் என்ன காமெடியா பண்ணினேன்! சிரிச்சாராம்..! இவரை யாரு எப்போ சிரிக்க வேணாம்னு சொன்னதாம்! யாருக்குத்தான் கஷ்டமில்லை.. எல்லோரும் சிரிக்காமயா இருக்காங்க! இவர் கூடதான் ஆறு மாசமா என்கூட சரியா பேசலை, இவங்கம்மா ரூல்ஸ்ஸா போட்டாங்க! நான் சிரிக்காமயா இருந்தேன்?” என்று தனக்குத்தானே பேச..

உண்ணும் இடத்தில் செல் ஃபோன் மறந்து வைத்து சென்றிருந்த ஆதவன் அதை எடுக்க வேண்டி மீண்டும் வர, அவளின் வார்த்தைகள் அவனின் காதில் தெளிவாக விழுந்தது.

Mallika Manivannan

அவளின் பேச்சில் புன்னகை அரும்ப, மீண்டும் அவளின் எளிமை கவர, வந்த சுவடு தெரியாமல் மீண்டும் திரும்பினான். தாமரை எளிமையானவள் மட்டுமல்ல மிகவும் நேர்மையானவள், அவளின் அப்பா பிறந்தில் இருந்தே அவளுள் விதைத்து வளர்த்த ஒன்று.

மீண்டும் ஆதவன் தரையில் படுக்க.. தாமரை வேறு வழியின்றி மெத்தையில் படுத்தாள். "உன் கால் புண் எப்படி இருக்கு?" என்றான் திடீரென்று.

"நல்லாயிருக்கு!" என்றவளைப் பார்த்து "எங்க காட்டு" என்று எழுந்து அமர.. அவன் ஒரு பக்கம், இவள் ஒரு பக்கம், நடுவில் குழந்தைகள்,

"எனக்கு தூக்கம் வருது, நாளைக்குக் காட்டட்டுமா?" என்றாள்.

"சரி" என்று ஒரு தலையசைப்பைக் கொடுத்தான்.

தாமரையின் பாவனைகளில் பேச்சுக்களில் மனது மிகவும் லேசாகியிருக்க.. கூடவே பிடித்த தொழிலுக்கு மீண்டும் போகப் போகிறோம் என்ற உற்சாகம் எல்லாம் சேர்த்து நன்கு ஆழ்ந்த உறக்கம் அவனிற்கு அன்று.

அடுத்த நாள் விடுமுறை தினம் என்பதால்... ஆதவனின் உறக்கமும் கலைக்கப் படவில்லை... பிருந்தாவையும் தாமரை எழுப்ப வில்லை. அப்பாவும் மகளும் எட்டு மணிக்கு மேலும் உறங்கிக் கொண்டுதான் இருந்தனர்.

ரூமை வெளியில் இருந்து சாத்தியிருந்தாள். இல்லையென்றால் அஸ்வதியோ மித்ராவோ அவர்களை எழுப்பி விடுவர் என்று.

Mallika Manivannan

தம்பிக்கு மகன் பிறந்திருப்பதால் அதைப் பார்ப்பதற்காக அன்று ஆதவனின் தங்கை குழலி வருவதாக இருந்ததால், மரகதம் எழுந்ததில் இருந்து பரபரப்பாக இருந்தார்..

அதை செய்! இதை செய்! என்று காலையிலிருந்தே அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தது. மேல் வேலைக்கு ஒரு பெண்ணைக் கூட  வர சொல்லியிருந்தார்.

அதனால் அதிக வேலைகள் என்றாலும் உதவிக்கு ஆள் இருக்க தாமரை செய்து கொண்டிருந்தாள்.

ஒரு பக்கம் மெதுவடைக்கு கிரைண்டரில் ஓடிக் கொண்டிருக்க... ஒரு பக்கம் சாம்பார் குக்கரில் இருக்க... இன்னொரு பக்கம் இட்லி வேக.. இன்னொரு பக்கம் சட்னிக்கு மிக்ஸியில் அரைத்துக் கொண்டிருந்தாள் தாமரை. அதற்கு சற்று முன்தான் கேசரியை கிளறி முடித்திருந்தாள்.

அஸ்வதியும் மித்ராவும் அந்த இடத்தை விட்டு அசைவேனா என்று அங்கே அமர்ந்தபடிதான் விளையாடிக் கொண்டு இருந்தனர். இன்னும் குழந்தைகள் இருவரையும் குளிக்க வைக்கவில்லை.

அவர்களின் மீது ஒரு கண் வைத்துக் கொண்டு, சமைத்துக் கொண்டு என்று பரபரப்பாக தாமரையும் இருந்தாள்.

சட்னி அரைத்து, வடைக்கு கிரைண்டரில் இருந்து எடுத்துக் கொண்டிருந்தாள். குளித்த உடனே வேலைகள் ஆரம்பமாகிவிட்டன, ஒரு நூல் புடவையில், ஒப்பனைகள் எதுவுமின்றி ஒரு பொட்டை மட்டும் வைத்து.. நேற்று வாரிய தலையை ஒதுக்கி மட்டும் விட்டு வேலைகள் செய்து கொண்டிருந்தாள்.

Mallika Manivannan

அதற்குள் அவர்கள் வந்துவிட... மரகதம் வந்து “வா!வா! அவங்களை வரவேற்றுவிட்டு தண்ணி கொண்டு வா!” என்று சொல்லிப் போக..

அவசரமாக கைகளைக் கழுவி... “வாங்கம்மா! வாங்கண்ணா! வாங்கண்ணி! என்று சொல்ல.. குழலியின் மாமியார், அவளை மரியாதையாகப் பார்த்து புன்னகைக்க, குழலி முக மலர்ச்சியோடு அவளைப் பார்த்து சிரிக்க... அவளின் கணவன் ஸ்ரீநிவாசன் ஒப்புக்கு தாமரையைப் பார்த்து தலையசைத்தான்.

பணத்தின் மீது அதிக பற்றுள்ளவன், அந்தப் பசை உள்ளவர்களிடம் மட்டும் எப்போதும் பேசி சிரிப்பவன், ஆட்களும் பளபளவென்று இருக்க வேண்டும்.. உழைப்பின் களைப்போ, இயற்கை அழகோ தெரியாதவன். தாமரை வேலைகளில் வியர்த்து விறுவிறுத்து அலுங்கி இருக்க, ஏதோ வேலையாளின் மரியாதையை ஏற்பது போல ஏற்றான்.

அதிகம் அவர்கள் வருவதில்லை, தாமரைக்குத் திருமணம் ஆனதில் இருந்து ஒரு இரண்டு முறை வந்திருப்பர்.

ஸ்ரீநிவாசன் அரசாங்க ஊழியன்.. R T O அதாவது ... ஆய்வாளர், வட்டாரப் போக்குவரத்துக் கழகம் அவனின் பணி. எப்போதும் தங்கள் தொழிலில் அடிக்கடி ஏற்ற இறக்கங்களை சந்திப்பதால் அழகர் அரசாங்கத்தில் பெரிய பதவியில் இருப்பவனாகப் பார்த்து தேடி, சீர்வரிசைகளைக் கொட்டி உடல் முழுவதும் நகைகளை பூட்டி பெண் கொடுத்தார்.

குழலி ஆதவனுக்கு இளையவள், சேரனுக்கு மூத்தவள்.. இரண்டு ஆண் மக்கள் அவளுக்கு, ஒருவனுக்கு பன்னிரெண்டு, இன்னொருவனுக்கு பத்து வயது.

மக்கள் சகிதம்தான் வந்திருந்தனர். கூட ஸ்ரீநிவாசனின் அம்மாவும் வந்திருந்தார்.

Mallika Manivannan

அவர்கள் வந்த சமயம்தான் சேரன் வீட்டிற்கு குளிக்க வந்திருந்தான்.

தாமரை இவர்கள் வந்துவிட்டதால் கதவை திறந்து ஆதவனை எழுப்பினாள்.

எழுந்து வந்தவன் தனித்தனியாக எல்லோரையும் வரவேற்க... ஆதவனின் சமீபத்திய தொழில் இறக்கங்கள் ஸ்ரீநிவாசன் அறிந்ததே.. அதனைக் கொண்டு சற்று இளக்காரம்.

“என்ன மச்சான் இன்னுமா தூக்கம்? நாங்க திருச்சில இருந்து காலையில கிளம்பி வந்துட்டோம். நீங்க உங்க ரூம் கதவை திறந்து வர இவ்வளவு நேரம்.. வாழ்க்கையில வேகம் ரொம்ப முக்கியம் மாப்பிள்ளை”.

குழலி பதறி அண்ணனுக்கு கோபம் வந்து விட்டதோ என்று பார்க்க..

ஸ்ரீநிவாசனைப் பற்றி தெரிந்தவனாக, ஆதவன், கோபப்படாதே மனமே என்று அவனுக்கு அவனே சொல்லி, சற்றும் அலட்டிக் கொள்ளாமல்... “R T O ன்னு காட்டுறீங்க மச்சான் வேகத்தைப் பத்தி பேசி.. ஆனா நீங்கதானே சொல்றீங்க மித வேகம் மிக நன்றுன்னு.. யாரையும் இடிச்சி தள்ளி ஆக்சிடன்ட் பண்ணக் கூடாது.. அதுதான் லேட்” என்று இயல்பாக பேச.

எதையும் குதர்க்கமாக எடுத்துக் கொள்ளும் இயல்பினன் என்பதால்,

“அதென்னவோ மச்சான், சாவைப் பத்தி உங்களுக்குத் தான் தெரியும்.. இப்போதானே பொண்டாட்டியை சாகக் குடுத்து இருக்கீங்க!” என்று ஸ்ரீநிவாசன் சொன்னவுடன் வீட்டில் அப்படியே பேச்சுக்கள் நின்று ஒரு அமைதி.

Mallika Manivannan

ஆதவன் கண்களை மூடி அந்தப் பேச்சினை, அதன் சாராம்சத்தை சகிக்க முற்பட்டான். இயல்பிற்கு வந்து கொண்டிருந்த அவனின் நிலை மீண்டும் மாற முற்பட்டது. முகம் சட்டென்று இறுகி விட....

அவனையே பார்த்துக் கொண்டிருந்த தாமரைக்கு மனது பதறியது.

**அத்தியாயம் பத்து :**

அந்த இடத்தை விட்டு ஆதவன் எழ முற்பட.. ஆதவனின் கோபம் அவனோடு வளர்ந்த குழலி அறியாததா.. அதுவும் சுகன்யாவின் பால் அவனின் காதல் எல்லோரும் அறிந்ததே...

அவனருகில் வந்த குழலி அவனின் தோள் அழுத்தி “உட்காருங்க அண்ணா..” என்றாள்.

“செத்தவனுக்குதான் சொர்க்கமும் நரகமும் தெரியும் அதுமாதிரி.. சுகன்யா இல்லாததால சாவைப் பத்தி உங்களுக்குத் தெரியும்னு சொன்னார்தானே! அவருக்கும் காட்டறேன்!” என்று குழலி கோபமாக சொல்ல...

மொத்த வீடும் பதறியது... “ஐயோ!” என்று பதறி ஸ்ரீநிவாசன் வாயினில் கைவைத்தான். குழலி மாமியார் ஒரு படி மேலே போய் “அவன் சொல்றான்னு நீ வேற ஏன்?” என்று மருமகளைக் கடிந்து மகனின் முகத்தை முறைத்து பார்த்தார்.

“இவர் சொல்றார்ன்னு நீயும் ஏன் குழலி..” என்று ஆதவன்தான் தங்கையை சமாதானப்படுத்தும்படி ஆகிற்று..

“இந்தப் பேச்சையெல்லாம் சகிச்சு எப்படித்தான் இவரோட குப்பை கொட்டுறியோ! நான் கொஞ்ச நேரம் வெளிய போயிட்டு வர்றேன்! இல்லை மதுரைக்காரங்க எப்படின்னு எனக்கு தெரியாமயே காட்டிடுவேன்..” என்று சட்டையை மாற்றி வண்டி எடுத்து கிளம்பி விட்டான்.

Mallika Manivannan

"ஹப்பா!" என்று மூச்சு விட்டனர். "டேடி இன்னைக்கு மாமாகிட்ட அடி வாங்குவார்ன்னு நினைச்சேன்!" என்று அவளின் சின்ன மகன் குழலியிடம் கிசுகிசுக்க..

"உன் புத்திசாலித்தனம் உங்கப்பா கிட்ட கிடையாதுடா" என்று மகனிடம் குழலியும் கிசுகிசுத்தாள்..

பெரியவன் நேரடியாக அப்பாவை முறைத்தான்.

"என்னங்கடா நடக்குது என்னை சுத்தி!" என்று ஸ்ரீநிவாசன்தான் நொந்து கொள்ளும்படி ஆகிற்று.

அழகரும் ஏதோ வேலையிருப்பது போல அகல.. அம்மாவை உள்ளே செல்லும்படி அனுப்பிய குழலி..

"வந்தமா! மாமியார் வீட்ல குடுக்குற மரியாதையை வாங்கினமா! சாப்பிட்டோமா! கிளம்பினோமான்னு இருக்கணும்! கண்டதையும் பேசி வெச்சீங்க நீங்க மட்டும்தான் வீட்டுக்குத் திரும்பி போகணும்! நாங்க யாரும் வரமாட்டோம்!"

"குழலி, அவன் எங்க திரும்பி போவான் அடிதான் வாங்குவான். அவ்வளவு அசால்டா பேசறதா நீ.. அந்தப் புள்ளை அவன் பொண்டாட்டிய ஒரு வார்த்தை யாரும் சொல்ல விடமாட்டான்றது ஊரறிஞ்ச ரகசியம்! உன் பசங்களுக்கு கூடத் தெரியும், உனக்குத் தெரியாதா. எப்படியோ தப்பிச்சிட்ட நீ! பெரிய பதவில இருந்து எல்லோரையும் அசால்ட்டா பேசி அதை வீட்டுக்குள்ளயும் கொண்டு வர்ற" என்று அவனின் அம்மா திட்ட.

"என்ன மிரட்டுறீங்களா? நான் யாரு தெரியுமா!" என்று வசனம் பேச..

"யாரு?" என்றாள் குழலி.

ஸ்ரீநிவாசன் முறைத்துப் பார்க்க "இந்த கருமத்துக்குத்தான் உங்களோட எங்கயும் வர்றதில்லை! அடுத்தவங்க மனசு நோகற

Mallika Manivannan

மாதிரி எப்பவும் பேசிக்கிட்டு... பேசாம இருக்க முடியாதுன்னா கிளம்புங்க!" என்று குழலி அடிக் குரலில் சீற...

மனைவியின் கோபம் புரிந்தவனாக, ஏதோ போனால் போகிறது என்பது போல அமைதியானான்.

எப்போதும் அவன் அப்படித்தான்.. வார்த்தைகளால் யாரையாவது காயப்படுத்தினால்தான் அன்றைய அவன் உணவே ஜீரணம் ஆகும். அதுவும் எப்போதும் ஆதவனை சீண்டிக் கொண்டே இருப்பான்.

ஏனென்றால் சுகன்யா அவனை மதிக்கவே மாட்டாள். வீட்டு மாப்பிள்ளை என்ற மரியாதை சற்றும் கொடுக்க மாட்டாள். அது அவனின் இந்த மாதிரி இடக்கு பேச்சுக்களை முன்னிட்டே. ஆதவனை எப்போதோ இந்த மாதிரி மரியாதையில்லாமல் ஸ்ரீநிவாசன் பேச, அதன் பொருட்டே சுகன்யா அவனிடம் அப்படித்தான் நடந்து கொள்வாள்.

அதுவும் பிருந்தா பிறந்தபோது குழலி மருமகள் என்று உறவுமுறை வைத்துப் பேச.... "அப்படியெல்லாம் பேசாதீங்க அண்ணி.. உங்க வீட்டுக்கு எல்லாம் நாங்க பொண்ணு குடுக்க மாட்டோம்.. சும்மா பிருந்தான்னு பேர் சொல்லிக் கூப்பிடுங்க" என்றாள்.

அதனைப் பொருட்டே எப்போதும் ஆதவனை வேண்டுமென்றே வம்பிழுப்பான்.

மகன்களை குழலி பார்க்க.. அப்பாவைப் போல அல்ல அவர்கள்.. தாத்தாவிடம் ஒருவன் தேடித் போய் பேச, ஒருவன் அத்தை என்று தாமரையை தேடிப் போய் பேசினான். மரகதத்திடம் குழலியின் மாமியார் பேச...

Mallika Manivannan

சூழல் மீண்டும் சற்று இயல்பாக ஆரம்பிக்க.. சேரன் அப்போதுதான் குளித்து வந்தான். வந்தவன் “வாங்க மாமா” என்று ஸ்ரீநிவாசன் பக்கம் அமர..

“டேய் மாப்பிள்ளை! என்னை மாதிரி நீயும் பையனைப் பெத்துட்டடா.. உங்கண்ணன் மாதிரி பொம்பளைப் புள்ளைங்களை பெக்காம” என்று மீண்டும் வசனம் பேச..

“அய்யோடா! எங்கே ஆதவன் காதில் விழுந்து விட்டதோ” என்று சேரன் பயந்து பார்க்க.. “உங்க நொண்ணன் வீட்ல இல்லை!” என்றான் ஸ்ரீநிவாசன்.

ஆனால் இதைக் குழலி கேட்டுவிட்டிருக்க... “எங்கண்ணன் மாதிரி ஆளுங்க பொம்பளைப் புள்ளைங்க பெத்ததுனால தான் உங்களை மாதிரி ஆளுங்களுக்கு கல்யாணம் ஆகுது..” என்றவள் கோபம் மிகுதியாக..

“டேய்! நீ போய் சட்டையை மாட்டிட்டு வாடா!” என்று சேரனை அந்த இடத்தை விட்டு அகற்றியவள்....

“இங்க இருந்து போற வரைக்கும் வாயைத் திறந்தீங்க! என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது!” என்று கையை நீட்டி மிரட்டினாள்.

சமையல் அறையில் இருந்து பார்த்திருந்த தாமரை... “உங்க மாமா மாதிரியே உங்க அம்மாவும் போல, நல்லா மிரட்றாங்க” என்று குழலியின் மகனிடம் சொல்ல..

அஸ்வதியைத் தூக்கி வைத்திருந்த அவனும் சிரித்தான்.

“அப்பா எப்பவும் இப்படித்தான் அத்தை.. நாங்க அவரை விட்டுதான் கிளம்பினோம். ஆனா எங்களுக்கு முன்ன கார்ல ஏறி உட்கார்ந்துட்டார்.. நானும் வருவேன்னு அடம் பண்ணினார்” என்று சொல்ல..

Mallika Manivannan

தாமரைக்கு சிரிப்பு வந்து விட.. சிரித்து விட்டாள்.

அரைமணி நேரத்திற்குள் எல்லாம் தயாராகி விட.. “சாப்பிட வாங்க!” என்று ஸ்ரீநிவாசனை அழைத்தார் மரகதம்.

“பெரிய மச்சான் வந்துடட்டும்” என..

வெளியில் யாரும் சிரிக்கவில்லை, ஆனால் உள்ளுக்குள் எல்லோருக்கும் சிரிப்பு..

“வாங்கன்னு நீ கூப்பிடு!” என்று சேரனிடம் மரகதம் சொல்ல,

“நீங்க வாங்க மாமா, அண்ணா வந்துடுவாங்க!” என்று அழைத்தான்.

அப்போதும் ஆதவனுக்காக அமர்ந்திருக்க.. குழலி அழைத்து “அண்ணா வந்துடுங்க, சாப்பிடாம உட்கார்ந்து இருக்கார்!” என்று சொல்ல..

வேறு வழியில்லாமல் ஆதவன் வந்தான். அதுவரையிலும் பிருந்தா எழவில்லை. ஆதவன் போய் எழுப்ப... எழுந்து வந்தவள், குழலியைப் பார்த்ததும் “அத்தை” என்று அருகில் வர... அஸ்வதியை தூக்கி வைத்திருந்த குழலி “செல்லம்” என்று பிருந்தாவை அணைத்தாள்.

தூரத்தில் இருந்து எல்லாம் பார்த்திருந்த மித்ரா, தாமரையின் அருகில் சென்று அவளின் புடவையைப் பிடித்து நின்று கொண்டாள்.

குழலியும் அவளை வந்ததில் இருந்து எப்படி எப்படியோ அழைத்துப் பார்த்திருக்க மித்ரா அருகில் செல்லவே இல்லை.

பிருந்தா வந்ததும், தான் வாங்கி வந்திருந்ததை எல்லாம் ஆளுக்கு ஒன்றாக குழலி கொடுக்க.. அப்போதும் மித்ரா தனியாக வரவில்லை தாமரையின் பின் ஒளிந்து வந்துதான் வாங்கினாள்.

Mallika Manivannan

பெரியவர்களிடம் தான் வரவில்லை. சிறியவர்களிடம் நன்றாக ஒட்டிக் கொண்டாள்.

காலை உணவு முடிந்து குழந்தையை பார்க்க மூவரும் கிளம்பினர்... பிள்ளைகள் வீட்டில்தான் இருந்தனர். அதனால் மரகதம் இருந்து கொண்டார்.

“நீ வரலையா ஆதவா?” என்று சேரன் கேட்க,

“யார்கிட்ட சொன்ன நீ?” என்றான்.

“நான் சொல்லிட்டேனே உன்கிட்ட நேத்து..”

“என்கிட்டே சொன்னா போதுமா!” என்று கேட்க...

அப்போதும் புரியவில்லை “யார்கிட்ட சொல்லணும்” என

ஸ்ரீநிவாசன் நடுவில் புகுந்து “அதொண்ணும் இல்லை மாப்பிள்ளை! நீ பையனைப் பெத்துட்ட இல்லையா? அதான் உங்கண்ணன் சும்மா சாக்கு சொல்றார்” என,

ஆதவன் பேசும் முன் “நீங்க வாங்க!” என்று ஸ்ரீநிவாசனின் கையைப் பிடித்து வெளியே சென்றாள்.

அந்தக் கடுப்பை எல்லாம் சேரனிடம் காட்டினான் ஆதவன்... “உங்க அண்ணிகிட்ட சொல்லணும்னு தோணலையா..?” என்று கத்தினான்.

“என்ன சொல்லலையா? அம்மா சொல்லியிருப்பாங்க நினைச்சேன்” என்றான் தவிப்பாக.

“மரியாதை எல்லாம் தானாக் குடுக்கணும், கேட்டு கேட்டு வாங்கறதா? அம்மாகிட்ட கேட்டா நீ மறந்திருப்பன்னு சொல்றாங்க.. மாடு மாதிரி உங்களுக்கு எல்லாம் வேலை செய்யறா... ஆனா கொஞ்சம் கூட மரியாதையே இல்லை” என்று கடுகடுத்தான்.

Mallika Manivannan

சேரன் அவனிடம் பதிலே பேசவில்லை.. நேராக தாமரையிடம் சென்று “அம்மா சொல்லியிருப்பாங்கன்னு நினைச்சேன்! சொல்லக் கூடாதுன்னு எல்லாம் இல்லை அண்ணி” என்று மன்னிப்பை வேண்ட,

“அச்சோ! எதுக்கு மன்னிப்பு எல்லாம் கேட்கறீங்க! நான் ஒண்ணுமே சொல்லலை .. இவங்கதான் என்னைக் கூட்டிட்டு வரலை!” என்று ஆதவனைக் காட்டினாள்.

வெளியே இருந்து இதைப் பார்த்த ஸ்ரீநிவாசன் “எத்தனை பொண்டாட்டி கட்டினாலும் உங்க அண்ணன் மெயின்டெயின் பண்றாண்டி” என்றான் நக்கலாக.

“சுகன்யா உங்களை மதிக்கவே மாட்டா. என்னாலயும் ஒண்ணும் பண்ண முடியலை. என் அத்தை பொண்ணு.. சின்ன வயசுல இருந்து சிநேகிதம்.. தாமரையையும் உங்க பேச்சால பகைச்சிக்காதீங்க அவ்வளவுதான் சொல்வேன்...”

“எங்கண்ணன் உங்க வீட்டுல பொண்ணு குடுக்கறாங்களோ இல்லையோ எங்கண்ணனைக் கேட்காம நம்ம ஆளுங்க வேற யாரும் கூடப் பொண்ணு குடுக்க மாட்டாங்க!”

“பணம் இன்னைக்கு வரும் நாளைக்கு போகும்.. நம்ம சம்பளக்காரங்க, அவன் தொழில்ல காசை அள்ளிடுவான். அப்புறம் நாமதான் கீழ போயிடுவோம்... ஒழுங்கா இருங்க” என்று மிரட்டினாள்.

ஆம்! எவ்வளவு பெரிய பதவியில் இருக்கிறான். அடுத்தவர் நோகும்படி பேச யோசிக்க மாட்டான். இப்படி ஒரு குறை இருந்தாலும், லஞ்சம் கொட்டும் அவனின் பணியில் ஒரு பைசா கூட லஞ்சம் என்ற ஒன்றை வாங்காதவன் ஸ்ரீநிவாசன். அதனைக் கொண்டே ஆதவன் அவன் என்ன பேசினாலும் “போடா” என்று துடைத்து விட்டுப் போய்விடுவான்.

Mallika Manivannan

அவர்கள் சென்று குழந்தையைப் பார்த்து விட்டு வந்தனர். குழலியின் மாமியார் வேறு ஒரு உறவினர் வீட்டிற்கு சென்று விட இவர்கள் மட்டும்தான். மதிய உணவும் தடபுடலாக இருக்க.. உண்டு முடித்த ஸ்ரீநிவாசனுக்கு தூக்கம் சொக்க..

அவனை உறங்க அனுப்பிய பிறகுதான் "ஷப்பா" என்று குழலி மூச்சு விட்டு நிமிர்ந்தாள். "எப்படித்தான் உன் வீட்டுக்காரரை சமாளிக்கிறியோ" என்று ஆதவன் குறைபட.

"அண்ணா ப்ளீஸ்! எனக்காக அவர் என்ன பேசினாலும் கண்டுக்காத!" என்று குழலி வேண்டிக் கேட்டுக் கொள்ள..

"உன் முகத்துக்காக, உன் பசங்க முகத்துக்காகத்தான் விடறேன்" என்றான்.

பின்பு அவளின் மக்கள் இருவரையும் வெளியே கிளப்பினான்.. இவன் அவர்களின் வீட்டிற்கு செல்ல மாட்டான். அதனால் அவர்கள் வரும்போது உடைகள், தின்பண்டங்கள், விளையாட்டுப் பொருட்கள் என்று குவித்து விடுவான். பிருந்தா "நானும் வருவேன்" என்று அடம் பிடிக்க.. மூவரையும் கிளப்பினாள் குழலி. மித்ரா எட்டி எட்டி பார்த்தபடி நின்றாள்..

"நீயும் வா மித்ரா" என்று ஆதவன் அழைக்க.. தாமரையின் பின் ஓடி மறைந்தாள்.

தாமரை வராமல் வரமாட்டாள் என்று புரிந்தவன்... "நீயும் வா தாமரை" என்றான்..

"அஸ்வதி தூங்கறா!" என்றாள்.

"குழலி பார்த்துக்குவா நீ வா!" என்றான் அதட்டலாக.. அவனுடைய அதட்டலில் தாமரை அரண்டு அப்படியே கிளம்ப..

"அச்சோ தாமரை!" என்று குழலி தலையில் அடித்துக் கொண்டாள். "என்ன புடவை இது? என்ன புடவை கட்டு இது..?

Mallika Manivannan

இப்படி அண்ணாவோட வெளிய போவியா! போ! போ! மாத்திட்டு வா!” என்றாள்.

தாமரை உள் செல்ல...

“நீ அவளை மாத்திட்டு வான்னு சொன்னா, இன்னும் நல்லா இல்லாம ஏதாவது கட்டுவா.. அவளுக்கு தெரியலை! நீ போய் எடுத்துக் கொடு, அப்படியே புடவை கட்ட சொல்லிக் குடு!” என்றான் தங்கைக்கு மட்டும் கேட்கும் மெதுவான குரலில்..

“இப்போதான் என் வீட்டுக்காரர் எத்தனை பொண்டாட்டி கட்டினாலும் மெயின்டைய்ன் பண்றான் உங்க அண்ணன் சொன்னார்! நீ என்னைப் போய் புடவை கட்ட சொல்லிக் குடுக்க சொல்றியே” என்றாள் சன்ன நக்கல் சிரிப்புடன்.

மெலிதாக அவளின் தலையில் தட்டி “போ” என்றான்..

“ஹீரோயினே இல்லாம நடிச்சாலும் கமலஹாசன் காதல் மன்னன்தான் அண்ணா” என்று குழலி மீண்டும் சொல்ல..

“போடி நீ முதல்ல!” என்று சிரிக்க...

குழலிக்கும் சிரிப்பு... அதனோடே அவள் உள்ளே செல்ல...

“சரியான கிறுக்குப் பய!” என்று அவளின் கணவனையும் மனதிற்குள் திட்டினான்.

ஆனாலும் முகத்தில் புன்னகை.. “இன்னும் அந்தப் புள்ள முகத்தைக்கூட நான் சரியா பார்க்கலை.. இதுல இவனுங்க வேற... ஊருக்குள்ள என்னமா உன்னை நம்புறாங்க ஆதவா!” என்று நினைத்தபோது புன்னகை விரிந்தது.

கூடவே சுகன்யாவின் நினைவுகள் சுனாமியாய் மனதில் மேலெழும்பியது... ஏன் இப்படி ஆனது என்று கசந்த முறுவல் மனதில் தோன்றுவதை தடுக்க முடியவில்லை.

Mallika Manivannan

தாமரை வேறு உடை மாற்றி வர.. மித்ரா அவளின் மேல் ஏறி இருந்தாள். படியிறங்கி அவள் வர.. அதனைப் பார்த்தவாறே சுகன்யாவின் நினைவுகளைப் பெருமுயற்சி செய்து பின்தள்ளினான்.

அவனே உணர்ந்தான், மனம் சற்று மாறி வருகிறது.. ஒரு உத்வேகம் தன்னுள் வருகிற இந்த வேளையில் மீண்டும் இழப்பின்பின் மனதை செல்ல விடவேண்டாம் என்று.

திரும்பி தாமரையைப் பார்த்தான்..

குழந்தைகள் அனைவரும் பின் ஏறியிருக்க.. தாமரை "நீங்க முன்ன போங்க" என்று பிள்ளைகளிடம் சொல்லி நின்றிருந்தாள்..

"இவளை என்ன செய்ய?" என்று நினைத்தவன்..

"மித்ராவைப் பின்னாடி விட்டு நீ முன்னாடி ஏறு" என்று ஒரு அதட்டல் போட.. அதன் பின்னேதான் முன் ஏறினாள் தாமரை. அம்பாசிடர் மெதுவாக நகர.... தாமரையின் மனம் கணவனோடான பயணத்தில் வேகமாக நகர்ந்தது.

**அத்தியாயம் பதினொன்று :**

கணவனுடன் ஏறியதுதான், தாமரை மீண்டும் மதுரை மாநகரை வேடிக்கை பார்த்து வர.. மதுரையின் ஒரு புகழ் பெற்ற ஷாப்பிங் மாலிற்கு அழைத்து சென்றான்.

உள்ளே நுழைந்தவுடனே "அப்பா, பானி பூரி!" என்றாள் பிருந்தா.. முதலில் சுகன்யா இருந்தபோது வருவர்... அதன் பிறகு வந்ததே இல்லை.. பிருந்தாவையும் சுகன்யா படுக்கையில் விழுந்தபிறகு இங்கல்ல எங்குமே அழைத்து செல்லவே இல்லை.

வேறு குழந்தைகள் என்றால் அம்மா படுக்கையில் விழுந்து, பிறகு இறந்து, அப்பாவும் தனிமைப்படுத்திக் கொள்ள ஏங்கித்தான் போயிருப்பர். பிருந்தா எதையும் காட்டியதில்லை.

Mallika Manivannan

தாமரை வரும்முன் குழந்தைகள் யாரோடும் ஒட்டமுடியாமல் திணறினர்.

தாமரை வந்த பிறகு எல்லாம் மாறிற்று. அதிக கொஞ்சல்கள் இல்லாவிட்டாலும் தாமரையிடம் எப்போதும் பிருந்தாவிற்கு சலுகைகள் உண்டு. “சித்தி” என்ற வார்த்தையைத்தான் முதலில் தாமரையைப் பார்த்து பிருந்தா சொல்வாள். அப்படித்தான் உறவுகள் சொல்லிக் கொடுத்தனர்.

ஒரு முறை இரண்டு முறை அப்படிக் கூப்பிடாதே என்று தாமரை சொல்லிப் பார்க்க.. பிருந்தா கேட்கவில்லை. “இனிமே இப்படிக் கூப்பிட்டா என்கிட்ட பேசாதே. அம்மா கூப்பிட முடியலைன்னா, தாமரை கூப்பிடு!” என்று பிருந்தாவிடம் கடுமையாகச் சொன்னாள்.

அதுதான் இதுவரை தாமரை பிருந்தாவை அதட்டிய ஒரே விஷயம்.

பிருந்தா அப்பாவிடம் சென்று “திட்டுறாங்க என்னை!” என்று சொல்ல..

என்ன திட்டுறாங்களா என்று கோபம் வரப் பெற்றான். ஆனாலும் தாமரையை தப்பாய் நினைக்கத் தோன்றவில்லை. “என்ன விஷயம்?” என்று கேட்டவன்,

“அவங்க சொல்றது சரிதானே பொண்ணும்மா.. அவங்க உனக்கு அம்மாவாதான் வந்திருக்காங்க சித்தியா இல்லை!” என்று ஆதவனும் சொல்ல..

முதலில் அம்மாவைத் தவிர யாரையும் அம்மா என்று கூப்பிட முடியாத பிடிவாதம் இருந்தாலும், அம்மா இல்லாத பிறகு தாமரையை போல யாரும் கவனித்தது இல்லை. ஆதவன் கவனிப்பான் என்றாலும் வயிற்றிற்கு நேரத்திற்கு பார்த்து பார்த்து உணவு கொடுக்க முடியவில்லை.

Mallika Manivannan

அதை தாமரை செய்ய பிள்ளைகள் தானாக ஒட்டிக் கொண்டனர். தாமரைம்மா என்ற அழைப்பு முதலில் வர, இப்போது சில சமயங்களில் அஸ்வதியையும் மித்ராவையும் பார்த்து “அம்மா” என்று வரத்துவங்கி இருந்தது.

“கொஞ்ச நேரம் சுத்திட்டு வரலாம்டா” என்று அப்பா சொல்ல..

“அவ கேட்கறதே அதிசயம்! அது என்ன அப்புறம், இப்போவே!” என்று தாமரை பிருந்தாவிற்கும் முன் சொன்னாள்.

“போகலாம் மாமா!” என தங்கையின் மக்களும் சொல்ல..

அங்கிருந்த ஒரு சேட்(chat) ஹவுசிற்கு சென்றனர்.

பிருந்தா பானி பூரி சொல்ல, அவன்கள் பாவ் பாஜி சொல்ல.. அங்கே ஸெல்ப் சர்வீஸ் என்பதால் இவர்கள் அமர்ந்து தங்கையின் மக்களைப் போய் அதை வாங்கி வருமாறு பணித்தான்.

“உனக்கு என்ன வேணும் குட்டி” என்று மித்ராவைப் பார்த்துக் கேட்டான்.

அது நான்கு வயது குழந்தை.. இன்னம் இந்த மாதிரி வெளியில் எல்லாம் வந்ததே இல்லை.. இவன் கேட்டதையே கவனிக்கவில்லை... விழி விரித்து எல்லாம் வேடிக்கை பார்த்து இருந்தது... அவளையும் விட தாமரை போவோர் வருவோரை வேடிக்கை பார்த்து இருக்க..

இவன் கேள்வியை அவளும் கவனிக்கவில்லை. “தாமரை” என்று அதட்ட, அதன் பிறகே அவசரமாக இவன் புறம் திரும்பியவள்.. “என்ன?” என,

“கல்யாணம் ஆனதுல இருந்து என்னைக்கூட இப்படிப் பார்த்திருக்க மாட்ட! அப்படி என்ன பார்க்கிற?” என்று கேட்க..

Mallika Manivannan

இதற்கு தாமரை பதில் சொல்லும் முன் பிருந்தா கூறினாள், “அப்பா என்னப்பா நீங்க? தாமரை அம்மா நீங்க வீட்ல இருக்கும்போது உங்களை மட்டும்தான் பார்ப்பாங்க. நீங்கதான் அவங்களை பார்க்க மாட்டீங்க. அப்புறம் என்கிட்டே சொல்லி விடுவாங்க” என்று சொல்ல..

“ஹ! ஹ!” என்று வாய் விட்டு சிரித்து விட்டான் ஆதவன். ஆனாலும் இந்தப் பிள்ளைகள் எதை எதை கவனிக்கிறார்கள் என்று தோன்றியது, கூடவே பிள்ளைகள் கவனிக்கும்படி பாராமுகம் காட்டியிருக்கிறோம் என்று தோன்ற தாமரையிடம் மன்னிப்பை வேண்ட அவளைப் பார்த்தான்.

தாமரையின் முகம் வெட்கத்தை பூசியிருந்தது, கூடவே பிருந்தாவின் பேச்சை அவசரமாக அருகில் யார் எல்லாம் கவனித்தர் என்று பார்த்தால், பரவாயில்லை இவர்கள் நால்வர் மட்டுமே, தங்கையின் மக்கள் ஆர்டர் வாங்க சென்றதை அறிந்து “ஹப்பா” என்று மூச்சு விட்டாள்.

அவளின் பாவனைகளை பார்த்தவன் அமைதியாகி விட்டான்.

பிருந்தா இதுதான் சாக்கென்று “அம்மா இன்னைக்கு அழகா இருக்கீங்க. இனிமே இப்படியே டிரஸ் பண்ணுங்க... அந்த பழைய சாரீ கட்டாதீங்க” என..

“தினமும் எப்படி இப்படிக் கட்ட முடியும். வீட்ல வேலை செய்யும்போது அழுக்காகிடும்”.

“நான் வீட்ல இருக்கும்போது பழைய டிரஸ்ஸா போட்டு விடறீங்க..? மித்ராக்கு போடறதில்லை... அஸ்வதிக்கும் போடறதில்லை! உங்களுக்கு மட்டும் ஏன்..” என்று கேட்க... பிருந்தாவின் புத்திசாலித்தனம், ஆதவனுக்கு சற்று பெருமையாக இருந்தது.

Mallika Manivannan

தாமரை அவள் பேசிய விஷயத்தை யோசித்துக் கொண்டிருக்க, “அப்பா நிறைய எடுத்து குடுப்பாங்க” என்று சொல்லி..

கூடவே “முன்ன அம்மாக்கும் நிறைய எடுத்துக் குடுப்பாங்க! அப்போ உங்களுக்கும் எடுத்துக் கொடுப்பாங்க”, என்று சொல்ல..

ஆதவன் அவசரமாக தாமரையின் முகம் ஆராய்ந்தான் சுகன்யாவின் பேச்சு.. அதை அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்று.

ஆனால் ஒரு வித்தியாசமும் இல்லை... தாமரை பிருந்தாவிடம் பேசிக்கொண்டு இருந்தாள். அதுவே சொன்னது பிருந்தா சுகன்யாவைப் பற்றி அடிக்கடி தாமரையிடம் பேசுவாள் என்று.

தாமரை ஏதோ சொல்ல.. “ம்கூம்! நீங்க இப்படித்தான் டிரஸ் பண்ணனும்! இப்படித்தான் என்னை ஸ்டாப்ல இருந்து கூட்டிட்டுப் போக வரணும்!” என்று சொல்லிக் கொண்டு இருந்தாள்.

இருவரும் பேசிக்கொண்டு இருக்க.. “வா அண்ணனுங்க என்ன பண்றாங்கன்னு பார்க்கலாம்”, என்று மித்ராவை ஆதவன் கை நீட்டி அழைக்க..

அது தாமரையிடம் ஒட்டிக் கொண்டது. அங்கே டாய் ஷாப்பில் இருந்த பெரிய டெடி பியரைக் காட்டி, “அப்பாக்கிட்ட வந்தா வாங்கித் தருவேன்” என்று ஆசை காட்டினான்.

வந்ததில் இருந்து மித்ராவின் பார்வை அங்கேதான் அதிகம் இருந்ததை உணர்ந்து.. மித்ரா அப்போதும் அசையவில்லை.

“போ! போ! அப்பா வாங்கித் தருவாங்க” என்று பிருந்தாவும் ஆசை காட்டினாள்.

Mallika Manivannan

"நான் இப்போ குட்டிம்மாவைத் தூக்கறேன்" என்று சொல்லி.. ஆதவன் வலுக்கட்டாயமாக மித்ராவை தாமரையிடமிருந்து தூக்கினான்.

மித்ராவின் முகம் அழுவது போல மாற.. தாமரையும் கூட எழ..

"அச்சோ! அம்மா உட்காருங்க! அப்பா பார்த்துக்குவார்!" என்றாள் பிருந்தா.

"அப்படியே அப்பாவைப் போல அதட்டுறா" என்று நினைத்த போதும்.. ஒரு புன்னகையுடன் தாமரை அமர்ந்து கொண்டாள்.

மித்ராவை தூக்கிக் கொண்டு அந்த பெட்டி புறம் சென்றான். ஏதோ மித்ராவிடம் கேட்க... அவள் பதில் சொல்லாதபோது பேசிக் கொண்டு இருந்தான். முகத்தில் அவ்வளவு மென்மை கனிவு..

தூரத்தில் இருந்து அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள் தாமரை. "நம்மளை மட்டும்தான் மிரட்டுறாங்களோ! நம்மகிட்ட இப்படி பேசினதே இல்லையே" என்று மனம் சுணங்கியது.

அதற்குள் குழலியின் மகன்கள் எல்லாம் எடுத்து வர..

அப்பா வருவதற்காக பிருந்தா பார்த்திருக்க "நீங்க சாப்பிடுங்க" என்றாள், சாப்பிடவும் வைத்தாள். "அத்தை உங்களுக்கு?" என பிள்ளைகள் கேட்க..

"நீங்க சாப்பிடுங்க! மாமா வரட்டும்!" என்று சொல்லிக் காத்திருக்க, அவர்கள் உண்டு, திரும்ப போய் வாங்கி வந்து அமர்ந்து கொண்டனர்.

Mallika Manivannan

அப்போதும் வரவில்லை.. இத்தனை நாள் அருகில் கூட செல்லாத மித்ரா.. இன்று பாந்தமாய் ஆதவனின் கைகளுக்குள் அடங்கி இருந்தது.

அங்கிருந்தே ஆதவன் இவர்களைத் திரும்பி பார்க்க.. “வாங்கப்பா!” என்று கையசைத்த பிருந்தா அவன் அருகில் வந்ததும்... “மித்ராக்கு வாங்குங்க!” என்று சொல்ல..

பிள்ளைகளின் கையினில் இருந்ததை காட்டி “இது வாங்கலாமா” என, குழந்தை வேண்டாம் என்று தலையசைக்க.. அவளுக்கு மசாலா பூரி வாங்கி அந்த பட்டாணியை ஸ்பூனில் எடுத்து வைக்க.. “வேண்டாம்!” என்று துப்பினாள்.

“ஷ்! என்ன குட்டி நீ!” என்று தாமரை அதட்ட..

“அவளுக்குப் பிடிக்கலை போல!” என்று குழந்தையின் வாய் துடைக்க டிஷ்யு பேப்பர் எடுத்துக் கொடுத்தவன், “நீ சாப்பிடறியா இல்லை வேற சொல்லட்டுமா?” என்றான்.

“நான் சாப்பிடறேன்!” என்று சொல்லி நான்கைந்து வாய் வைத்தவளைப் பார்த்தாலே தெரிந்தது, கஷ்டப்பட்டு உள்ளே தள்ளுகிறாள் என்று..

“பிடிக்கலையா” என்றான்.

“இல்லை” என்று பரிதாபமாகத் தலையாட்ட,

“சரி குடு!” என்று அவனின் பக்கம் நகர்த்த... “அய்யயோ, எச்சில், நான் சாப்பிட்டது” என.

குழந்தைகள் யாரும் கவனித்தார்களா என்று அவசரமாகப் பார்த்தான், அவர்கள் பேச்சு மும்முரத்தில் இருந்தனர். யாரும் கவனிக்கவில்லை.

Mallika Manivannan

தன் தலையில் தானே தட்டிக் கொண்ட ஆதவன், “நீ வாயே திறக்காத” என்று அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் அதட்டி.. அதை எடுத்து உண்ண..

தாமரையின் முகம் காட்டிய பாவனையில்.. “எவளோ மிச்சம் வெச்சதை சாப்பிடற மாதிரி ஏன் இந்த எக்ஸ்ப்ரஷன். நீ என் பொண்டாட்டி டீ” என,

தாமரையின் முகத்தில் தானாக சிரிப்பு வந்தது.. பின்பு குழந்தைகளுக்கு அவர்கள் கேட்டதை எல்லாமே வாங்கிக் கொடுத்தான்.

தாமரைக்கு எதுவும் வாங்கவில்லை. என்ன வேண்டும் என்று அவளிடம் கேட்டால், பிருந்தாக்கு மித்ராக்கு அஸ்வதிக்கு என்றுதான் லிஸ்ட் கொடுத்தாள். அவளுக்காக எதையும் அவளும் கேட்கவில்லை வாங்கவும் விடவில்லை.

இவன் வாங்கப் போனாலும் “இது வேண்டாம் அது வேண்டாம்..” என்றாள். சரி புடவையாவது எடுத்துக் கொடுக்கலாம் என்றால்.. எதுவும் பிடிக்கவில்லை என்றாள்.

வேண்டாம் என்பதற்காக சொல்கிறாளோ என்று ஆதவன் பார்க்க அப்படி எதுவும் அவளின் முகத்தில் இல்லை..

“சரி, நீயே ஒண்ணு எடு, அப்போதான் கிளம்புவோம்” என்று பொறுமையாக நிற்க.. மிட்டாய் ரோஸ் கலரில் ஒரு புடவை எடுத்தாள்..

கடுப்பானான் ஆதவன்.. பிருந்தாவே “அம்மா! இது நல்லாவே இல்லை! வைங்க!” என்று சொல்ல..

ம்கூம் அவள் வேறு எடுப்பதாகக் காணோம்.. அதையே திரும்பி திரும்பி இதற்கென்ன என்பது போல பார்த்தாள்..

Mallika Manivannan

“நீ கட்டுறது நீ பார்க்கறதுக்கு இல்லை! நான் பார்க்கறதுக்கு!” என்று ஆதவன் சொல்ல...

“நான் கட்டுறது இவர் பார்க்கிறதுக்காமா! அய்யோடா!” என்றபடி தாமரை ஒரு லுக் விட..

“என்ன உன்னோட மனசுல ஓடுது?” என்று ஆதவன் கேட்க..

“ஒண்ணுமில்லை!” என்று அவள் தலையசைத்த விதமே ஏதோ இருக்கிறது என்று சொல்ல..

நிறைய நேரமும் ஆகிவிட.. “அஸ்வதி தேடுவா!” என்றும் தாமரை ஞாபகப்படுத்தினாள்.

“அப்புறம் எடுக்கலாம் வா..” என்று அவளை அழைத்து வெளியேறினான்.

வீடு வந்து பின்பு குழலி கிளம்பும் வரை வீட்டில் இருந்தான். குழலி ஏகத்திற்கும் மிரட்டியிருக்க, அதன் பிறகு ஸ்ரீநிவாசன் வாயைத் திறக்கவில்லை.

“மச்சானை, இஷ்டத்துக்கும் மிரட்டி இருக்க போல! வாயே திறக்காம அலெர்ட்டா இருக்கார்” என்று குழலியிடம் கிண்டலாக வேறு சொல்ல செய்தான். ஆதவன் இப்படி குழலியிடம் இலகுவாக பேசியே வெகு காலம் ஆகியிருந்தது. எப்போதும் இறுக்கமாகவே இருப்பான்.

அந்த இலகு தன்மையை மாற விடாமல் குழலியும் பேச்சை வளர்த்தாள். “என்ன பண்ண? உன் தங்கச்சியாச்சே!” என்று அண்ணனிடம் சிரிப்போடு சொல்ல, அவளுக்கு எடுத்திருந்த புடவையை அவளிடம் கொடுத்தான்.

“ஹேய் அண்ணா! சூப்பரா இருக்கு..” என்று சொல்லி, “தாமரைக்கு எடுக்கலை”

Mallika Manivannan

“அவளுக்கா, பஞ்சு மிட்டாய் கலர்ல ஒரு புடவை எடுக்கறா! டென்ஷன் ஆகி கூட்டிட்டு வந்துட்டேன்”

“ஏன் அண்ணா? அது நல்லாதானே இருக்கும்!” என்று நக்கலாக குழலி கூற...

“நிஜமா அது நல்லாதான் இருந்தது! அவளுக்கும் நல்லாதான் இருக்கும்! ஆனா எனக்குப் பிடிக்கலை!” என்று ஆதவன் சொல்ல..

குழலியின் முகத்தில் மென் நகை.. இந்த ஒரு வருடமாகப் பார்த்த ஆதவனுக்கும் இப்போது பார்க்கும் ஆதவனுக்கும் பல வித்தியாசங்கள். ஏன்? எப்போதுமே இவ்வளவு பேசக்கூட மாட்டான்.

மனது மகிழ்ச்சியை உணர.. “அண்ணா நீ சந்தோஷமா இருக்கியா?” என்றாள்.

“சந்தோஷமா இருக்கேனா தெரியாது! ஆனா நிம்மதியா இருக்கேன்!” என்றான் மனதை மறையாமல்.

“நிம்மதி மட்டும் போதாது அண்ணா! நீயும் சந்தோஷமா இரு! அவளையும் சந்தோஷமா வெச்சிக்கோ..” என்றவள், கூடவே,

“அம்மா எப்போ வந்தாலும் மருமகளுங்களை பத்தி ரொம்ப குறை சொல்வாங்க... அவங்களுக்கு அவ்வளவு வேலை இருக்கும்.. தாமரை வந்தபிறகு எல்லாம் குறைஞ்சு போச்சு.. அதிகமா கால்வலி கூட சொல்லலை.. ஆனா ஒரே ஆளா மூணு குழந்தைங்களையும் பாத்துக்கிட்டு வீட்டு வேலை செஞ்சிகிட்டு.. கஷ்டம் அண்ணா!”

“இப்போ இன்னொரு குழந்தை வீட்டுக்கு வரப்போகுது.. சுமதி எப்பவுமே கொஞ்சம் ஸ்லோதான்! எல்லாம் தாமரை செய்யற மாதிரிதான் இருக்கும். அம்மாகிட்ட வீட்டை கூட்டி,

Mallika Manivannan

பாத்திரம் கழுவ ஒரு ஆள் போட சொல்லியிருக்கேன், போடலன்னா போட வை!” என்றவளின் குரலில் கண்டிப்பாக போட வேண்டும் என்ற கட்டளை இருந்தது.

“ம்! நானே யோசிச்சு இருக்கேன், எப்படி இத்தனை வேலை செய்யறான்னு! அம்மாகிட்ட சொல்றேன்!” என்று அண்ணன் வாக்குறுதி கொடுக்க..

அதன் பிறகே ஊருக்கு கிளம்பினாள். “எவ்வளவு நேரம் தான் பேசுவீங்க, பேசி முடிச்சாச்சா” என்று ஸ்ரீநிவாசன் நக்கலாக கேட்க,

“ஆமாம் குழலி! இன்னும் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு.. நீ நாளைக்கு போ! இல்லை ஒரு ரெண்டு நாள் கழிச்சு போ! இல்லை பேசி முடிச்சிட்டேன்னு நான் எப்போ சொல்றேனோ அப்போ போ! இவங்க மட்டும் இன்னைக்கு போகட்டும்!” என்று சீரியசாக சொல்ல,

“இல்லையில்லை! அவசரமில்லை! நான் இருந்து கூட்டிட்டு போறேன்!” என்று ஸ்ரீநிவாசன் அமர...

“எதுக்கு உங்களுக்கு இந்த வேண்டாத பேச்சு” என்றபடி கணவனைப் பார்த்தவள்.. “என்ன லந்தா? நான் மட்டும்தான் என் புருஷனை மிரட்டணும்! புரிஞ்சதா!” என்று ஆதவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் சொல்லி.. கிளம்பினாள்.

Mallika Manivannan

அண்ணன் தங்கை இருவருக்குமே புன்னகை.

“என்னவோ ரெண்டு பேரும் பேசறாங்க? சிரிக்கிறாங்க? இவர் இப்படி சிரிச்சு நான் பார்த்ததே இல்லையே” என்று தாமரை அவர்களை பார்த்தபடியே இருந்தாள்.

அவர்கள் கிளம்பியதும்.. திரும்பவும் பிருந்தா, மித்ரா, அஸ்வதி என்று மூவரையும் தாமரையுடன்அழைத்துக் கொண்டு போய் சேரனின் குழந்தையைப் பார்த்து வந்தான்.

குழந்தைகளுக்கு ஊட்டி.. கணவனுக்குப் பரிமாறி, அவளும் உண்டு, வேலைகளை முடித்து குழந்தைகளைப் படுக்க வைக்கும்போதே அவளும் உறங்கிவிட..

அவர்களைப் பார்த்தவாறே வெறும் தரையிலேயே படுத்துக் கொண்டான் ஆதவன்.

நாட்கள் வேகமாக ஓடின.... தாமரையின் அப்பாவும் அம்மாவும் குழந்தையைப் பார்க்க வந்தவர்கள் தாமரையிடம் பாஸ்புக் கொடுக்க.. வாங்கி வைத்துக் கொண்டாள். ஆனால் ஆதவனிடம் திரும்ப பணம் பற்றியெல்லாம் பேசவில்லை.

மித்ராவிற்கு ஃபீஸ் கட்டிவிட்டு வந்து “கட்டிவிட்டேன்” என்று மட்டும் சொன்னான்.

புது செங்கல் சூளைக்கான வேலைகள் வேகமாக நடந்தன.

ஏற்கனவே அப்பா இருந்த இடத்தில் இல்லாமல்.. வேறொரு இடத்தில் இருந்த அவர்களின் பூர்வீக இடத்திலேயே வேலைகள் நடந்தன. “பணமும் யாரிடமும் கேட்காதே! நான் கடனாக கொடுக்கிறேன்! திருப்பி கொடுத்து விடு!” என்று அப்பா சொல்லியிருக்க.. “சரி” என்று வாங்கியிருந்தான்.

அது அப்பாவிற்கும் அவனுக்கும் மட்டுமே தெரியும். அழகர் மனைவியிடம் சின்ன மகனிடம் என்று யாரிடமும் சொல்லவில்லை. யாரிடமும் எப்போதும் சொல்ல மாட்டேன் வாங்கிக் கொள் என்று அவர் வருந்தி வருந்தி சொல்லியிருக்க, அதன் பொருட்டே வாங்கியிருந்தான்.

தாமரையின் முகம் பார்த்து பேச பழகியிருந்தான். இதுதானே தாமரை வேண்டியது.. வாழ்க்கையே அவளுக்கு வண்ணமயமாகி விட்டது போன்ற உணர்வு.

எப்போதும் கடமையாக செய்யும் வேலைகளை இன்னும் ஈடுபாட்டுடன் செய்தாள்.

Mallika Manivannan

அவளுக்கு அது போதும்.. ஆனால் ஆதவனுக்கு தெரியும் அது மட்டும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் போதாது என்று.

முன்பிருந்ததற்கு அவன் தாமரையிடம் நெருங்கி இருந்தான்தான்.. சகஜமாக பேச பழக என்று. ஆனால் மனது நெருங்கியதா என்று எப்போதும் ஒரு யோசனை அவனுள், அதனால் உடல் நெருங்க முயலவேயில்லை.

தாமரைக்கு அந்த எண்ணம் எல்லாம் இருந்த மாதிரியே தெரியவில்லை. அவளுடைய எளிமையான சிந்தனைகளால், வாழ்க்கை முறைகளால், பாராமுகமாக இருந்த கணவன் பார்ப்பது, பேசுவது அதுவே அவளுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது.

ஆதவனின் சிந்தனைகள் எல்லாம் எப்போதும் பெண்களை ஒரு வட்டத்திற்குள் வைக்காது. இதில் மூன்று பெண் குழந்தைகள் இப்போது இருக்க.. தான் பெண்களுக்கு கொடுக்கும் மரியாதைதானே தன் மக்களுக்கு கிடைக்கும் என்ற சிந்தனைதான்.

"இது என்ன.. இவள், எனக்குப் பணி செய்யவே பிறந்தவள் போல, என்னையே எப்பொழுதும் கவனித்து, எனக்கு வேண்டியதை இப்படி பார்த்து பார்த்து செய்கிறாள்!" என்றுதான் தோன்றியது. பிடித்திருந்தபோதும், இது மட்டுமேயா தாமரையின் வாழ்க்கை என்றுதான் தோன்றியது.

ஆனால் வேறு சிந்தனைகள் எதுவுமின்றி கணவன் குழந்தைகள் என்றுதான் அவளின் சிந்தனைகள் இருந்தன.

## அத்தியாயம் பன்னிரெண்டு:

பிருந்தாவிற்கு விடுமுறை விட்டு, விடுமுறை முடிந்து மித்ராவும் அவளும் மீண்டும் பள்ளி செல்ல ஆரம்பித்து

Mallika Manivannan

இருந்தனர். அன்றுதான் செங்கல் சூளை முதல் வேலை ஆரம்பமாகும் நாள். சுகன்யாவின் பெயரைத்தான் அதற்கு வைத்திருந்தான். முன்தினம் தான் தாமரையிடம் பேசினான்.

“நான் சுகன்யா பெயரை வைக்கப் போறேன்” என்று சொல்லி விட்டவன், பின்பு அவசரமாக “வைக்கட்டுமா” என்று சம்மதம் கேட்டான். குழந்தைகள் எல்லாம் உறங்கியிருக்க.. தாமரை வருவதற்காக காத்திருந்து கேட்டான்.

அவனுக்கே மனதிற்குள் ஒரு உறுத்தல். சுகன்யா அவனுக்கு மிகவும் இன்றியமையாதவள், ஆனால் இல்லாதவளை நினைத்து நினைத்து இருப்பவளுக்கு நான் நியாயம் செய்யவில்லையோ என்று அவனுக்காய் மனதிற்குள் ஒரு உறுத்தல்.

தாமரை ஏதாவது சுணக்கம் காட்டினால் கூட அவனுக்கு அந்த உறுத்தல் இருக்காதோ என்னவோ.. ஆனால் எந்த சுணக்கமும் இல்லாமல் எல்லாவற்றையும் அவள் முக மலர்ச்சியோடு செய்ய.. ஆதவனுக்குதான் அவளைப் பார்க்கும் போதெல்லாம் ஏதோ குற்றம் செய்வது போல ஒரு தோற்றம்.

இப்போதெல்லாம் தன்னுடைய தோற்றத்தை வேறு கண்ணாடி முன் நின்று ஆராய்ந்தான். எனக்கும் அவளுக்கும் பதிமூன்று வயது வித்தியாசம். நான் வயதான மாதிரி ஆகி விட்டேனா. அவளுக்குப் பொருத்தமில்லையோ என்பது போல .. அவள் மிகவும் இளசாக இருக்க நான் முதிர்ந்து விட்டேனோ என்று கூட யோசனைகள் ஓடியது.

ஆம்! தாமரைக்கு இளமை தானே! ஓயாத உழைப்பு உடலை அதன் நெளிவு சுளிவுகளோடு, வயிறு நிறைய உண்டாலும் எந்த டயட்டும் இல்லாமலேயே கட்டுக் கோப்பாக வைத்திருந்தது.. நிறம் மாநிறம் என்றாலும் வெயில் படாத அவளின் உடல் அதன் மெருகோடு பளபளப்பாக இருக்கும். மிகுந்த முகலட்சணம் கூட அவளுக்கு. சில சமயம் இப்போது தாமரையை கவனித்துப் பார்ப்பதால் இந்த எண்ணங்கள்.

Mallika Manivannan

"நீ முதிரவெல்லாம் இல்லை" என்று அவனுக்கு யார் சொல்வது. ஆதவன் கட்டுக்கோப்பான அடுத்தவரை வசீகரிக்கும் தோற்றத்துடன் இருக்கும் இளைஞன். முப்பத்தி ஐந்து வயதை நெருங்கும் பல ஆண்களுக்கு சிறு தொந்தியாவது வந்துவிடும். ஆனால் அவனுக்கு அப்படி எதுவும் கிடையாது. அவனின் சிரிப்பற்ற இறுகிய முகம்தான் அவனின் இளமையை சற்று குறைத்துக் காட்டும்.

அவன் யோசனைகள் ஆரம்பிக்கும் பொழுதே..

"அவங்க பேரை வைங்க" என்றாள்.. அவனின் முக பாவனைகளை பார்த்து "நான் ஏதாவது நினைப்பனோன்னு நீங்க நினைக்க வேண்டாம், வைங்க!" என்றாள் இன்முகத்தோடு..

"தேங்க்யு" என்றான் மனதின் பாரம் குறைந்தவனாக...

"மித்ரா ஸ்கூல்ல நாளைக்கு வரச் சொல்லி ஸ்லிப் குடுத்து விட்டிருக்காங்க.. நாளைக்குப் போகணும்.. இந்த வேலைல போக முடியுமா"

"எத்தனை மணிக்கு?"

"மதியம்"

"காலையில இது முடிஞ்சுடும் போகலாம், அப்படி இல்லைன்னா கூட நீ போயிட்டு வா! ஆட்டோ சொல்றேன்" என்றான்.

"வேணாம்! நான் தனியா போகலை!"

"ஏன்?"

"அந்த மிஸ் வேணும்னே இங்கிலீஷ் சட்டுன்னு புரியாத பேரன்ட்ஸ் கிட்ட வேகமா பேசுவாங்க! அவங்க என்ன சொல்றாங்கன்னே எனக்குப் புரியாது! நீங்களே வாங்க.. நீங்க வந்தா தமிழ்ல பேசுவாங்க" என்றாள் கடுப்பாக.

Mallika Manivannan

“எதுக்கு இவ்வளவு கோபம்..?”

“பின்ன! உங்களுக்கு நல்லா பேச வரும்னு தெரிஞ்சவுடனே தமிழ்ல பேசறாங்க! ஆனா நான் போனா ஓரே இங்கிலீஷ்!”

“அது அப்படிதான்! தெரியாதவங்க கிட்டதான் எல்லோரும் பீட்டர் விடுவாங்க.. நீ நான் வராதபோது பிருந்தாவைக் கூட வெச்சிக்கோ.. அவ பேசினாலே அந்த மிஸ் வாயைத் திறக்க மாட்டாங்க.. அவளுக்கு யார்கிட்ட எப்படிப் பேசணும்னு தெரியும்.. எல்லோரையும் நல்லா ஹேண்டில் பண்ணுவா” என்றான் பெருமையாக.

ஆம்! இப்போதெல்லாம் தயக்கமில்லாத சகஜமான பேச்சு இருவரிடையும்.

அடுத்த நாள் பூஜைக்கு நெருங்கிய உறவினர்கள் பலரையும் அழைத்து இருந்தார் அழகர். “நம்ம மட்டும் போதும்பா” என்று அவன் சொன்னதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

அவன் வளர்த்த தொழில்.. ஆனால் தனியாகப் போன பிறகு மிகுந்த சிரமப்பட்ட போதும்.. அழகரிடம் ஒரு பைசா கேட்டதில்லை. சுகன்யா ஹாஸ்பிடலில் கோமாவில் இருந்த போது அவர் கொடுக்க முன்வந்தபோதும் வாங்கவேயில்லை. அந்த உறுத்தல் அவருக்கு எப்போதுமே உண்டு.

பெற்றவர்கள் சம்பாதிப்பது கல்லறையில் தங்களோடு புதைப்பதற்கா! இல்லையே! சந்ததிகளுக்குத் தானே!!

குழந்தைகளை அன்று பள்ளிக்கு அனுப்பவில்லை. காலையில் நான்கு மணிக்கே எழுந்து குழந்தைகளை எழுப்பிக் குளிக்க வைத்து அவர்களுக்கு பட்டுடுத்தி தயார் செய்திருந்தாள்.

சுகன்யாவின் நகைகள் எல்லாம் பேங்கில் அடமானத்தில் இருக்க... குழந்தைகளது மட்டும் வீட்டில் இருந்தது.. எடுத்துத்

Mallika Manivannan

தாமரையிடம் கொடுத்து “போட்டு விடு!” என்றான். முன்பே அவளிடம் கொடுத்திருக்க வேண்டும் ஞாபகத்திலேயே இல்லை. மித்ராவிற்கு என்ன இருக்கிறது என்றும் தெரியவில்லை. அதனால் கொடுத்து “மூணு பேருக்கும் போட்டு விடு” என்று பொதுவாக சொல்லி விட்டான். மித்ராவிடம் இருக்கிறதா இல்லையா என்று கேட்கவில்லை.

ஆனால் தாமரை அவளாக “மித்ராக்கு எதுவும் இல்லை... எங்க அப்பா எதுவும் பண்ணினதில்லை!” என்றாள்.

“பரவாயில்லை! நம்ம பண்ணலாம்! அப்புறம் வாங்கிக்கலாம்! இப்போ மூணு பேருக்கும் போட்டு விடு” என்றவன்... “நீயும் பட்டு கட்டிக்கோ.. நகை போட்டுக்கோ!” என்றான்.

எப்போதும் கழுத்தில் தாலிச் சங்கிலி, கையில் ஒற்றை வளவிகளில் மட்டுமே தாமரையைப் பார்த்திருக்கிறான். அவளிடம் என்ன இருக்கிறது என்றுகூடத் தெரியவில்லை.

வீட்டில் இருப்பது போல வெளியே கிளம்பும்போது வரக் கூடாது என்று பலமுறை சொல்லியிருந்ததால்.. சற்று கவனித்து அழகுபடுத்தி, பட்டுடுத்தி கிளம்பியிருந்தாள். தோற்றம் ஆதவனுக்கு மிகுந்த திருப்தி! ஆனால் அந்தப் புடவை கட்டு..

“என்ன புடவை கட்டியிருக்க? குழலி அன்னைக்கு சொல்லிக் குடுக்கலையா..”

“அண்ணி கட்டி விட்டாங்க! ஆனா சொல்லிக் குடுக்கலை” என.

“நல்ல விளக்கம்!” என்று சொல்லி, என்ன புத்திசாலித்தனம் என்பது போல ஒரு பாவனையைக் காட்டியவன், “கண் பார்த்தா! கை செய்யணும்!” என்று ஒரு அதட்டல் போட்டு .. பிள்ளைகள் எங்கே என்று பார்த்தான்.. ஹாலில் மரகத்துடன் இருந்தனர்.

Mallika Manivannan

அவர்களுக்கு சின்ன சின்ன திருத்தங்கள் செய்து கொண்டிருந்தார் மரகதம்.

ரூமின் கதவை தாளிட்டான்.. “நீ கட்டு என்ன தப்பு பண்றேன்னு சொல்றேன்” என்று சொல்ல...

“ஆங்!” என்று வாயைப் பிளந்து நின்றாள்.

“சீக்கிரம்! நேரம் ஆகுது!” என... மின்விசிறி தலைக்கு மேல் அவ்வளவு வேகமாக சுழன்று கொண்டிருந்த போதும் தாமரைக்கு வேர்க்க ஆரம்பித்தது.

“எதுக்கு இவ்வளவு டென்ஷன்! உன்னைதானே கட்ட சொன்னேன்! நான் கட்டி விடறேன்னா சொன்னேன்!” என்று அருகில் நெருங்க..

இன்னும் விழி விரித்து அவனைப் பார்த்து நின்றாள். “குழந்தைங்க கதவை தட்டப் போறாங்க! சீக்கிரம்!” என்றான் மீண்டும்.

“இதுவே.. இதுவே இருக்கட்டும்!” என்றாள் தடுமாறியபடி.

சரி! இதுவே இருக்கட்டும்! ஆனா இன்னும் கொஞ்சம் கீழ இறக்கு, இவ்வளவு மேல தூக்கிக் கட்டக் கூடாது!” என்றவன், அவள் இன்னும் அப்படியே நிற்பதைப் பார்த்து.

“இது வேலைக்கு ஆகாது” என நினைத்து, நெருங்கி இடுப்புக் கட்டில் கையை வைக்க.. ஆதவன் கை வைத்த இடம் சிலிர்த்தது, அந்த சிலிர்ப்பு உடல் முழுவதுமே பரவியது. அவனின் கையை இறுக்கமாக பிடித்தவள், “வேண்டாம்! வேண்டாம்! நானே கீழ இறக்கறேன்!” என்றாள் பதட்டமாக.

“சரி! இறக்கு!” என்று அவளின் முன் கையைக் கட்டி நிற்க,

Mallika Manivannan

அந்தப் பார்வையை, அந்த பாவனையை, அவளின் மனம் ரசிக்க முற்பட்டபோதும், “நீங்க போங்க! நான் பண்றேன்!” என்று கூச்சப்பட்டு நின்றாள்…

அதற்குள் “அம்மா” என்ற மித்ராவின் குரல் கேட்க..

இதுதான் சாக்கென்று “சின்னக்குட்டி கூப்பிடறா!” என்று சொல்லி அவனைக் கடந்து தாமரை செல்ல முற்பட.. மின்னல் வேகத்தில் அவளை அருகில் இழுத்தவன்.. அவளின் இடையைப் பற்றி அகல விடாமல் நிறுத்தினான்.

அந்தப் பிடி, அந்த இறுக்கம் ஏதோ செய்த போதும், “அச்சோ! நான் போகணும்! இல்லை கதவை உடைப்பா!” என

“எட்டு பத்து மாசத்துக்கு அப்புறம், முதல் முதலா கட்டிப் பிடிக்கறேன்! ஓடற நீ!” என அவன் சொல்லி முடிக்கக் கூட இல்லை,

“அம்மா!” எனக் கதவைத் தட்டும் ஓசை.

“வரேன் மித்து!” என்று குரல் கொடுக்கவும்.. குழந்தை அகன்றது.

அவளின் முகத்தில் அரும்பியிருந்த வேர்வைத் துளிகளை அவனின் தோளில் இருந்த துண்டு கொண்டு நிதானமாகத் துடைத்தான். புதிதாக ஆதவன் பார்க்கும் அந்தப் பார்வை அவளை ஏதோ செய்தது. ஒரு புதிய உணர்வு. அதே சமயம் அதை அனுபவிக்க முடியாத ஒரு தவிப்பு! தாமரையின் முகத்தில் அவ்வளவு பதட்டம், மீண்டும் கதவைத் தட்டி விடுவார்களோ என்று.

“விடுங்க போகணும்!” என,

“என்னடி பண்றேன்? உன்னை ஒண்ணுமே பண்ணலையே!” என்றான் பாவனையாக.

Mallika Manivannan

“நான் எப்போ பண்ண வேணாம் சொன்னேன்! இப்போ போகணும்!” என்று உடனடியாக சொன்னவள், சொன்னபிறகு அதன் அர்த்தம் புரிய,

“அச்சோ!” என்று நாக்கைக் கடித்து, இதழ்களை பேசாதே என்பது போல மூட..

“நீயேன் அதை சிரமப்படுத்துற! நான் படுத்துறேன்!” என்று ஆதவன் சொல்லி அவளைப் பார்த்த பார்வையில்.. அவளின் முகம் ரத்த நிறம் கொண்டது, இமைகள் தானாக நிலம் நோக்கியது, உதடுகளும் துடித்தனவோ!

“என்னமா சிவக்குறடி நீ!” என்றான் ரசனையாக.

அதற்குள் “அம்மா” என்ற பிருந்தாவின் குரல் ஒலிக்க,

“பெரிய குட்டியும் கூப்பிடறா” என்று சொல்லிக் கதவை கதவை பார்த்திருந்தாள்.

என்ன நினைத்தானோ.. வேகமாக அவளின் இதழில் அழுத்தமாக இதழொற்றி எடுத்து “போ” என..

தாமரைக்கு என்ன நடந்தது என்று கிரகிக்கவே சில நொடிகள் ஆனது, இப்போது ஆ என்று இன்னும் வாய் பிளந்து நின்றாள்.

அவளை சுற்றியிருந்த கைகளை விட்டு “போடி” என்றான் சன்ன சிரிப்போடு .

“நீயா! நீயா என்னிடம்?” என்பது போல ஒரு பாவனையை தாமரை தன் முகத்தினில் காட்ட..

“போடி! அப்புறம் மறுபடியும் பக்கத்துல இழுத்துக்குவேன்!” என மிரட்டினான்.

Mallika Manivannan

விட்டால் போதும் என்று ஓடிப் போய் கதவை திறந்தாள். மித்ரா உள்ளே வரவும்..

அவளைக் கையினில் தூக்கிக் கொண்டவன்.. “வாடா குட்டி! அம்மா ட்ரெஸ் பண்ணதும் வரலாம்!” என்று சொல்லி..

“ஒழுங்கா கவனமா கட்டலை.. அப்புறம் நான் கட்டிவிடுவேன்!” என்று சின்ன சிரிப்போடு சொல்ல..

அச்சச்சோ! இவருக்கு பேய் அடித்து விட்டதோ! என்பது மாதிரி ஒரு பார்வை பார்த்தாள். ஆனாலும் “கீழ இறக்கிக் கட்டுனா, எனக்கு கால் தட்டும்” என்று சொல்ல,

“அதுக்குதான் தட்டாத மாதிரி நான் கட்டிவிடறேன்னு சொல்றேன்” எனவும்,

“இல்லை! இல்லை! நானே கட்டிக்கறேன்” என்றாள் பதட்டமாக மீண்டும்.

“இன்னைக்கு நேரமாச்சுன்னு நீ தப்பிச்சிட்ட!” என்று சொல்லியபடி ஆதவன் செல்ல,

“அப்பாடா!” என்று பெரு மூச்சு விட்டவள், “என்ன இப்படி பார்வையிலேயே கொல்றாங்க!” என்று நினைத்தபடியே பார்த்து பார்த்து சில நிமிடங்கள் எடுத்துக் கட்டினாள். கதவை திறந்த நிமிடம், ஏதோ வேலை இருப்பது போல உள்ளே வந்த ஆதவன் “பரவாயில்லை! ஆனா சூப்பர் சொல்ல முடியாது! அப்புறம் பார்க்கலாம்!” என்று சொன்னவன்..

“நகை போட்டுக்கோ!” என்று சொல்ல.. அவளிடம் அதிகமில்லை இருந்த ஒன்றிரண்டைப் போட....

“நாலு பொண்ணுங்க இருக்காங்கடா தம்பி.. நிறைய வாங்கணும்!” என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

Mallika Manivannan

பின்னே அவனின் உறவுகள் அப்படித்தான் இருப்பர். அப்படி இருப்பவர்களுக்கு தான் அதிக மரியாதையும்.

ஊரோடு ஒத்து வாழ்பவன்தான் ஆதவன். நீ மதிச்சா எனக்கென்ன மதிக்காட்டி எனக்கென்ன என்று தோன்றினாலும், அப்படி வாழ்வதா வாழ்க்கை! யாருக்கும் எதற்கும் தான் எப்போதும் கீழே போகக் கூடாது என்ற எண்ணம் உண்டு.

சுமதி குழந்தை பிறந்திருப்பதால் அம்மா வீட்டில் இருக்க.. அவளை பிறகு அழைத்து வருவதாக சேரன் கூறியிருந்தான்.

ஐந்து மணிக்கு சேரன் பைக்கில் அப்பாவை அழைத்துச் செல்ல.. ஆதவன் அம்மா மற்றும் குடும்ப சகிதம் அம்பாசிடரில் சென்றான்.

இடத்திற்கு சென்றதுதான் தெரியும்.. பிறகு வேலைகள் இழுத்துக் கொண்டன.. ஒரு சிறிய ஹோமம் வேறு வளர்க்க இருந்தனர்.

ஐயர் அதற்கு எல்லாம் தயார் செய்திருக்க... ஆதவனும் தாமரையும்தான் அமர்ந்தனர்.. அஸ்வதி வந்து தாமரையின் மடியில் ஏற.. அதைப் பார்த்த மித்ராவும் வர.. அவளைத் தன் மடியில் இருத்திக் கொண்டவன், பிருந்தாவையும் பக்கத்தில் இருத்திக் கொண்டான்.

அப்போதுதான் உறவுகள் ஒன்றிரண்டு பேர் வர ஆரம்பித்தனர்.

“குழந்தைங்களுக்கு கண்ணு எரியப் போகுதுப்பா!” என்று அழகர் சொல்ல..

“ஹோமப் புகை நல்லதுதான் பா! இருக்கட்டும்!” என்று விட்டான் ஆதவன்.

Mallika Manivannan

ஒரு மணி நேரம் ஹோமம்.. அதன் பிறகு பூஜை… நடக்க நடக்க தாமரையின் பெற்றோர், அவளின் அக்கா.. குழலி.. மற்றும் அவர்களின் அண்ணன் தம்பிகள் என்று வர.. சுகன்யாவின் பெற்றோரும் உடன் பிறந்தவர்களும் கூட வந்தனர். சுகன்யாவின் பெற்றோர் என்பதை விட அழகருக்கும் தங்கை அல்லவா..

ஹோமமும் பூஜையும் சிறப்பாகவே நடந்தது. அதைவிட திருமணத்தின் போது ஆதவனும் அதை ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தில் இல்லை.. தாமரைக்கும் சஞ்சலமே.. இப்போது அந்த மாதிரி இருவருக்குமே இல்லை.

ஹோமத்தின் இறுதியில் மாலை மாற்றும்போது… இருவருக்குமே மிகுந்த மன நிறைவு.. அதிலும் தாமரை ஆதவனின் இந்த புதிய அவதாரத்தில், பார்வையில் தன் முகம் சிவக்காமல் யாரும் தன்னை கவனித்து விடாமல் இருக்க மிகுந்த பிரயத்தனம் செய்தாள் என்றே சொல்ல வேண்டும்.

அதுவரையிலும் அஸ்வதி தாமரையின் மடியை விட்டு அகலவில்லை, மித்ராவும் ஆதவனின் மடியை விட்டு எழவில்லை. கண்ணை துடைத்து துடைத்து விட்டாலும் குழந்தைகள் எழவில்லை.

Mallika Manivannan

பூஜைக்கான வேலைகள் அனைத்தையும் குழலியை செய்ய வைத்தான். தங்கையையும் விடவில்லை.

வேலை ஆரம்பிப்பதற்கான முதல் மண்ணை மட்டும் தாமரையைதான் எடுத்துப் போடச் செய்தான்.

தாமரையை விட்டு குழந்தைகள் அகலவே இல்லை. அவளாக அத்தைகிட்ட போ! பாட்டிகிட்ட போ! என்று அனுப்பிக் கொண்டிருந்தாள்.

அப்போதும் தாமரை மித்ராவைக் கொண்டு போய் அவளின் அப்பா மிலிட்டரி முருகேசனிடம் விட.. தன் தாத்தா பாட்டியிடம்

இல்லாமல் அவள் ஆதவனை நோக்கிப் போய் அவனின் கைகளில் ஏறிக் கொள்வாள். பெண்ணின் மலர்ந்த முகத்தைப் பார்த்து தாமரையின் அம்மாவிற்கு மிகுந்த திருப்தி. அங்கிருந்தவர்கள் மித்ராவிடம் எந்த வித்தியாசமும் காட்டவிலை. அவரின் மனம் நிறைந்தது.

அவர்களுக்கு மட்டுமல்ல பார்த்திருந்த சுகன்யாவின் பெற்றோருக்கும் அவ்வளவு திருப்தி. அம்மா இல்லாத குழந்தைகள்.. இரண்டாம் திருமணத்தினால் வரும் சித்திகள் நல்லவர்களாகப் பார்க்கப்படுவது இல்லை. ஆதவன் தன் பிள்ளைகளை நன்றாகப் பார்த்துக் கொள்வான் என்றாலும் வந்திருப்பவள் எப்படியோ என்ற சஞ்சலம் இருந்திருக்க அது முற்றிலும் மறைந்தது.

அதிலும் மரகதம் எப்போதும் சம்பிரதாயத்திற்குத் தான் சுகன்யாவின் அம்மாவிடம் பேசுவார். இன்று நன்றாக எந்த வித்தியாசமும் பாராட்டாமல் பேச.. "என்னவோ ஆகிடுச்சுங்க எங்க அண்ணிக்கு! என்னைத் தேடிவந்து பேசுது!" என்று அண்ணன் அழகரிடமும், தன் கணவரிடமும் நம்ப முடியாமல் சொல்லிக் கொண்டு இருந்தார்.

மொத்தத்தில் எல்லாம் சிறப்பாக நடந்தது.

**அத்தியாயம் பதிமூன்று :**

மதியம் எல்லோரையும் அனுப்பி.. பின்பு மித்ராவின் ஸ்கூல் சென்று அவளின் மிஸ்ஸைப் பார்த்த போது தாமரையின் வார்த்தைகள்தான் ஞாபகம் வர.. ஆதவன் முகம் முழுவதும் புன்னகை.

எப்போதும் கடுகடுவென்று இருக்கும் அவனின் முகம் இப்படி இருக்கவும் அந்த மிஸ் ஆச்சர்யமாகப் பார்க்க,

Mallika Manivannan

“அச்சோ! இவர் சிரிச்சு கிரிச்சு என்னை காட்டிக் குடுத்துடப் போறார், நம்ம புள்ள இங்கதானே படிக்கணும்!” என்று கலவரமாகப் பார்த்தாள்.

அதற்கு தகுந்தாற் போல அந்த மிஸ்ஸிடம் ஆங்கிலத்தில் சகஜமாக பேசிக் கொண்டே தாமரையைப் பார்க்க..

“அங்க பாருங்க! சிரிக்காதீங்க!” என்று கண்களால் தாமரை சொல்ல..

புருஷனும் பொண்டாட்டியும் ரொம்ப க்ளோஸ் போல என்றுதான் அந்த க்ஷணத்தில் மிஸ்ஸிற்கு தோன்றியது. பொறாமையாகவும் இருந்தது. தானும் தன் கணவரும் இப்படி பேசுகிறோமா என்று யோசனைகள் ஓட..

“miss did you hear what i say” என்று ஆதவன் அழுத்தி உச்சரித்த பிறகுதான் கவனத்திற்கு வந்தவள் “எஸ் sir” என்று பதில் கொடுத்து... வேறு சிலதைப் பேச..

வெளியே வந்த பொழுது “இப்படிப் பட்டிக்காடு மாதிரி என்னை பார்த்தா, அந்த மிஸ் அப்படித்தான் உன்கிட்ட பேசுவாங்க” என்று சொல்ல....

“நான் உங்களைப் பார்க்கலை, நீங்க பேசினதைத்தான் பார்த்தேன்!” என்றாள் ரோஷமாக தாமரை.

“ஏன்? நான் பார்க்கற மாதிரி இல்லையா?” என்று ஆதவன் கேட்க,

“அடி ஆத்தி! என்ன ஆச்சு இவருக்கு? ரெண்டு நாளா இப்படி ஆகிட்டாங்க!” என்று பார்த்தாள்.

“என்ன பார்க்கற? நான் பார்க்கற மாதிரி இல்லையான்னு கேட்டேன்!”

Mallika Manivannan

“அதுதான் பார்க்கிறேனே! அப்புறம் பார்க்கிற மாதிரி இல்லையான்னு கேட்டா?” என்று சின்ன சிரிப்போடு தாமரை சொல்ல..

ஆதவனின் கண்களுக்கு ஏனோ எப்போதும் இல்லாத அளவிற்கு தாமரை அழகாகத் தெரிந்தாள். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் அவ்வளவு பாராமுகமாக இருந்துவிட்டு எப்படி இப்படி மாறிப் போனேன்! என்ற சுய அலசலில் ஆதவன் இருக்க...

அதே யோசனைதான் தாமரைக்கும்! எப்படி என்னைப் பார்ப்பது கூட இல்லை என்று நான் நினைத்திருக்க எப்படி இப்படி மாறிப் போனார் எனத் தோன்றியது.

மீனாட்சி அம்மனுக்கு மனதார நன்றி உரைத்தவள்.. “கோயிலுக்குப் போயிட்டு போகலாமா” என்றாள் அவனிடம்.

“வேலையிருக்கு, சீக்கிரம் வெளிய வந்துடணும்” என்றான்.

“சரி” என்று சொல்லிக் குழந்தைகள் மூவருடன் கோவில் சென்று குடும்பமாக அம்மன் சன்னதியில் நின்றபோது.. “தொழில் நல்லபடியாக நடக்க வேண்டும், இவளோடான என் வாழ்க்கை சிறக்க வேண்டும், எந்த மன நெருடலும் இல்லாமல் என் வாழ்க்கை இருக்க வேண்டும்” என்று ஆதவன் வேண்ட...

அதே வேண்டுதல்தான் தாமரைக்கும்.. “என் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும்” என்று...

வெளியில் வந்ததும்... “நீ ஆட்டோல போயிடுவதானே. எனக்கு கொஞ்சம் அவசர வேலை” என்று அவர்களை ஆட்டோவில் ஏற்றி வேலையைப் பார்க்க கிளம்பியவன்.. அவர்கள் வீடு சேர்ந்ததும் சேர்ந்து விட்டார்களா என்று அழைத்துத் தெரிந்து கொண்டவன்...

Mallika Manivannan

மீண்டும் இரவு பத்து மணிக்குதான் அழைத்தான்... “வர இன்னும் நேரம் ஆகும், தாமரை நீ சாப்பிடு, நான் இங்கயே சாப்ட்டுடுவேன்!” என்று சொன்னவன் வீடு வந்த போது இரவு ஒன்றுக்கும் மேல்..

வந்தவனை ஹாலில் இருக்க வைத்து, அந்த நேரத்திலும் இளம் சூட்டில் பால் கொடுத்து அவன் குடித்த பிறகே, உறங்க செல்லுங்கள் என்றாள்.

“ஏதோ எனக்கே வேலை செய்யப் பிறந்த மாதிரி எப்படி இப்படி செய்யற.. எனக்குக் கஷ்டமா இருக்கு! செய்யாத!” என்றான்.

“நீங்க உழைக்கறது உங்களுக்கு மட்டுமா! எங்களுக்கும் தானே! அந்த எங்களுக்கும்ல நானும் இருக்கேன் தானே!”

“ஆனாலும் சமைக்கிற, குழந்தைங்களைப் பார்த்துக்குற, வேற எதுவும் நீ செய்யறது இல்லை... இது மட்டுமா உன் வாழ்க்கை!”

“இப்போதைக்கு இது போதும்! குழந்தைங்க நல்ல முறையில வளரணும், உலகத்திலேயே மிகவும் சிரமமான விஷயம் குழந்தை வளர்ப்புதான், அதுவும் மூணு பேரும் என் குழந்தைங்கதான், ஆனாலும் என் வயிற்றுல இருந்து வரல இல்லையா.. அதனால மத்த அம்மாங்க கொடுக்கறதை விட நான் இன்னும் அதிகமா கவனம் செலுத்தணும், இல்லை அவங்களுக்கு என் மேல அந்த பாசம் வராது. அதனாலதான் எப்பவும் அவங்க பின்னாடியே சுத்தறேன்” என்று சொல்ல,

ஆதவன் எதிர்பார்க்காத கோணம் இது...

“சின்ன வயசுல பெரிய படிப்பு படிக்கணும்.. பெரிய வேலைக்குப் போகணும்னு ஆசை. சூப்பரா படிப்பேன்னு சொல்ல முடியலைன்னாலும் சுமாரா படிப்பேன்! அண்ணாதான்

Mallika Manivannan

பெரியவன்! அதுக்கு அப்புறம் அக்கா... நான் அவங்களை விட ரொம்ப சின்னவ...

“அண்ணா நல்லா படிச்சான்... ஆர்மில கமாண்டோ!”

“நான் பிளஸ் டூ முடிக்கும் முன்னதான் அண்ணி இறந்தாங்க.. கொஞ்ச நாள்ல அண்ணா..” என்று சொல்லும் போதே கண்களில் நீர்.

“எதுக்கு இப்போ பழசு எல்லாம் நினைச்சிக்கிட்டு?” என்றான் ஆறுதலாக.

“யார்கிட்டயாவது எனக்கு சொல்லணும்! இதுவரைக்கும் யார்கிட்டயும் சொன்னதில்லை...”

“ஏதோ தீவிரவாத தாக்குதல் போல.. இவங்க கமாண்டோ அஞ்சு பேர் இருந்திருக்காங்க.. தீவிரவாதிங்க மாடியில.. அண்ணா எல்லோரையும் கீழ இருக்க வெச்சிட்டு, யாரையும் கூட வரவேண்டாம் சொல்லிட்டு தனியா போயிருக்கான். வர்றேன்னு சொன்னவங்களை பிடிவாதமா மறுத்து போயிருக்கான்”.

“அதனால மத்த கமாண்டோ எல்லோரும் தப்பிச்சிட்டாங்க.. ஆனா தீவிரவாதிங்களை சுட்டுட்டு, அந்தத் துப்பாக்கி சூட்டுல அவனும் செத்துப் போயிட்டான்” என்று சொல்ல சொல்ல அழுகையை அடக்க முடியவில்லை.

தேம்பிக் கொண்டே, “மாடி மேல ஏறுறதுக்கு முன்னாடி யார் ஃபோனையோ வாங்கி வீட்டுக்கு கூப்பிட்டான். நான்தான் எடுத்தேன்”.

“எடுத்தவுடனே நான் வருவனோ இல்லையோ தெரியாது தாமரை, மித்ரா இனிமே உன் பொண்ணு பார்த்துக்கோ, அவளை விட்டுடாத சொல்லி வெச்சிட்டான். எனக்கு ஒண்ணுமே ஓடலை... சாயந்தரம் அண்ணன் இறந்துட்டான்னு ஃபோன் வருது...”

Mallika Manivannan

“அப்பா அம்மா எல்லோரும் ஓய்ஞ்சு போயிட்டாங்க.. சில பேர் மித்ரா பிறந்த நேரம்தான் இப்படி ஆகிடுச்சுன்னு சொல்ல.. அதுக்கு அப்புறம் என்னால எங்க அப்பா அம்மாக்கிட்ட கூட மித்ராவை விட முடியலை.. யாரும் ஒரு சொல் அவளை சொல்லிடக் கூடாதுன்னு ரொம்ப கவனமா இருந்தேன்”

“பிளஸ் டூ முடிச்சப்போ அப்பாவும் அம்மாவும் என்னை மேலே படிக்க சொன்னாங்க.. எங்களுக்கு என்ன வயசா ஆகிடுச்சி.. நாங்க வளர்த்துக்கறோம் நீ படி சொன்னாங்க.. என்னால போக முடியலை.. என்னவோ அண்ணா பொறுப்பை என்கிட்டே கொடுத்த மாதிரிதான் எனக்கு எண்ணம். மித்ராவும் என்னை விட்டு யார் கிட்டயும் போக மாட்டா!”

“அம்மாக்கும் அப்பாக்கும் நான் படிக்காதது, அப்புறம் இப்படி ரெண்டாம் தாரமா கல்யாணம் செஞ்சிக்கிட்டது எல்லாம் ரொம்ப வருத்தம்”.

“இன்னைக்கு தான் அம்மா முகத்துல சிரிப்பே பார்த்தேன்! தேங்க்ஸ்!” என்றாள்.

அண்ணனுக்காக! அவனின் கடைசி வார்த்தைகளுக்காக! மித்ராவிற்காக தன்னுடைய வாழ்க்கை மொத்தத்தையும் மாற்றி அமைத்துக் கொண்டாள் என்று புரிந்தது.

எங்கோ ராணுவ வீரர்கள் தங்களின் உயிரை பணயம் வைப்பதால்தான் தாங்கள் எல்லாம் நிம்மதியாக இருக்கிறோம் என்பதுதானே உண்மை.. இந்த உண்மை எல்லோருக்கும் தெரியும்! ஆனால் எத்தனை பேர் இதனை நினைக்கக் கூட நேரம் இல்லாமல் சுற்றிக் கொண்டிருக்கிறோம்.

அதிலும் அவளின் அண்ணன் சாகும்போதும் கூட உடன் இருந்தவர்களைக் காப்பாற்றி இருக்கிறான்! சாவோம் என்று தெரிந்தே சென்றிருக்கிறான்! வீர வணக்கம் அவனுக்கு! அவன் தங்கை எப்படி இருப்பாள்!

Mallika Manivannan

என் மக்களையும் நான் இப்படித்தான் வளர்க்க வேண்டும் என்று தோன்றியது.

ஆதவனுக்கு மனதிற்கு அவ்வளவு நிறைவாய் இருந்தது தாமரையின் செயல். எல்லோரிடமும் இந்த குணம் பார்க்க முடியாதே. இவள் ஆகாயத் தாமரை! அபூர்வத் தாமரை!

“மொத்ததுல உங்க வீட்ல அவ்வளவு பிடிவாதமா இருந்தவ, இங்க எங்களுக்காக ரொம்ப அட்ஜஸ்ட் பண்ற. நான்தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும், நீ எங்க வாழ்க்கையில வந்ததுக்கு! நீ எனக்கு சொல்றியா!” என்றான்.

“சில வரன் அம்மா அப்பாக்கு பிடிச்ச மாதிரி வந்தது. மித்ராவைப் பார்த்துக்குவோம்னே வந்தாங்க! கூடவே மித்ரா கிட்ட எவ்வளவு டெபாசிட் இருக்கு. அவளுக்கு அவளோட அப்பா பென்ஷன் எவ்வளவு  வருது, அப்படியும் கேட்டாங்க, எனக்குப் பிடிக்கலை!”

“என்னை மட்டும் எப்படிப் பிடிச்சது...?”

“உங்க பேர்தான் முதல்ல.. தாமரைன்னு என்னோட பேர்க்கு மேட்ச் ஆச்சு.. அப்புறம் என்னைப் பார்க்க வந்தீங்க.. ரொம்ப வயசு வித்தியாசம் பார்த்துட்டு சின்ன பொண்ணு உன்னோட வாழ்க்கை வீணாகிடும் வேணாம் சொன்னிங்க.. என்னவோ அது எனக்கு மித்ராவை பார்த்துக்குவீங்கன்னு நம்பிக்கை கொடுத்துச்சு!”

“கூடவே உங்களுக்கு ரெண்டு சின்னப் பொண்ணுங்க.. உங்க பொண்ணு மாதிரி பார்த்துக்குவீங்கன்னு நம்பிக்கை.. வயசு வித்தியாசம் அதிகமானாலும் பார்க்க வயசுப் பசங்களை விட நல்லா இருந்தீங்க, அதான் ஓகே சொல்லிட்டேன்” என்று அவள் சொல்லும்போது முகத்தில் சிறு நாணம்.

“என்ன? நான் நல்லா இருக்கனா!”

Mallika Manivannan

“இல்லையா பின்ன?” என்று ஏதோ வேலையிருப்பவள் போல அந்த இடத்தை விட்டு அகல..

“ராத்திரி ஒண்ணரை மணிக்குக் கூட வேலை செய்வியா! உன் கடமை உணர்ச்சிக்கு ஒரு அளவு இல்லாம போச்சு! உட்கார்!” என்று அதட்டினான்.

“காலையில இருந்து சுத்திட்டே இருக்கீங்க, உங்களுக்குத் தூக்கம் வரும்” என்று சொல்ல,

“உனக்கு வருதா?” என்றவனின் பார்வையில் தலை தானாக இல்லை என்று ஆடியது.

“உட்கார்!” என்று அவன் அருகமர்த்த, அவன் மிக அருகில் இருக்கவும் நெளிந்தாள்.

“பைக்ல என்னோட உட்கார்ற தானே!”

“அது நீங்க முன்னாடிதானே பார்த்து உட்கார்ந்து இருக்கீங்க! என்னையா இப்படி கிட்டக்க பார்க்கறீங்க” என்று அவள் சொல்ல

தலையில் செல்லமாக அடித்துக் கொண்டவன், “உங்கண்ணன் புத்திசாலி.. மித்ராவை உன் பொண்ணாக்கிட்டான்.. இல்லை, நீ எப்போ குழந்தை பெக்கறது, ஆளும் நீயும், நெளிஞ்ச கொன்னுடுவேன்!” என்று இன்னும் நெருக்க,

“ம்க்கும்! என்னை நீங்க ஆறு மாசம் பார்க்கக்கூட இல்லை!” என்று சொல்லியே விட்டாள். பின்பு அச்சோ சொல்லியிருக்க வேண்டாமோ என்று நாக்கைக் கடிக்க....

“அதுதான் இதை தொந்தரவு பண்ணாதே, நான் தொந்தரவு பண்றேன்னு சொல்றேன் இல்லை” என்று சொல்லி அவளின் இதழ்களை வருட உடல் முழுவதும் சிலிர்த்தது தாமரைக்கு.

Mallika Manivannan

அவள் சொன்னதை தப்பாக எடுத்துக் கொண்டானோ என்று முகம் பார்க்க...

அப்படி எல்லாம் எதுவும் இருந்தது போல தெரியவில்லை. தாமரையின் உடலின் சிலிர்ப்பை கைகளும் உணர.. அவளை அடக்கமாக கைகளுக்குள் வைத்துக் கொண்டவன்.

“நான் சொல்றதை நீ சரியா புரிஞ்சுக்குவியா?” என்று சொல்லி அவளின் பதிலுக்குக் கூட காத்திருக்காமல் சொல்ல ஆரம்பித்தான்.

“சுகன்யா! சுகன்யாவை நான் ரொம்ப இஷ்டப்பட்டுக் கல்யாணம் பண்ணிகிட்டேன்.. எத்தனை கஷ்டங்கள் வந்த போதும், திடீர்ன்னு காய்ச்சல்னு அவ படுக்கையில விழுந்த போதும், கண் திறக்காம மூணு மாசம் முழுசா படுக்கையில இருந்த போதும்... அவ பிழைச்சிடுவான்னு தான் நினைச்சேன்.. அவ இல்லாம போன அன்னைக்கு என்னால அதை நம்பக் கூட முடியலை...” என்று சொல்லும்போதே குரல் கம்மியது.

“ஆனா அதை யோசிச்சிகிட்டு இருக்க முடியாதபடி அடுத்தடுத்து செய்ய வேண்டியதை செஞ்சுதானே ஆகணும், அவ காரியம் முடிஞ்ச உடனே என் குழந்தைங்க... அஸ்வதியாவது சின்னக் குழந்தை...”

“பிருந்தா பொறந்ததுல இருந்து ஒரு நாள் கூட அவங்கம்மாவை விட்டு இருந்தது இல்லை. அம்மா வேணும்னு அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினாக் கூடப் பரவாயில்லை.. கொஞ்ச நாள்தான் தடுமாறினா! அப்புறம் தேறிக்கிட்டா”,

“அப்புறம் இங்க வந்தோம்! யாராலயும் யாரோடையும் சட்டுன்னு ஒட்ட முடியலை.. நான் பிறந்து வளர்ந்து முப்பது வருஷமா வாழ்ந்த வீடு! ஆனா திரும்ப வந்தபோது எனக்கு ரொம்ப அன்னியமா தெரிஞ்சது!”

Mallika Manivannan

“இதுல குழந்தைங்களைப் பார்க்க முடியாதுன்னு என் கல்யாணத்துக்கு அவ்வளவு அவசரப்பட்டாங்க என் அம்மா.. எவ்வளவு சொல்லியும் கேட்கலை... யார் சொன்னாலும் எனக்குப் பண்ணிக்கிற ஐடியா இல்லை... ஆனா பிருந்தா சொன்னா அப்பா, பாப்பா நீங்க இல்லாதப்ப ரொம்ப அழறா... என்னால அவளைத் தூக்கிட்டே இருக்க முடியலை.... பாட்டியாலயும் முடியலை! பண்ணிக்கங்கன்னு. ஒரு எட்டு வயசு பொண்ணு சொல்றா.. அம்மா அவகிட்ட சொல்லிட்டே இருந்திருப்பாங்க போல!”

“நானே குழந்தைங்களைப் பார்த்துக்க முடியும்! சாப்பாடு மட்டும்னா பிரச்சினையில்லை, ஏதோ ஒரு வேலை, வீட்ல அதிக நேரம் இருக்குற மாதிரி செஞ்சுகூட சமாளிக்கலாம்”.

“ஆனா என் கடன்... ஊர்பட்ட கடன்.. முதல்ல தொழில்ல, அப்புறம் சுகன்யா ட்ரீட்மென்ட்க்கு, வேற வழியில்லை!”

“என்னை மாதிரி இருக்குறவங்களை பார்க்கச் சொன்னேன்.. குழந்தை இருக்குன்னுதான் சொன்னாங்க.. அதான் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்.. ஆனா வயசு வித்தியாசம் ரொம்ப இருக்கவும்தான் உன்னைப் பார்க்க வந்தேன்!”

“அப்போதான் உன் குழந்தை இல்லைன்னு தெரிஞ்சது! வேண்டாம் சொன்னேன் நீயும் கேட்கலை! வீட்லயும் கேட்கலை!”

“உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் மனசு முழுக்க குற்ற உணர்ச்சி. சே! நம்ம சுயநலத்துக்கு ஒரு சின்னப் பொண்ணைப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டேனேன்னு!”

“என்னோட நிலைமைல சுகன்யா இருந்தா கல்யாணம் செஞ்சிருப்பாளான்னு! கண்டிப்பா செஞ்சிருக்க மாட்டா..! நான் எதுக்கு செஞ்சிக்கிட்டேன்னு! தொழில் நஷ்டம்..! எப்படியோ சுத்திட்டு இருந்தேன்!”

Mallika Manivannan

“நீ ஒரு சின்ன முக சுளிப்பு கூட இல்லாம குழந்தைங்களை, வீட்டை எல்லாம் பார்த்துக்கிட்ட. திடீர்னு தோணிச்சு இப்படி மாடு மாதிரி அந்தப் பொண்ணு உழைக்குது, நீ என்ன பண்ற.. யார்கிட்ட பயந்து ஒளியறன்னு. கொஞ்ச நாளா மனசுக்குள்ள ஓடிச்சு.. அப்புறம் கொஞ்சம் பேச ஆரம்பிச்சேன்.. இதுல எங்கம்மா பண்ணினது இன்னும் உறுத்திச்சு.. அப்புறம் அப்படி அப்படியே ஆகி, இப்படி ஆகிடுச்சு!” என்று இன்னும் இறுக்கி அவளைப் பிடித்தான்..

ஆதவன் முற்றிலுமாக இளகியிருக்க.. மனதிலும் ஒரு சுகம்! உடலிலும் ஒரு சுகம்!

“மறுபடியும் என்னோட வீட்டை அமைச்சுக் கொடுத்ததுக்கு தேங்க்ஸ்!” என்றான்.

அவனின் மனநிலை புரிந்தவளாக தாமரையும் எதுவும் பேசவில்லை. சற்று நேரம் அப்படியே அமர்ந்திருந்தான்.

“உனக்கு எதுவும் மனக்கஷ்டம் இல்லையே!” என்றான் திடீரென்று.

“இல்லை! இல்லவேயில்லை!.. எனக்கு உங்களோடான இந்த வாழ்க்கை ரொம்ப பிடிச்சிருக்கு!” என்றாள்.

“ஆனா எனக்கு இது பத்தாது! உனக்கு இன்னும் ரொம்ப பிடிக்க வைக்கணும்!” என்று சரசமாக ஆதவன் பார்க்க..

“பிடிக்க வைப்பீங்களாம்! வாங்க! இப்போ மணி ரெண்டு.. தூங்கலாம்!” என,

“தூங்கியே ஆகணுமா!”

“கண்டிப்பா! அஞ்சு மணிக்கு டாண்னு அஸ்வதி எழுந்துக்குவா.. காலம் இன்னும் ரொம்ப தூரம் இருக்கு.. எனக்கு

Mallika Manivannan

இப்போதைக்கு எந்த வருத்தமும் இல்லை, வாங்க!" என்று அழைத்துச் சென்றாள்.

சொன்னபடி ஐந்து மணிக்கு அஸ்வதி எழுந்து கொள்ள.. தாமரையின் அன்றைய தினத்தின் ஓட்டம் ஆரம்பமானது.

பிருந்தா பள்ளி செல்வதற்குதான் ஆதவனை எழுப்பினாள். அவனின் ஓட்டமும் அதோடு ஆரம்பமானது.. வாழ்க்கை அதனின் ஏற்ற இறக்கங்களோடு சென்றாலும், வானவில்லாய் அதன் வர்ணங்களை காட்டியது.

ஒரு இனிய மழைக்கால இரவில் சாரலாய்.. அவர்கள் தாம்பத்தியமும் துவங்க... தாமரையின் இரவு நேர காத்திருப்பு, இனிய நினைவுகளோடு சுகமுள்ளதாகவும் ஆகியது.

அன்றும் நேரத்தைப் பார்ப்பதும், இன்னும் அவன் வரவில்லையே என்று பார்ப்பதுமாக எஃப் எம் மில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்க.. ஆதவனின் புல்லட்டின் ஹாரன் ஒலிக்க.. வேகமாக சென்று கதவைத் திறந்தாள்.

எல்லாம் பூட்டி சரி பார்த்து.. இருவரும் உள்ளே வர... பார்வை குழந்தைகளின் மீது படர.. மூவரும் நல்ல உறக்கத்தில். அஸ்வதி மித்ரா மேல் கால் போட்டிருக்க... மித்ரா பிருந்தாவை அணைத்துப் பிடித்து இருந்தாள்.

எஃப் எம் மில் ஒரு பாடல் முடிந்து அடுத்த பாடல் ஆரம்பித்தது.

**ஒரு வானவில் போலே**
**என் வாழ்விலே வந்தாய்**
**உன் பார்வையால் எனை வென்றாய்**
**என் உயிரிலே நீ கலந்தாய்!!!**

என்று ஓட..

Mallika Manivannan

இரவின் நிசப்தத்தில் அந்த இசை இனிமையைக் கொடுக்க, அந்தப் பாடலின் வரிகளைக் கொண்டு ஆதவன் தாமரையைப் பார்க்க..

விடியலில் ஆதவனின் ஒளிபட்டு மலரும் தாமரைப் பூவைப் போல.. ஆண்மகனான ஆதவனின் பார்வையில் முகம் மலர்ந்தாள் பெண்ணான தாமரை.

( நிறைவுற்றது )

Mallika Manivannan